
கவிஞர்

# கண்ணதாசன்



# சிவப்புக்கல் மூக்குத்தி

கண்ணதாசன் பதிப்பகம்

கவிஞர் கண்ணதாசன் சிவப்புக்கல் மூக்குத்தி



கதாபதி

ISBN 978-81-8402-030-

CPL 693801

894.8113
KAN

# சிவப்புக்கல் மூக்குத்தி

67
PBF

கவிஞர் கண்ணதாசன்

Connemara (State & Central) Library
15 JUL 2010
Received
Chennai 600 008

கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
போன் : 24332682

Connemara (State & Central) Library
15 JUL 2010
Received

## சின்முத்திரை

பாட்டெழுத இசைக் குழுவினரின் மத்தியில் அமர்ந்தாலும் சரி; கவிதை, கதை, கட்டுரை எழுத தனிமையில் அமர்ந்தாலும் சரி; கவியரசர் புறச்சூழல்களையும் தன்னையுமே மறந்து போவார் அவ்வேளைகளில்.

எந்தச் சூழலுக்கு எழுத வேண்டுமோ அந்தச் சூழலில் ஆட்பட்டு கதாபாத்திரமாகவே மாறி விடுவார்.

அட்டணைக் காலிட்டு, வலது கரத்தை உயர்த்தி சின்முத்திரை பிடித்தவாறு கவியரசர் திருவாய் மலர்ந்து மளமளவென்று சொல்லத் தொடங்கினால், அந்த வேகம் காண்போரை மலைக்கச் செய்யும். எழுதி மனப்பாடம் செய்து கொண்டு ஒப்புவிக்கிறாரோ என்று எண்ண வைக்கும். இது எப்படிச் சாத்தியம் என்று வியக்கத் தோன்றும்.

ஏன் அவரேகூட சில சமயங்களில் பிரமிப்படைந்திருக்கிறார்.

இது குறித்து அவரிடம் சிலர் வினவியபோது, ''இது தான் கல்லாதான் பெற்ற கருந்தனம்'' என்று பணிவோடும் மிகுந்த பரவசத்தோடும் பதிலிறுத்தார்.

''எட்டாவது வகுப்புக் கல்வியறிவே உள்ள என்னால் இவ்வளவு எழுதிக் குவிக்க முடிகிறது, பேரும் புகழும் பெற முடிகிறதென்றால், அதற்குக் காரணம் என் அன்னை மலையரசிதான். நான் எதை எழுதுகிறபோதும் அதை நான் எழுதுவதாக எனக்குத் தோன்றுவதில்லை. மாறாக ஒரு சக்தி என் உள்ளிருந்து என்னை இயக்குவதாகவே உணருகிறேன். அந்த உள்ளொளியே அன்னை மலையரசி'' என்றார்.

இந்த வாக்குமூலமே சத்தியமாகும்.

'சிவப்புக்கல் மூக்குத்தி' நவீனத்தை எழுத கவியரசர் எடுத்துக் கொண்ட கால அவகாசம் ஆறு மணி நேரமே.

கவியரசர் சொல்லும் வேகத்திற்கு நாம் ஈடு கொடுத்து எழுதினால் ஒரு மணி நேரத்தில் முழுத்தாளில் இருபது பக்கங்களில் இருந்து முப்பது பக்கங்கள் வரை எழுதிவிட லாம். கவிதையாக இருந்தால் இருபது கவிதைகள்.

இவ்வளவு வேகமாகச் சொல்லுகின்றபோது கூட கருத் துச் சிதைவோ, மொழித் தடங்கலோ ஏற்பட்டு நான் கண்டதில்லை. ஒன்றன்பின் ஒன்றாக, அலை எழுந்து துரத்து வதுபோல் உவமையோடும், எதுகை மோனையோடும் கவிய ரசரது மொழியாளுமை கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருக்கும்.

கற்றார்க்கும். கல்லார்க்கும் களிப்பாகும் தேனைப் போல் இந்த நாவலிலும் தன் கருத்துகளையும், கவிதை நயங்களை யும் முத்திரையாகப் பதித்திருக்கிறார் கவியரசர்.

கண்ணதாசன் இலக்கிய இதழின் மாத வெளியீடாக வந்த 'சிவப்புக்கல் மூக்குத்தி' வந்த சுருக்கோடு மறுபதிப்பும் கண்டது. திரைப்படமாகவும் வந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு கவியரசர் அமரத்துவம் எய்திய எட்டாவது ஆண்டை நினைவு கூர மீண்டும் வருகிறது.

சென்னை — இராம.கண்ணப்பன்
7-10-88

Connemara (State Central) Library
15 JUL 2010
Received

# சிவப்புக்கல் மூக்குத்தி

ஜானகி: வாக்கு மூலம் : 1

ஒவ்வொருவரும் தங்கள் குடும்ப வரலாற்றை எழுதப் புகுந்தால், நாட்டுக்குப் பல இராமாயணங்கள் கிடைக்கும்.

கற்பனை வளம் மிக்க கம்பன் எழுதியதாலேயே ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் கதைக்கு ஒரு தனி மரியாதை எழுந்தது.

அப்படிக் கற்பனை உள்ளவர்கள் யாரேனும் இருந்தால், அவர்கள் எழுதட்டுமே என்றுதான் மற்றும் ஒரு ஜானகி தன் கதையைத் துவங்குகிறாள்.

கேளுங்கள்:

நானும் நல்ல இடத்தில் பிறந்தவள்தான். நல்ல இடம் என்றால், எங்கள் கிராமத்திலே, லட்சக்கணக்கில் பணம் வைத்திருப்பவர்கள் என்று அர்த்தமல்ல. தாய், தகப்பன், பாட்டன், பாட்டி எல்லாருமே உத்தமமாக வாழ்ந்தவர்கள் என்று அர்த்தம்.

என் தாய் ஒரு மகாலெட்சுமி.

ஸ்ரீதேவிக்கு மூதேவியா மகளாகப் பிறப்பாள்?

மூத்த பெண்ணாக நான் பிறந்தேன். எடுத்த எடுப்பில் பெண்ணைப் பெற்று விட்டாளே என்று, என் தந்தையைப் பெற்ற பாட்டிக்குப் பெரும் கோபமாம்.

பிரசவித்த என் தாயார்க்கு மாமியார் வந்துதான் மருந்து எடுத்துக் கொடுக்க வேண்டுமாம்; அந்த மருந்தைக் கொடுக்கக் கூட என் பாட்டி மறுத்துவிட்டார்களாம்.

அவர்களும் பெண்தானே! ஆண் பிள்ளை பிறந்தா லென்ன அள்ளியா கொடுக்கப் போகிறது?

ஆண் அரசாளுவானாம்; பெண் பீடையாம்!

நான் பிறந்தவுடனேயே என் பாட்டிக்குப் பீடையாகத் தெரிந்ததில் ஆச்சரியமில்லை.

அவர்கள் அதிருஷ்டமோ, என் தாயைப் பிடித்த துரதிருஷ் டமோ அடுத்தடுத்து மேலும் மூன்று பெண் குழந்தைகளே பிறந்தன.

'இவள் வயிறெல்லாம் பெண்ணாகவே இருக்கிறது' என்று அலுத்துக் கொண்ட என் பாட்டி, என் தாயையே ஒரு பீடை என்று கூறி விட்டார்களாம். அதற்காக தந்தை எங்களைக் கைவிடவில்லை.

தாயிடம் நான் பால் குடித்தேன் என்பதைத் தவிர, தந்தையின் தோள்களிலேயே வளர்ந்தேன்.

ஆனால் மூன்று வயதிலிருந்தே ஒரு முழுமை பெற்ற பெண்ணின் நாணமும், அச்சமும் என்னை ஆட்கொள்ளத் தொடங்கின.

ஆண் பிள்ளைகளோடு விளையாட மாட்டேன். அவர்கள் தொட்ட மிட்டாயைத் தொடமாட்டேன். சிறுவர்கள் இருக் கும் போதுகூட என்னைக் குளிப்பாட்ட ஒப்புக்கொள்ள மாட்டேன்.

அந்த வயதிலேயே எப்படி இப்படி என்கிறீர்களா?

அது என் தாய் எடுத்த எடுப்பிலேயே கொடுத்த சீர்வரிசை.



தொட்டிலில் தொடங்கி, என் கணவரின் கட்டிலுக்கு வரும்வரை என் தாய் முகத்தைத் தவிர வேறு முகத்தை நான் பார்த்தது கிடையாது.

'ஜானகி பொல்லாத பெண்' என்பார்கள் சிலர். 'நெருப்பு' என்பார்கள் சிலர். 'அவளிடம் பேச்சுக் கொடுக்காதீர்கள்' என்று, தங்கள் பிள்ளைகளை எச்சரிப்பார்கள் பலர்.

பால் வாங்கப் போனால் அந்தப் பாலை மட்டும் தான் பார்ப்பேன். தண்ணீர் எடுக்கப் போனால், குடம் தெரியும்.

அப்படியும் கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்து விட்டேன்.

அன்றைய எட்டாம் வகுப்பு இன்றைய பட்டப் படிப்பு கள் கூட எட்ட முடியாத படிப்பு. தமிழ் இலக்கணம் முழுவதும் தெரிந்து விடும். ஆங்கில அறிவும் ஓரளவுக்கு வந்து விடும்.

வயது பதினாறு — நான் ருதுவாகும் போது.

பதினாறு வயது என்றாலே பளபளப்பாகத்தானே இருக் கும். அதிலும் வயது வந்த இளைஞர்களுக்குக் கொஞ்சம் பரபரப்பாகவும் இருக்கும்.

கட்டிக் கொள்ளப் பலர் முன் வந்தார்கள். ஆனால் கொட்டிக் கொடுக்க என் தாய் தந்தையரிடம் பெரும் பணம் இல்லை.

''பெண்ணைப் பார்; பிடித்தால் கட்டிக்கொள். நாங்கள் போடுவதைத்தான் போடுவோம்'' என்று கூறி விட்டார்கள்.

அழகையும் பண்பாட்டையும் பார்த்து வரக் கூடியவர்கள் உலகத்தில் இல்லாமலா போனார்கள்!

அப்படி ஒருவர் வந்தார். அவரது பெயரை நான் சொல்லக் கூடாது. இது அப்போது நடந்த நிகழ்ச்சியாகையால் ரகசியமாகச் சொல்கிறேன். அவர் பெயர் சுரேந்திரன்.

பெண் பார்க்க வந்தபோது பெற்றோருடனேயே வந்தார். அவர் என்னையும் பார்த்தார்; என் கண்ணையும் பார்த்தார்.

எங்கள் வீட்டில் இருக்கும்போதே, என் காது கேட்கவே, ''எனக்கு இந்தப் பெண்தான் வேண்டும்'' என்று சொல்லிவிட்டார். அதனால் சீர்வரிசைகளைப் பற்றிய தகராறு எழவில்லை.

''போடுவதைப் போடுங்கள்'' என்று சொல்லிப் பேசி முடித்தார்கள், மாப்பிள்ளை வீட்டார்.

கல்யாணம் நன்றாகவே நடந்தது. மாப்பிள்ளை வீட்டாரே எனக்கு வைரத்தோடு போட்டார்கள். எனக்கு மாங்கல்யமும் அவர்களே செய்து கொண்டு வந்திருந்தார்கள்.

மாங்கல்யம் மாப்பிள்ளை வீட்டார் செய்வது வழக்கம் தானென்றாலும், அவர்கள் பெண்ணுக்கு வைரத்தோடு போடுவது அதிசயம்.

'பிள்ளைக்கு வைரத்தில் என்ன போடுகிறீர்கள்?' என்று கேட்கின்ற ஒரு சமூகத்தில், பெண்ணுக்கு அவர்களே நகை போடுவது அதிசயமில்லையா?

மாப்பிளைக்கு சொந்த ஊர் மாயூரம் என்றாலும், ஒரு தலைமுறையாகக் குடியிருப்பது சென்னையில் தான். நான் இருந்தது திருக்கடையூரில், அபிராமி சந்நிதியில். திருமணம் நடந்ததும் அங்கேதான்.

முதற் கல்யாணம் முழு மரியாதையுடன் நடந்து விட்டது என்பதிலே என் தாயாருக்குப் பரம திருப்தி.

மற்ற தங்கைகளெல்லாம் வயதுக்கு வராமல் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள்.



திருமணம் முடிந்த அன்றே, இரவு பாசஞ்சர் வண்டியில் நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம். இருவர் மட்டுமே இருக்கக் கூடிய முதல் வகுப்பு அறை ஒன்றை எங்களுக்கு ஒதுக்கி இருந்தார்கள். எங்கள் சாந்தி முகூர்த்தத்தை ரயிலிலேயே நடத்த வேண்டும் என்று நினைத்தார்களோ என்னவோ, அந்த 'கூபே' போட்டிருந்தார்கள்.

சம்பிரதாயமாக வீட்டிலே சாந்தி முகூர்த்தம் நடத்தி விட்டுத்தான், இருவரையும் தனியாக அனுமதிக்க வேண்டும் என்பது பெரியவர்களுக்குத் தெரியாதா?

நானும் 'ஊருக்குப் போகிறோம்' என்று எண்ணித்தான் பெட்டியில் அமர்ந்தேனே தவிர, உறவு அங்கு தொடங்கும் என்று நான் கருதியதில்லை.

தனி அறை, திருமணமாகி விட்ட நிலை; மணவாளன் கையைத் தொட்டால் மறுக்கவா முடியும்?

கட்டுப்படாதவள், அகங்காரி, பிடிவாதக்காரி, திமிர் பிடித்தவள் என்றெல்லாம் முதல் நாளிலேயே முத்திரை குத்திக் கொண்டு விட்டால், ஆயுள் வரை அது கணவன் மனதை விட்டு அழியாதே?

சுவாமியை பூஜை செய்துவிட்டு, ஆகி வந்த இடத்தில் தான் சாந்தி நடத்த வேண்டும். - கிராமத்துப் பழக்க வழக்கங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 'இல்லை என்றால் வாழ்க்கை தப்பிவிடும்' என்பார்கள்.

இருந்தும், ''நாளை ஊருக்குப்போயி...'' என்று கூறி நான் மெதுவாக இழுத்தேன்.

''அதுவரை எனக்கு தூக்கம் வராது'' என்று சொல்லி விட்டார் அவர்.

என் அழகிலும், பண்பாட்டிலும் அவருக்கிருந்த பெரும் மதிப்பையும், வெறி உணர்ச்சியையும் கண்டு நான் பணிந்தேன்.

உடல் உறவு பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே பயமும் கூச்சமும் அதிகமாக இருந்தன.

என் மேனியில் சில வேடிக்கைகளை அவர் செய்த போது, இவையெல்லாம் தேவைதானா என்று தோன்றிற்று.

மிகுந்த கூச்சத்துக்கிடையிலும் ஒரு சுகமும் இருந்தது.

உறவு என்பது இதுதான் என்று நான் எண்ணிக் கொண்டி ருந்தபோது, அவர் உடலுறவின் கடைசி ரகசியத்தையும் விவரிக்கத் தொடங்கினார்.

எனக்கு உடம்பெல்லாம் ஒரே வலி. அதே நேரத்தில் திடீரென்று ரயில் ஓர் ஆட்டம் ஆடி நின்றது.

நான் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

என் மாங்கல்யத்தின் நடுவில் இருந்த சிவப்புக்கல்லைக் காணவில்லை.

அவர் மெதுவாக ஜன்னலைத் திறந்து வெளியில் பார்த் தார். ரயில் ஒரு காட்டுக்குள் நின்று கொண்டிருந்தது.

ஏதோ ஒரு பெட்டியில் இருந்து, ''ஐயோ, ஐயோ!'' என்று பெண்கள் அலறுகின்ற சத்தம் கேட்டது.

வெளியில் விழுந்த பெட்டி வெளிச்சத்தின் மூலம், நாலைந்து பெண்கள் இறங்கி ஓடுவதையும் காணமுடிந்தது.

''ஐயோ! என் கண்ணா! ராஜா!'' என்று ஒரு பெண் அலறும் குரல் கேட்டது.

ரயில் பின்னுக்கு நகர்ந்தது.

ஒரு மரத்தோரமாக விழுந்து கிடந்த குழந்தையை ஒரு பெண் தூக்கிக் கொண்டு கதறுவது தெரிந்தது.



''சங்கிலியை இழுத்துத்தான் ரயில் நின்றிருக்கிறது'' என்றார் அவர்.

ஆம். ஒரு தாயின் தலைக்குழந்தை ஓடுகிற ரயிலில் இருந்து விழுந்து இறந்து விட்டது.

இங்கே மாங்கல்யத்தில் ஒரு சிவப்புக் கல்லைக் காணோம்; அங்கே ஒரு குழந்தையின் மரணம்.

இறைவா! என்ன நடக்கப் போகிறதோ என்று நான் பயந்தேன்.

நான் சிற்றூரில் பிறந்து வளர்ந்தவள். எங்கள் ஊர் மக்கள், தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். சகுனங்களை நம்புவார்கள். கால் தடுக்கினால் கூட காரணத்தைத் தேடி மண்டையை உடைத்துக் கொள்வார்கள்.

என் தாயைத் திருமணம் செய்து அழைத்து வரும் போதுகூட அம்மன் கோவில் திருவிழாவில் அம்மன் ஊர்வ லம் எதிரே வந்ததாம். அதன் விளைவாகத்தான் நாங்கள் பெண் குழந்தைகளாகவே பிறந்தோமாம்.

ஆகவேதான் திருமண வீடுகளில் விளக்கு அணைந்து விடாமல், பால் கொட்டி விடாமல், பூக்கள் வாடிவிடாமல் தாலி கட்டும்போது தாலி தவறி விடாமல் பார்த்துக் கொள்வார்கள்.

'என்ன அபசகுனமோ' என்று நான் அஞ்சிக்கொண்டே இருந்தேன்.

''உடம்பு வலியா...'' என்று கேட்டார் அவர்.

''இல்லை ஏதோ அபசகுனம்'' என்று நான் கண்ணீர் வடித்தேன். தாலியில் இருந்த சிவப்புக் கல்லைக் காணோம் என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

அவர் அந்த இடம் முழுவதும் தேடிப் பார்த்தார்.

நம்மூர் ரயில் வண்டிகளில் என்ன பளிங்குத் தரையா போட்டிருக்கிறார்கள்? அதுவும் நாங்கள் இருந்த பெட்டியில், கீழே பார்த்தால் தண்டவாளம் தெரிந்தது.

சிவப்புக் கல் போனது போனதுதான்.

ரயில் சென்னை வந்து சேர்ந்தது.

ரயிலை விட்டு இறங்கியதும் முதன்முதலாக எதிர்ப்பட்டு என்னைக் கட்டித் தழுவி உச்சி முகர்ந்து வரவேற்றார் ஓர் நடுத்தர வயது அம்மையார்.

நான் காரில் வரும்போது அவரிடம் கேட்டேன், ''அது யார்?'' என்று.

''அவர்தான் என் அத்தை. பாவம் வெகு நாட்களாகப் பிள்ளை இல்லை'' என்றார் அவர்.

என்னுடைய பெற்றோரும் அவர்களுடைய பெற்றோரும் எங்களுடன் வீடு வந்து சேர்ந்தார்கள்.

எங்களை இரண்டு பெண்களும் ஒரு நடுத்தர வயதுக்காரரும் வரவேற்றார்கள்.

ஒரு பெண்ணுக்கு சுமார் முப்பது வயதிருக்கும். இன்னொரு பெண்ணுக்கு இருபது வயதிருக்கும்.

''இவர்கள் யார்?'' என்று கேட்டேன். உறவினர்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டாமா, அதற்காக.

''இவர்கள் நேற்று நம் திருமணத்திற்கு வந்து விட்டு நம்மை வரவேற்பதற்காக முன்கூட்டியே காரில் வந்து விட்டார்கள். அவர் என் சித்தப்பா. அவர்கள் அவருடைய மனைவிமார்கள். அவருக்கு இரண்டு தாரம்!'' என்றார் அவர்.

பிறகு தன் உறவினர்கள் அனைவரையும் அறிமுகப் படுத்தி வைத்தார்.



மாலையில் என் தாயார் என்னிடம் வந்து ''அம்மா, ஒன்பது மணியைப்போல் அந்த அறையிலே போய் தனியா இரு'' என்றார்.

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'இது வெற்றிகரமான இரண்டாவது நாள்' என்று நான் சொல்ல முடியுமா?

என் தாய்க்குக் காளிதேவியின் மீது பக்தி அதிகம் உண்டு. எந்த ஊருக்குப், போனாலும் அங்கே காளிகோவில் இருக்கிறதா என்று தேடுவார். ஆகவே, 'காளிக்குப் பூஜை செய்து விட்டுப் போனால் முதல் நாள் நடந்த தவறு மன்னிக்கப்பட்டு விடும்' என்று நான் கருதி, அவரிடம், ''காளியம்மா படம் இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

அவர் ஏதேதோ படங்களை எல்லாம் கொண்டுவந்தார் அன்னபூரணி, ராஜராஜேஸ்வரி, அஷ்டலெட்சுமி, அங்கயற் கண்ணி-ஆனால் சிம்மத்தின் மீது அமர்ந்திருக்கும் பைரவியின் படம் கிடைக்கவில்லை.

அந்தப் படமோ சிலையோ வந்தால்தான் நீங்கள் என்னோடு பேசலாம் என்று வேடிக்கையாகச் சொல்வது போல் சொல்லிவிட்டேன்.

அவர் அந்த நேரத்தில் ஒரு பொம்மைக் கடையை கண்டு பிடித்து ஒரு சிம்மவாகினி பொம்மையை கொண்டுவந்து விட்டார். அது எங்களூர் காளியின் சிலையை விட அழகாக இருந்தது. அதன் மூக்கிலே ஒரு சிவப்பு மூக்குத்தியும் இருந்தது.

கொஞ்ச நேரம் அந்தப் பள்ளியறையிலேயே அந்த பொம்மையை வைத்துக் கொண்டு காளி ஸ்தோத்திரம் பாடினேன்.

''ஏ, மகாகாளி! எழுந்து வா!'' என்றார் அவர்.

''ஐயையோ! அப்படிச் சொல்லாதீர்கள். அது தாயின் பெயர்!'' என்று சொன்னபடியே அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தேன்.

தெய்வ குற்றம் மன்னிக்கப்பட்டு விட்டதுபோல எனக்குள் ஒரு நிம்மதி.

குடும்பத்தில் பள்ளியறை என்பது ஒரு குழந்தையை சிருஷ்டிக்கும் புனித பூமிதான். கணவனது தாளாத உணர்ச்சிகளுக்கு அது கேந்திரமாக இருப்பினும் பெண்ணின் பவித்திரத் தன்மைக்கு அதுவும் ஒரு ஸ்தலம்.

தன் அந்தரங்கங்களை கணவன் ரசிப்பதில் எந்தப் பெண்ணுக்கும் ஆன்மிக உணர்வு வந்துவிட வேண்டும். நான் அப்படித்தான் இருந்தேன். அதற்காக, 'இவள் வெறும் மரக்கட்டை,' என்ற உணர்வைக் கணவனுக்கு ஏற்படுத்தி விடக் கூடாது. மஞ்சத்தில் கணவனுக்கு மட்டும் தாசி என்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

இரவுப் பொழுதின் இனிமையை என்னால் உணர முடியும். ஆனால் அந்த இனிமைக்காக ஏங்காமல் இருக்கவும் முடியும்.

அந்த உறவில் என்னுடைய ஜபமெல்லாம், 'ஒரு அழகான ஆண் குழந்தை' என்பதே.

மறுநாள் உறவினர்கள் பிரிந்தார்கள். எங்கள் உறவு தொடர்ந்தது. இரவுகள் வளர்ந்தன.

வெறும் தேக சுகத்தைத் தவிர, ஒரு தாய்மையின் ஆன்மிக சுகத்துக்கான அறிகுறிகள் தோன்றவில்லை.

மாதங்கள் மூன்றாகின, ஆறாகின.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பெண் கருவுறவில்லை என்றால் பிறகு குழந்தை பிறப்பதைப் பற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாது.



எனக்குப் பயம் வந்து விட்டது.

எட்டு மாதங்கள் கழிந்த பின்பு ஓர் இரவில் நான் அவரிடம் கேட்டேன், ''எனக்கு குழந்தையே பிறக்காது போல் இருக்கிறதே'' என்று.

''ரொம்ப நல்லதாய்ப் போயிற்று!'' என்றார் அவர்.

''இந்த வீட்டில் ஒரு தொட்டில் ஆட வேண்டாமா...?'' என்றேன்.

''பெரிய தொட்டிலாகப் போடு. நானே படுத்துக் கொள்கிறேன்'' என்றார்.

''வேடிக்கை செய்யாதீர்கள். ஒரு லேடி டாக்டரிடம் காட்டலாமா?'' என்றேன்.

''என்னையா?'' என்றார்.

''அது வேறு ஆசையா? நான்தான் காட்டிக் கொள்ள வேண்டும்'' என்றேன்.

''ஆண் மலடா, பெண் மலடா என்று யாருக்குத் தெரியும்?'' என்றார்.

அதன் பிறகு ஒவ்வொரு தடவையும் படுக்கையில் படுக்கும்போதும் தேக சுகம் பற்றிய நினைவு போய், 'கடவுளே, நான் மலடியில்லை என்பது நிரூபணமாக வேண்டும்' என்று வேண்டிக் கொள்வேன்.

சொல்லப் போனால், அந்த உறவின்போது நான் கருவுறுகிறேனா என்று கண்ணை மூடிக்கொண்டு கூர்ந்து கவனிப்பேன்.

அவர் தன் தொழில் நிமித்தம் வெளியூருக்குப் போய் விட்டால் பல புத்தகங்களை வாங்கிப் படிப்பேன்.

மாத விலக்காகி இத்தனை நாட்களுக்குப் பிறகு உறவு கொள்ள வேண்டும் என்றெல்லாம் அதில் எழுதியிருப்பார்கள். சமயங்களில் அந்த நாளில் அவர் இருக்க மாட்டார். பிறகு நானே வெட்கத்தை விட்டு, ''இந்தத் தேதியில் இருந்து இந்தத் தேதி வரை நீங்கள் வெளியூருக்குச் செல்லக்கூடாது'' என்று கேட்டுக்கொள்வேன்.

''உத்தரவு'' என்பார். அப்படியே இருப்பார்.

அதிலும் எனக்கு ஆண்டவன் அருள் புரியவில்லை.

மாமியார், நாத்தனார் சும்மா இருப்பார்களா? பிள்ளையைப் பெற்றவுடனேயே பேரனைக் கனவு காண்கிறவர்களாயிற்றே!

''போய் அரச மரத்தை சுற்றிவிட்டு வாயேன்'' என்பார்கள். ''இருவரும் காசி ராமேஸ்வரத்துக்கு போய்விட்டு வாருங்களேன்'' என்பார்கள்.

அவரும் அவர்களது அரிப்புத் தாங்காமல், ''நீ வாம்மா, நாம் எங்காவது போய் வருவோம்'' என்று அழைத்தார்.

அந்த அன்பும், பண்பும் வேறு எந்தப் பெண்ணுக்கும் கிடைக்க முடியாத ஒன்று.

காசிக்குப் போனோம்; கங்கையில் மூழ்கினோம்; விஸ்வநாதரை வணங்கினோம்; விசாலாட்சியை தரிசித்தோம்.

''விஸ்வநாதர் நம் வீட்டில் வந்து பிறக்கக் கூடாதா'' என்றேன் நான்.

''ஏன், விசாலாட்சிதான் பிறக்க வேண்டும்'' என்றார் அவர்.

''ஐயோ! பெண் குழந்தை பிறந்தால் மாமியார் மருந்து கொடுக்கமாட்டார்கள்'' என்றேன் நான்.



''ஆண் குழந்தை பிறந்தால் ஆறு வயதிலேயே உதைப்பான்!'' என்றார் அவர்.

''எங்கள் குடும்பராசி பெண் குழந்தைதான்'' என்றேன் நான்.

''இந்த நாடு பூராவும் உன்னைப் போலவே பெண் பிறந்துவிட்டால், நாடே கோவிலாகி விடும்'' என்றார் அவர்.

ஆசைகள் வளர்ந்தன. பேச்சிலே உள்ளம் அமைதியடைந்தது.

கனவுதானே நாம் காண முடியும்; காரியம் பகவானுடையதல்லவா!

எனக்கென்னவோ ஒவ்வொரு ஸ்தலத்துக்குப் போய்த் திரும்பும் போதும் ரயிலில் தாலியின் சிவப்புக்கல் காணாமல் போனதும் குழந்தை மரணமடைந்ததுமே நினைவுக்கு வந்து கொண்டிருந்தன.

ஒவ்வொரு ஸ்தலத்திலும் ''நீங்கள் இன்ன கோவிலுக்குப் போனால் நல்லது'' என்பார்கள். உடனே அந்த ஊருக்குப் புறப்படுவோம்.

கொஞ்சமா சுற்றினோம்!

ஆறு மாத காலம். அவர் பிரயாணிகள் செக் ஒரு லட்ச ரூபாய்க்குக் கொண்டு வந்திருந்தார். ஒவ்வொரு ஊரிலும் ஆயிரம் ரூபாய்க்குச் சில்லரை மாற்றி உண்டியலில் போடுவோம்.

பணம் செலவழிந்தது; பயன் ஏதுமில்லை.

'பரலோகத்து டாக்டர்கள் கை கொடுக்கவில்லை; இகலோகத்து டாக்டரையாவது கேட்கலாமா?' என்று யோசித்தோம்.

அதற்குள் மூன்று வருஷங்கள் ஓடிவிட்டன.

'டாக்டரிடம் காட்டி, டாக்டர் ஏதாவது சொல்லிவிட்டால், பிறகு எனக்கு நிம்மதி இருக்காது' என்று அவர் பயந்தார்.

பிறகு அவருக்குத் தெரியாமல் ஒரு லேடி டாக்டரிடம் நான் காட்டினேன். அந்த லேடி டாக்டர் ஒரே வரியில், ''நீங்கள் மலடு அல்ல'' என்று கூறிவிட்டார்.

அப்படி என்றால் அவர் மலடா? ஈஸ்வரா, யார் மலடானாலும் ஊர் பழிக்கப் போவது என்னைத்தானே?

இருந்தாலும் அவர் மலடாக இருப்பார் என்பதை நம்ப என்னால் முடியவில்லை. நானும் மலடாக இருக்க முடியாது என்றே நம்பினேன்.

'எப்படி' என்று கேட்பீர்கள்! 'மருத்துவரை விட உனக்கு அதிகம் தெரியுமோ' என்பீர்கள்!

எனக்கு ஈஸ்வர தோஷத்தைப் பற்றிய பயம் இருந்தது.

'கடவுள்விட்ட வழி' என்று நான் அமைதியடைந்தேன்.

திடீரென்று ஒருநாள் தன் தொழிற்சாலையில் இருந்து அவர் சீக்கிரம் வந்து விட்டார்.

''ஜானி! ஜானி!'' என்று அவர் உற்சாகமாகக் குரல் கொடுத்தார்.

இரவு நேரங்களில் தான் அவர் அப்படி என்னைக் கொஞ்சுவது வழக்கம். இப்போது என்ன வந்தது?

''தெரியுமா ஜானி, என் உடம்பில்தான் ஒரு தோஷம் இருந்தது. என் உயிர் அணுக்களை டாக்டர் சோதித்துப் பார்த்தார். உயிரணுக்களில் கர்ப்ப அணுக்கள் தோன்றித் தோன்றி நசிந்து விடுகின்றன என்றார். பிறகு என்ன செய்ய



லாம் என்று கேட்டேன். அவர் சமீபத்தில்தான் ஜெர்மனிக்குச் சென்று திரும்பினார். அங்கு வாங்கி வந்த சில மாத்திரைகளைக் கொடுத்தார். அவற்றைச் சாப்பிடச் சொன்னார். அடுத்த மாதமே 'ரிசல்ட்' என்றார். இனி என்ன கவலை!'' என்று சொல்லிக் கொண்டே என்னை என் கணவர் கட்டிப் பிடித்தார்.

அப்போது, ''இதிலொன்றும் குறைச்சலில்லை'' என்று குரல் கேட்டது. என் மாமியார் அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்தார்.

மாத்திரை சாப்பிட்டாகி விட்டது. மாதங்களும் ஓடிக் கொண்டிருந்தன.

ஆற்றுத் தண்ணீர் பாறையிலேயே விழுந்து கொண்டிருந்தது; பயிர் விளையக் காணோம்.

அந்த நேரத்தில் அவரது தொழிற்சாலையின் டைரக்டர்களில் ஒருவரான பி. ஆர். சௌத்ரி என்ற வங்காளத்துக்காரர், கல்கத்தாவில் இருந்து தன்னுடைய சகோதரி வந்திருப்பதாகவும், கல்கத்தாவிலேயே அவர் பிரபலமான லேடி டாக்டர் என்றும், எங்களை விருந்துக்கு வரும்படியும் டெலிபோனில் அழைத்தார்.

நான் முன்பு லேடி டாக்டரிடம் காட்டியது என் கணவருக்குத் தெரியாதாகையால், ''இவரிடம் காட்டட்டுமா? '' என்று கேட்டேன்.

''அவர் ஏதாவது சொல்லி விட்டால் உன் மனது தாங்காதம்மா'' என்றார் அவர்.

''பரவாயில்லை, தாங்கிக் கொள்வேன்'' என்று கெஞ்சினேன்.

அவரைச் சம்மதிக்க வைப்பதற்காக கொஞ்சினேன்; சம்மதித்தார்.

விருந்துக்குப் போனோம். போன அவசரத்திலேயே அந்த அம்மையாரிடம்- அவர் பெயர் சுபத்திரா சௌத்ரி- ஆலோசனை கேட்க விரும்பினேன்.

''எல்லாம் சாப்பிட்ட பிறகு'' என்றார் என் கணவர்.

முன்கூட்டியே ஏதாவது சொல்லி விட்டால் சாப்பாடு செல்லாதாம் எனக்கு, அதனால்.

சாப்பிட்ட பிறகு அந்த அம்மையாரை முதலில் நான் விசாரித்தேன்.

அவரது கணவர் பெயர் விஜய சௌத்ரியாம். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையாம். பெயர் அபிமன்யு என்பதாம். பொருத்தம் பார்த்தீர்களா- விஜயன்-சுபத்ரா, அபிமன்யு.

பிறகு என்னை அந்த அம்மையார் தனியறைக்கு அழைத்துக் கொண்டு போனார். ''வெட்கப்படக் கூடாது'' என்றார். ஆடை முழுவதையும் களையச் சொன்னார். நான் வெட்கப்படவில்லை. பிரசவத்தின் போதாவது லேடி டாக்டர் பார்த்து தானே ஆக வேண்டும்.

கையிலிருந்து ரத்தம் எடுத்தார். ஒரு சிறு கண்ணாடிக் குழாய் மூலம் உடம்பிலிருந்து உயிரணுக்களை எடுத்தார். பக்கத்திலேயே ஒரு ரிசர்ச் லாபரட்டரி.

ஒரு மணி நேரம் எங்களை உட்காரச் சொன்னார். அவரது குறிப்பை வைத்து லாபரட்டரியில் இருந்து ஒரு குறிப்பு வந்தது.

அதைப் படித்துவிட்டு என்னையே பார்த்த அந்த அம்மையார், தனியாக அழைத்துக் கொண்டு போய், ''உங்கள் உடம்பில் கரு அணுக்கள் தோன்றித் தோன்றி மறைகின்றன'' என்றார்.



''என் கணவரைப் பற்றியும் அதுதானே சொன்னார்கள்?'' என்றேன்.

''இருக்கலாம். எதற்கும் இந்த மாத்திரையை சாப்பிடுங்கள்'' என்றார்.

''பழையபடியும் மாத்திரையா?'' என்று கலக்கத்தோடு கேட்டேன் நான்.

''ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்றார்.

''இல்லை சொல்லுங்கள்!'' என்றேன்.

''உங்கள் கணவருக்குக் குழந்தை பிறக்கும். ஆனால் உங்கள் மூலமாக அல்ல. உங்களுக்கே குழந்தை பிறக்க முடியும்; ஆனால் உங்கள் கணவர் மூலமாக அல்ல!'' என்றார் அவர்.

அவர் சொன்ன முதல் வரியில் அடி விழுந்தது; இரண்டாவது வரியில் இடி விழுந்தது.

அழ முடியாமல் அழுதேன்.

அதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை...

★

சுரேந்திரன் : வாக்கு மூலம்: 2

அவளை டாக்டரிடம் காட்டியது தவறு என்பது, எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

சிரித்துப் பேசினால் பார்த்துக் கொண்டே இருக்கலாம்; சமைத்துப் பரிமாறினால் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம்; அப்படிப்பட்டவள் எப்படி மாறிவிட்டாள்?

குழந்தை பிறக்கவிட்டால்தான் என்ன?

பெற்றவர்கள் பலர் வளர்க்க முடியாமல் திண்டாடுகிறார்கள். ஏதேனும் ஒரு அழகான ஆண் குழந்தையை சுவிகாரம் எடுத்துக் கொள்ள முடியாதா?

வங்காளத்துக் குழந்தையைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் வளர்க்கலாம். சீனத்துக் குழந்தையையே சுவிகரித்துக் கொள்ளலாம். அது, 'அம்மா, அப்பா' என்று பேச ஆரம்பித்தால், நாம் பெற்றோமா இல்லையா என்பதே மறந்து போகுமே!

தம்பதிகள் இன்ப வாழ்வுக்குப் பிறகு தாய்மையும், தந்தைத் தன்மையும் வேண்டும்தான் என்றாலும், அதை சுவிகாரக் குழந்தையின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாதா?

கட்டுக் குலையாத மேனியும், விட்டுப் பிரியாத உறவும், எடுத்து வளர்க்கும் குழந்தைகளுமாக இல்லத்தை இனிமையாக்கிக் கொள்ள முடியாதா?

பைத்தியக்காரி, இதற்காகவா அழுது கொண்டிருப்பது?

— இப்படிப் பலமுறை சொல்லிவிட்டேன் ஜானகிக்கு.



மாமியாருக்குப் பேரன் தேவைதான்; ஆனால் மகனே ஒரு மலடானால் என்ன செய்வது? அப்போது அவர்களே சுவிகாரம் எடுக்கத்தானே பறப்பார்கள்?

"இந்தா ஜானகி, இதையே நினைத்து ஏங்காதே! என் மடியில் நீ படுக்கும் போது உன்னை நான் தாலாட்டுகிறேன். உன் மடியில் நான் படுக்கும் போது நீ என்னைத் தாலாட்டு. என் தாய்க்குப் பேரக் குழந்தைகள் வேண்டுமென்றால், நம் இருவரையும் தாலாட்டட்டும்" என்று கூடக் கூறிவிட்டேன் அவளுக்கு.

ஏமாற்றப்பட்டவர்களும், இல்லாமற் போனவர்களும் தத்துவங்களால் எப்படிச் சமாதானமடைவார்கள்?

கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த புத்தியும் எத்தனை நாளைக்கு வரும்?

ஆறுதல் சொல்லும்போது அடங்குவாள்; பின் ஆறுமணி நேரத்தில் மயங்குவாள்.

தொழிற்சாலைக்குப் போகவே எனக்குப் பயம் வந்து விட்டது.

நான் இல்லாத நேரத்தில் அவள் ஏதாவது செய்து கொண்டு விட்டால்...

பத்துப் பதினைந்து நாட்கள் அவள் பக்கத்திலேயே இருந்தேன்.

சமையற்காரியைச் சமைக்கச் சொல்லிவிட்டு, அவளைப் பள்ளியறையிலேயே வைத்திருந்தேன்.

ரேடியோவில் சினிமாப் பாட்டு வரும்போது அதைப் போட்டுக் காட்டுவேன். மற்ற நேரங்களில் ரெக்கார்டு பிளேயரைப் போடுவேன். அதிலும் தாலாட்டுப் பாடல்களைத் தவிர்த்தேன். காதல் பாடல்களையே அதிகம் போட்டேன்.

பாடல்களா இல்லை?

'எனக்கு நான், உனக்கு நீ' என்று எவ்வளவு பாடல்கள்!

பாடல்களில் வயதான காதலர்கள் பாடுகிற அந்த 'டூயட்' பாடல்களைப் போட்டு, அவர்கள் நடிப்பது போல் நானும் நடிப்பேன்; கட்டிப் பிடிப்பேன்; முத்தமிடுவேன்.

''கீழே போய் காபி சாப்பிட்டு வருகிறேன்'' என்று அவள் சொன்னால் அவளைப் போகவிடாமல் நானே போய் எடுத்து வருவேன்.

கிட்டத்தட்ட ஒரு குழந்தைக்குத் தந்தை செய்யும் சேவை தான்!

அப்பொழுதெல்லாம் என் அன்பை எண்ணிக் கண்ணீர் வடிப்பாள்; ஆறுதலடைவாள்; எனது வேடிக்கைப் பேச்சில் கலந்துகொள்வாள். இடையிடையே மட்டும், ''நிச்சயமாகச் சொல்லுங்கள். உங்களுக்குக் 'குழந்தை இல்லையே' என்ற ஏக்கம் இல்லையே?'' என்று கேட்பாள்.

''சத்தியமாக, என் பாட்டியின் மீது ஆணையாக இல்லை!'' என்பேன்.

''தாய் மீது ஆணையிடாமல் மீண்டும் மீண்டும் பாட்டி மீது என்ன ஆணை...?'' என்பாள்.

''தாய்தான் பேரனுக்காக அழுகிறாள். பாட்டி என்னைப் பார்த்தே திருப்தியடைந்தவளாயிற்றே!'' என்பேன்.

அதைத்தான் நான் சொல்லியிருக்கக் கூடாது.

அவளைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் நான் தோற்று விட்டேன்.

திடீரென்று ஒருநாள், சரிகை போட்ட பச்சைப் புடவை கட்டி, அதே துணியில் ரவிக்கை போட்டு, தலைவாரிக்



கொண்டையிட்டு, வாசம் மிக்க மல்லிகைப்பூ வைத்து நெற்றியில் சின்னஞ்சிறு குங்கும வடிவத்தோடு பள்ளியறை யில் எனக்காகக் காத்திருந்தாள்.

நான் ஒரு மணி நேரம் வெளியில் போய் வருவதற்குள் இவ்வளவு அலங்காரங்கள்!

ஏன், 'குழந்தை பிறக்கும்' என்று எவனாவது ஜோசியன் சொல்லிவிட்டானா? இல்லை ஒருவேளை கும்பிட்ட சுவாமி கள் கருணை வைத்து, குழந்தை விதை தூவி விட்டனவா?

''அடியம்மா ராஜாத்தி! இன்றென்ன அலங்காரம்?'' என்றேன்.

''உட்காருங்கள், சொல்கிறேன்'' என்றாள்.

''உட்கார்ந்தே பேச வேண்டிய அளவுக்கு நீண்ட விஷயமா...?'' என்றேன்.

''பெரிய விஷயம்! இந்த வீட்டிற்கு ஒரு குழந்தை வரப் போகிறது!'' என்றாள்.

வேடிக்கையாக, ''என்ன விலை?'' என்று கேட்டேன்.

''நான்'' என்றாள்.

''ஜானகி!'' என்று பதறினேன்.

''என்ன ஆகிவிட்டது இப்போது?'' என்றாள்.

''என்ன பேசுகிறாய்...?'' என்றேன்.

''தமிழ்தான்!'' என்றாள்.

''நீ எதையும் என்னிடம் பேச வேண்டாம்!'' என்று மேலே போட்டிருந்த கோட்டைக் கழற்றினேன்.

அதை வாங்கிக் கொண்டு போய்க் கொக்கியில் மாட்டிய வாறே, '' இனி நான் பேசுவது குறைவாகத்தானிருக்கும்!'' என்றாள்.

''நான் அது கூடப் பேசமாட்டேன்'' என்றேன்.

''யார் விட்டார்கள்?'' என்றாள்.

''கண்ணு! வேண்டாம்மா! உன் கணக்கு எனக்குப் புரிகிறது. என்னிடம் எதையும் சொல்லாதேம்மா!'' என்றேன்.

''இதோ பாருங்கள்! வாரிசுக்குப் பிள்ளை இல்லை என்று கணவன்தான் வேறு கணக்குப் போடுவது வழக்கம். மனை வியே அந்தக் கணக்கைப் போடும் போது...'' என்று இழுத்தாள்.

''இதையே நான் உனக்கு உபதேசித்தால்...'' என்று இழுத்தேன்.

''ஈஸ்வரா!'' என்று கதறிக் காதைப் பொத்திக் கொண டாள்.

''அதே ஈஸ்வரனைத்தான் நானும் கூப்பிடுகிறேன்'' என்றேன்.

''சரி, அந்தப் பேச்சு இப்பொழுது வேண்டாம்!'' என்று விட்டு விட்டாள்.

இரவு பத்துமணி.

என் கைப்பிடியை விட்டு அவள் விலகி விடாமல் இடையில் காற்றுக் கூட நுழைய முடியாதவாறு அணைத்துக் கொண்டே படுத்திருந்தேன்.

திடீரென்று முத்தமிட்டாள்; தலையைக் கோதினாள்; என் கன்னத்தின் மீது கன்னம் வைத்துப் படுத்தாள்.



சிறிது நேரத்தில் சூடான இரண்டு சொட்டுக் கண்ணீர் என் கன்னத்தில் விழுந்து கரை புரண்டு ஓடிற்று.

நான் பதறிப் போய் எழுந்து, ''என்னம்மா?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை என் தங்கை வயதுக்கு வந்து இரண் டாண்டுகள் ஆகின்றன. அவளுக்குத் திருமணமாக வேண்டும்'' என்றாள்

''நல்ல மாப்பிள்ளையாகப் பார்க்கச் சொல். லட்ச ரூபாய் நாம் கொடுப்போம்'' என்றேன்.

அவள் உடனே கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தபடி, ''இல்லை இந்த வீடு அவளுக்கு வேண்டுமாம்!'' என்றாள்.

''ஓ... கொடுத்து விடுவோம். நாம் ஒரு வீடு வாங்கிக் கொள்வோம்'' என்றேன்.

உடனே ஒரு முத்தமிட்டு, ''உங்கள் தொழிற்சாலையில் பங்கு வேண்டுமாம்?'' என்றாள்.

''சரி, அதையும் கொடுத்து விடுவோம். வேறென்ன வேண்டுமாம்?'' என்றேன்.

''அதை நீங்கள் கொடுக்கமாட்டீர்கள். கேட்டு என்ன பயன்?'' என்றாள்.

''சத்தியமாகக் கொடுப்பேன்'' என்றேன்.

''எங்கே தலையில் அடியுங்கள்!'' என்றாள்.

''எல்லாம் வல்ல இறைவன் சாட்சியாக உன் தங்கை எதைக் கேட்டாலும் கொடுப்பேன்'' என்று தலையிலடித்தேன்.

''அவளுக்கு நீங்கள் வேண்டுமாம்!'' என்றாள்.

''ஜானகி!'' என்று கதறினேன். மேலும், மேலும் ''ஜானகி ஜானகி!'' என்று பதறினேன். வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

''இறைவனைச் சாட்சி வைத்திருக்கிறீர்கள். அதை மாற்றக் கூடாது!'' என்றாள் குறும்பாக.

''உனக்கு இது வேடிக்கையா...?'' என்று கேட்டேன்.

''என் ராஜாவல்லவா! என் கண்ணல்லவா! அக்காளும் தங்கையும் ஒரே வீட்டில் வாழ்வது என்ன அதிசயமா? அடுத்த வீட்டிலும் அதே கதைதான்; எதிர்த்த வீட்டிலும் அதே கதைதான். அதிலும் பாருங்கள், என் தங்கை பெயரும் வைதேகி. என் தந்தைக்கு ராம பக்தி அதிகம். அதனால், நான்கு பெண்களுக்கும் ஜானகி, வைதேகி, சீதா, மைதிலி என்றே பெயரிட்டார். ராமன் மடியில் ஜானகி படுத்தால் என்ன, வைதேகி படுத்தாலென்ன? ஸ்தூலங்கள் தானே வேறு? ஆன்மா ஒன்றுதானே! ஏன், நீங்களே 'நீயும் வாடி' என்று சொன்னால் அவளோடு நானும் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்கிறேன். இந்த மயில் வாகனம் இரண்டு பேருக்கு இடந்தராதோ? அப்படித்தானென்ன அவளைத் தாரை வார்த்துவிட்டு நானென்ன காசி யாத்திரையா போகப் போகிறேன்! காலையில் நான்தான் காபி கொடுக்கப் போகிறேன். குளிப்பாட்டப் போகிறேன். அலங்கோலமாகக் கிடக்கும் படுக்கையை ஒழுங்குப் படுத்தப் போகிறேன். அவளுக்கும் தலைவாரிப் பூச்சூட்டி ஒவ்வொரு நாளும், 'சும்மா இருக்கியா?' என்று கேட்கப் போகிறேன். அடுத்த வருஷம் பிள்ளையை அவளிடமா கொடுப்பேன்? நான்தான் தாலாட்டப் போகிறேன்'' என்று சொல்லிச் சிரித்தவாறு, என் கன்னத்திலும், கழுத்திலும், மார்பிலும் மாறி மாறி முத்தமிட்டாள்.



கங்கை அணை உடைத்துக் கொண்டது போல் பொங்கிப் பொங்கி அழுதேன்.

''வேண்டாமய்யா! வேண்டாமய்யா'' என்று சொல்லிக் கொண்டே அவள் கண்களைத் துடைத்தாள். அவள் துடைக்கத் துடைக்க கண்ணீர் பொங்கிற்று.

திடீரென்று எழுந்து, என் கால்களில் விழுந்து குமுறிக் குமுறி அழுதபடி, ''சம்மதம் சொல்லுங்கள்; சம்மதம் சொல்லுங்கள்'' என்றாள்.

''ஜானகி!'' என்று கதறினேன்.

''ஐயா...'' என்று தன் நெற்றியை என் முழங்கால்களில் மோதிக் கொண்டாள்.

பதினைந்து நிமிஷங்கள் இதே நிலை.

பிறகு கைத்தாங்கலாக அவளை எடுத்தேன். அவளது ஆதங்கம் எனக்குப் புரிந்தது.

என் தாய்க்கு வேறு நினைவு வந்து வேறு பெண்ணும் வந்து விட்டால்...!- இந்த நினைவும் அவளுக்கு இருக்குமல்லவா! என்னைப்பிரிய முடியாத உத்தமி அப்படி நினைப்பதும் நியாயம்தானே!

நான் அவள் கண்களைத் துடைத்தபடி, ''உனக்குச் சரி என்றால், எனக்குச் சரி!'' என்றேன்.

''ஐயா!'' என்று என் மார்பினில் சாய்ந்தாள்.

இல்லறத்தில் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது இருக்கும் நிம்மதி, இன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது இருப்பதில்லை.

கண்ணீரைக் கொடுத்த பகவான் அதைத் துடைக்கவே கைகளைக் கொடுத்திருக்கிறான்.

காட்டுமிராண்டிகள் நாகரிகம் பெற்ற போது, 'ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழ்வது' என்று வைத்ததே, ஒருவர் சுமையை ஒருவர் தாங்கவே.

என்ன அதிசயமோ, கணவன் எவ்வளவு பெரிய சுமையைக் கொண்டு வந்தாலும், அது மனைவிக்குச் சுமையாகத் தெரிவதில்லை... கணவனுக்கும் அப்படியே.

நீண்ட நேரம் நாங்கள் அமைதியுற்றிருந்தோம். இருவரும் தனித்தனியே சிந்தித்துக் கொண்டிருந்தோம். ஆயினும் என் மார்பில்தான் அவள் முகம் புதைத்திருந்தாள். அவளை அணைத்தபடிதான் நானும் இருந்தேன்.

'இன்னொருத்தியோடு எப்படிப் பேசப் போகிறோம் பழகப் போகிறோம்? இவள் மாதிரி அவள் இருக்கமாட்டாளே' என்பது என் கவலை

பெண் பார்க்க அழைத்துப் போவது, திருமணம் முடிப்பது, முதலிரவுக்குத் தயார் செய்வது பற்றியது அவள் சிந்தனை.

மெதுவாகத் தலையைத் தூக்கி, ''எப்போது பெண் பார்க்கப் போகலாம்?'' என்றாள்.

''பெண் பார்ப்பதா? இது என்ன சம்பிரதாயமா? அந்தச் சுட்டிக் கழுதையை நான் எத்தனை முறை பார்த்திருக்கிறேன்?'' என்றேன்.

''கடந்த ஆறு மாதங்களாக நீங்கள் அவளைப் பார்க்கவில்லை. இப்போது எப்படி இருக்கிறாள் தெரியுமா- தளதளவென்று! தொட்டால் விடமாட்டீர்கள்''என்றாள்.

''ஏம்மா! எனக்கென்ன உணர்ச்சியை உண்டாக்குகிறாயா! உன்னைத் தொட்ட கையால் பொன்னைத் தொட்டாலும் மண்ணாகத் தெரியுமே எனக்கு?'' என்றேன்.



''அதெல்லாம் கொஞ்ச நாள்தான்! உறவு பிடித்துப் போய் விட்டால் இரவு அவளைத்தான் தேடச் சொல்லும்'' என்றாள்.

''அப்படி நடந்தால் நீ செய்தது தற்கொலை என்றாகிவிடும்'' என்றேன்.

''இல்லை! சரீர சுகம் மட்டுமே உங்களிடமிருந்து கிடைப்பதாக நான் கருதவில்லை. நீங்கள் நடப்பதையும் பேசுவதையும் தூர நின்று பார்த்துக் கொண்டிருந்தாலே எனக்கு நிம்மதி'' என்றாள்.

எப்படி மடக்கினாலும், தன் ஆசைகளையே நிலை நாட்டினாள் அவள். அவளது ஆசை என்றாலும் அது என் குடும்பத்தைப் பற்றியதுதானே? என்னைப் பிரித்துவிட்டுத் தனியாகவா அவளுக்கொரு ஆசை உண்டு?

''பெண்ணைப் பார்க்காவிட்டாலும் பேசி முடிக்கவாவது போவோம் வாருங்கள்'' என்றாள்.

''நன்றாய் இருக்கிறது கதை. மனைவி கணவனுக்குப் பெண் பேசப் போனால், உன் வீட்டிலேயே காறித் துப்ப மாட்டார்களா?'' என்றேன்.

''துப்பமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் மார்பிலே சளி இல்லை, என்னிடம் அன்பிருக்கிறது'' என்றாள் அவள்.

வளர்த்துவானேன்? ஜானகி போட்ட அடுத்த முகாம் என் தாய்வீடு.

பெரிய வீட்டை எங்களுக்குக் கொடுத்து விட்டு, பின் பக்கத்திலே ஒரு சிறிய வீட்டிலேயே என் தாய் தந்தையார் இருந்து வந்தார்கள். என் தாயிடம் போய் அவள் பேசினாள்.

ஒரு மகனை வைத்துக் கொண்டு இரண்டு மருமகளைப் பிடிக்க முடியும் என்றால் தாயென்ன மறுக்கவா போகிறாள்?

என் தாயார் ஜானகியைக் கட்டித் தழுவி, நான் நினைத்தேன். ஆனால் உங்களைப் பிரிக்க நான் விரும்பவில்லையம்மா, நீயே இதுபற்றி நினைத்திருக்கிறாயே! நீ ஒரு தெய்வப் பெண்ணம்மா!'' என்றார்களாம்.

சக்தியின் ஆசீர்வாதம் தெய்வானைக்குக் கிடைத்து விட்டது; உடனே குறத்தியைப் பார்க்கப் புறப்பட்டு விட்டாள்.

''அந்தக் குறத்தியை நான் என்ன பார்ப்பது? நீயே போய்ப்பார்!'' என்று சொல்லிவிட்டேன்.

அவளும் எங்கள் அறையிலிருந்த சிம்மாவாகினிக்கு பூஜை நடத்தி விட்டு, திருக்கடையூருக்குப் புறப்பட்டாள்.

## வைதேகி: வாக்கு மூலம் : 3

''நல்ல வேடிக்கை இது! நான் என்ன செல்லாத காசா? இல்லை, வசதி இல்லாத வீட்டுப் பெண்ணா-இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட? நான் உன்னைவிடக் கொஞ்சம் அதிகம் படித்திருக்கிறேன். ஒரு நொண்டி முடத்துக்காவது முதல் தாரமாகப் போவேனே தவிர, எந்தக் காரணம் கொண்டும் இரண்டாம் தாரமாகப் போகமாட்டேன்'' என்றேன் நான்.

''இதோ பார், உனக்கு வேறு விதி இல்லை என்றா இந்தத் திருமணம் பேசுகிறேன்? எனக்கு வேறு வழி இல்லையம்மா? கட்டிய நாள் முதலாய் இவள் வயிற்றில் ஒரு பூச்சி பொட்டுக் கூட இல்லையென்று என் மாமியார் இன்னொரு பெண்ணைக் கொண்டு வந்துவிட்டால், வருகின்ற சக்களத்தி என்னை வாழ விடுவாளா? ஆயிரம் இருந்தாலும் நீ என் தங்கை. நீ என்னை அடித்தாலும் திட்டினாலும் அதையும் ஒரு குழந்தைத்தனமாக எடுத்துக் கொள்வேனே தவிர, சக்களத்திப் போராட்டமாக எடுத்துக் கொள்ளமாட்டேன். அப்படித்தானென்ன, அவருக்கு முதல் திருமணம்தான் ஆகிவிட்டதே தவிர, வயதா ஆகிவிட்டது? அவரை விட உலகத்தில் அன்பு உண்டா, அழகு உண்டா, பண்பு உண்டா? எனது வாழ்க்கையை நீ கேட்டால் - நீ என்னடி, யார் கேட்டாலும், 'நானும் அவரைக் கட்டிக் கொள்ளட்டுமா' என்று கேட்பார்களே தவிர மறுத்துப் பேச மாட்டார்கள். அக்காவும் தங்கையும் அந்தரங்கம் பேசிக் கொள்ள முடியாது. முடியுமென்றால் வாழ்க்கைச் சுகத்தை உனக்குப் பாடம் பாடமாக விவரிப்பேன். அப்பா அம்மாவிடம் இதைச் சொல்லாமல் முதலிலேயே இது பற்றி உன்னிடம்

பேசுவதற்குக் காரணம், கட்டிக் கொள்பவள் சம்மதம் தெரிந்து தான், கட்டிக் கொடுப்போரைக் கேட்க வேண்டும் என்பதே. நீ ஒப்புக் கொண்டால் அப்பா அம்மாவிடம் பேசுகிறேன், இல்லை என்றால் என் உடம்பை தூக்கிப் போடுபவர்களில் நீ ஒருத்தியாக இருந்து விட்டுப்போ!'' என்றாள் அக்கா.

எனக்கும் ரத்த பாசம் இருக்கிறது. ஆனால் அவளுக்குப் பிறக்காத பிள்ளை, அவர் மூலம் எனக்கு மட்டும் பிறக்கப் போகிறது என்பது மட்டும் என்ன நிச்சயம்?

'இந்த வீட்டிற்கு வாரிசு இல்லை' என்று இறைவன் நிச்சயித்து விட்டால், எத்தனை மனைவிகள் வந்தாலும் சொத்துக்குப் பெண் பங்காளியாகலாமே தவிர, தொட்டில் ஆட முடியாதே?

அக்காள் ஜானகியைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக வும் இருந்தது. அவளுடைய இடத்தை ஆக்கிரமிக்க வேண்டி யிருக்கிறதே என்று எண்ணிய போது சங்கடமாகவும் இருந்தது.

அத்தானிடம் எனக்கு மட்டும் ஆசை இல்லையா?

அக்காளுக்கு அழகான புருஷன் வாய்த்திருந்தால், எந்த மைத்துனிக்குதான் மானசீகமாகவாவது மயக்கம் வராது!

நான் வயதுக்கு வராதபோது அவரை எவ்வளவு கேலி செய்திருக்கிறேன்? அவரும் இவள் வயதுக்கு வராதவள் தானே என்று என்னென்ன காதல் வார்த்தைகள் எல்லாம் பேசி இருக்கிறார்?

இப்போது அவற்றை நினைத்துப் பார்த்தால் புதுப் புது அர்த்தங்களெல்லாம் தெரிகின்றன.

நான் அக்காவுக்கு சக்களத்தியாகக் கூடாது என்றுதான் முதன் முதலில் மறுத்தேன். எப்படியும் ஒரு சக்களத்தி வரத்தான் போகிறாளாமே? அவள் வந்து என் அக்காவைக் கொடுமைப்படுத்துவதைவிட, நான் போய் இருப்பதில் தவ றென்ன?



அவள் தன் கணவனிடம் கொண்டிருக்கிற பக்தியைப் பார்த்து எனக்குக் கொஞ்சம் பயமும் இருந்தது.

பின்னாளில் நான் கோபத்தில் அவரைப் பற்றிச் சொல்லி விட்டால், அவள் மனம் பொறுக்காதே. 'அதற்காக என் சுபாவத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டும்' என்று தீர்மா னித்தேன்

அவள் நின்று கொண்டே இருக்கிறாள்; நான் யோசித்துக் கொண்டே இருக்கிறேன்.

சம்மதத்தைச் சீக்கிரம் தெரிவித்து விட்டால், 'எனக்கு முன்னாலேயே தெரியுமடி' என்று ஒரு வார்த்தையிலேயே சொல்லி விடுவாளே!

'பாவம்! ஒரு குழந்தை இல்லை என்ற ஒரே காரணத்துக் காகத்தானே, கணவனுக்குப் பெண் பார்க்க மனைவி வந்திருக் கிறாள்' என்று எண்ணிய போது எனக்கு அழுகை வந்துவிட் டது.

''அக்கா...!'' என்று அலறியபடி அவள் கால்களிலே விழுந்தேன், அவளும் அழுதுகொண்டே என்னை வாரி எடுத்தாள்.

''என் மாமியார் மனது கோணாமல் இருக்கத்தானம்மா நான் இந்த முடிவுக்கு வந்தேன்!'' என்றாள்.

'உம்...மாமியாராம் மாமியார்! நான் போய் அவளை யாரென்று பார்க்கிறேன். பத்தாவது மாதமே ஒரு குழந்தையை பெற்றெடுத்து அவள் கண்களிலே காட்டாமல் மறைத்து வைக்கிறேன். பேரனைப் பார்க்காமலேயே அந்தப் பிசாசு சாகட்டும்' என்று என் மனதுக்குள்ளேயே கறுவிக் கொண் டேன்.

'அட ஈஸ்வரா! அசல் சுபாவம் மறுபடி தலை தூக்குகிற தே' என்கிறீர்களா?

சுபாவம் என்பது ஒரு தென்னைமரம். என்ன செய்வது? வளைத்து வைத்தால் ஒடிந்துவிடும். முடிந்த வரை வளைக்கப் பார்க்கிறேன்.

பிறகு என்ன நடந்தது தெரியுமா?

என் அக்கா ஜானகி நேராக அம்மாவிடம் போனாள். அத்தனை கதையையும் அம்மாவிடம் ஒப்புவித்தாள். கேட்ட வுடனேயே என் அம்மா அழுதுவிட்டார்கள்.

''உனக்குப் பிள்ளை இல்லை என்பதையும் என்னால தாங்க முடியவில்லை. அதற்காக என் வயிற்றில் பிறந்த இன்னொருத்தியையே சக்களத்தியாக அனுப்பவும் என் மனம் இசையவில்லை'' என்றார்கள் அம்மா.

அம்மாவைப் பிடித்திருந்த பயத்தையும் கவலையையும் உருக்கமாகப் பேசிப் பேசி நீக்கிவிட்டாள் அக்கா.

தன் வாழ்க்கைக்கு ஒரு குந்தகமும் இல்லை என்பதை அவள் தெளிவுபடுத்திய முறையில் பேராசிரியர்களெல்லாம், பிச்சை வாங்க வேண்டும்.

பிறகு அம்மா என்னை அழைத்து, ''அடியே! அங்கு போய் அவளுக்கு இடையூறாக இருக்கமாட்டாயே...?'' என்று அழுது கொண்டே கேட்டார்கள்.

''ஏம்மா! நானும் நீ பெற்ற பெண்தானே'' என்றேன் நான்.

''இது ஒரு தாய், மனம் ஒப்பிச் செய்கிற காரியம் அல்லடி. பெரும்பாலும் அக்கா தங்கைங்க சக்களத்தியாக வாழுகின்ற வீடுகளில், அக்காவை மணந்தவர் தப்பு செய்து அதனால் தங்கையை மணக்க வேண்டி வந்திருக்கிறதே தவிர



முறைப்படி நடந்தது மிகவும் குறைவம்மா! ஒரு தாய், எந்த மகள் கண்கலங்கினாலும் பொறுத்துக் கொள்வாள்; மூத்த மகள் கண் கலங்கினால் தாங்க மாட்டாள். அது முதல் ரத்தம். முதல் பந்தம். நாளைக்கு ஜானகி கலங்குகிறாள் என்று கேள்விப்பட்டால், இன்றுவரை ஆரோக்கியமாக இருக்கும் நான் உங்கள் வீட்டில் வந்துதான் சாக வேண்டியிருக்கும்!'' என்றாள் அம்மா.

நான், ''அம்மா...!'' என்று அழுதேன்.

உடனே ஜானகி வந்து, '' என்னம்மா இது? அவள் பச்சைப்பசலை. அவளிடம் பெரிய பெரிய விஷயங்களைச் சொல்லி பயமுறுத்துகிறாயே? நீ வாடா கண்ணு!'' என்று என்னைத் தோளில் சாய்த்து அரவணைத்தபடி கூட்டிக் கொண்டு போய்விட்டாள்.

அப்போதும் என் தாய் முந்தானையை வாயில் புதைத்து விக்கி விக்கி அழுவதைக் கண்டேன். அழுது கொண்டே படுத்த படுக்கையில் இருக்கும் என் தந்தையிடம் சென்று விட்டாள்.

என் தாயும் தந்தையும் ராமனும் சீதையுமாக வாழ்ந்தவர் கள். என் தாய் ஏதாவது சொன்னால், 'சரியம்மா!' என்பார் அப்பா. என் தந்தை ஏதாவது சொன்னால், 'சரிய்யா!' என்பாள் அம்மா. அபிப்பிராய பேதமில்லாத ஒரு தம்பதிக ளுக்குப் பரிசு கொடுப்பதென்றால், அகில உலகத்திலுமே எங்கள் பெற்றோருக்குத்தான் கொடுக்க வேண்டும்.

பிறகு என்ன? நாள் வந்தது; நேரம் வந்தது; ஊர் வந்தது; உறவு வந்தது; மேளம் வந்தது; தாளம் வந்தது.

மூத்த மனைவி, மணப்பெண்ணுக்குத் தோழியானாள். ஊராரெல்லாம் அதிசயப்பட்டார்கள்.

இந்து சாஸ்திரங்களின்படி நானும் இல்லத்தரசியாகி விட்டேன்.

தாலி கட்டி முடிந்து, மணவறையை மூன்று முறை சுற்றி, சடங்குகளை முடித்து, என்னைத் தனியாகக் கொண்டு வந்து எங்கள் வீட்டுப் பூஜை அறையில் உட்கார வைத்தார்கள்.

இந்தக் கல்யாணத்தில் என் தாய் காட்டாத பரபரப்பையும் துடிதுடிப்பையும் உற்சாகத்தையும் என் அக்காள் காட்டியதைப் பற்றித்தான் எல்லோரும் அதிசயமாகப் பேசிக் கொண்டார்கள்.

இடுப்பிலே சாவிக்கொத்தைச் சொருகிக் கொண்டு, காய்கறி எடுத்துக் கொடுப்பதும், வருகிறவர்களைக் கவனிப்பதும், ஒரு அமங்கலம் நேர்ந்து விடாமல் பாதுகாப்பதுமாக அவள் இருந்தாள்.

'இப்படியும் ஒரு பெண் இருக்க முடியுமா?' என்று எனக்கும் அதிசயமாகத்தான் இருந்தது.

எல்லாவற்றையும் விட அதிசயம், கல்யாண நேரத்தில் எல்லோரையும் போலவே அவளும், ''மாப்பிள்ளை தயாராகி விட்டாரா? மாப்பிள்ளையை அழைத்து வாருங்கள்!'' என்று தான் சொன்னாளே தவிர, 'என் அத்தானை அழைத்து வாருங்கள்' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை.

அதற்குள் தன் கணவனுக்கு அந்நியமாகிவிட்டாளா?

பாவம் அத்தான்! அவளைப் பார்த்துப் பார்த்துப் பரிதாபமாக, ''ஜானகி! சாப்பிட்டாயா?'' என்று கேட்டபோது இனி அக்காளை நாம் கேட்கவேண்டிய கேள்விகளில் இதுவும் ஒன்று என்று தோன்றிற்று.

திடீரென்று எங்கள் மாமியார் ''ஜானகி!' என்று கூப்பிட்டபடி நானிருந்த பூஜை அறைக்குள் வந்தார். அப்போதுதான் அவர்களை நான் நன்றாகப் பார்த்தேன். அப்படியொன்றும் தப்பாகத் தெரியவில்லையே! நான் என்னவோ சக்குபாயின் மாமியாராக, நல்லதங்காளின் நாத்தனராக இருப்பார் என்று கருதினேன். யார் கண்டது? பழகப் பழகத்தானே தெரியும்.



''ஜானகி எங்கேம்மா?'' என்று என்னிடம் கேட்டார்.

''இதோ இருக்கிறேன் அத்தை!'' என்று சொல்லிக் கொண்டே அக்காள் உள்ளே வந்தாள்.

''இரவு பாசஞ்சர் வண்டிக்கு எல்லோருக்கும் டிக்கட் புக் பண்ணியிருக்கிறதம்மா!'' என்றார்கள் மாமியார்.

அதைக் கண்டு என் அக்காள் அப்படி ஏன் பதற வேண்டும்?

ஜானகி:

வாக்கு மூலம் : 4

பதறினேனா? துடித்துப் போனேன்.

பாசஞ்சர் - கூப்பே - சிவப்புக்கல் - குழந்தை மரணம் காட்சிகள் வரிசையாக ஓடின.

அப்படியே நின்று விட்டேன்.

''ஏம்மா இப்படி திகைக்கிறாய்?'' என்று கேட்டார்கள் அத்தை.

''வேண்டாம் அத்தை, வேண்டாம்! என் திருமணத்தில் நடந்த சில காரியங்கள் இந்தத் திருமணத்தில் வேண்டாம். முதலில் திருமணத்தன்று இரவு புறப்படக் கூடாது. இரண்டாவது, அவர்கள் இருவரும் தனிப் பெட்டியில் பயணம் செய்யக்கூடாது. மூன்றாவது, சென்னை ரயிலடியில் என்னை வரவேற்றார்களே- பிள்ளை இல்லாத அம்மையார்- அவர்கள் முதலில் வரவேற்கக் கூடாது. நான்காவது, அந்த இரண்டு பெண்டாட்டிக்கார சின்ன மாமனார்தான் வரவேற்கலாமே தவிர, வேறு மூன்று பெண்டாட்டிக்காரர் வரவேற்கக் கூடாது'' என்று நான் படபடவென்று பொரிந்து தள்ளினேன்.

எங்கள் மாமியாருக்கும் அது உடனே புரிந்துவிட்டது.

இந்துக் குடும்பத்தின் ஜீவநாடியே மங்கலம் அமங்கலம் பார்ப்பதில் தானே அடங்கியிருக்கிறது?

''சரியம்மா! உன் இஷ்டம்! 'பேசிக் கொள்வதை' எங்கே வைத்துக் கொள்ளலாம்?'' என்று கேட்டார்கள் என் மாமியார்.

சாந்தி முகூர்த்தத்திற்கு முதியவர்கள் வைத்த பெயர் அது.



''சரி, வாருங்கள் சொல்கிறேன்'' என்று அவர்களை வெளியே அழைத்து வந்தேன்.

வைதேகியின் காது கேட்கவா அதைச் சொல்ல முடியும்?

''இங்கேயே நல்ல அறை இருக்கிறது. இங்கேயே வைத்துக் கொள்ளலாம்'' என்றேன்.

''அப்படியென்றால் உங்கள் அம்மாவைக் கூப்பிட்டு, சாயங்காலம் அவளுக்கு மஞ்சள் கயிறு கட்டச்சொல்'' என்றார்கள்.

''ஏன் அத்தை ? நீங்கள் கட்டுங்கள்'' என்றேன் நான்.

''நான் கட்டித்தான் உனக்கு ராசியில்லை'' என்றார்கள்.

என் கண்கள் கலங்கி விட்டன. ராசி பார்ப்பதும் இந்துக்களின் பழக்கமல்லவா ?

நான் நேரே என் கணவரிடம் போனேன். அவர் வெளியே நாற்காலி போட்டு விருந்தாளிகளிடம் பேசிக் கொண்டிருந்தார். கதவருகில் போய், ''கொஞ்சம் வாருங்கள்'' என்றேன்.

பரிதாபமாக என்னைப் பார்த்தபடி எழுந்து வந்தார்.

''சாந்தி முகூர்த்தத்தை இங்கேயே வைத்துக் கொள்கிறோம்'' என்றேன் ரகசியமாக.

''அதொன்றும் வேண்டாம்'' என்றார் மெதுவாக.

''ஏன், நீங்கள் வீட்டுக்கு வரக்கூடாதா?'' என்றேன் கேலியாக.

''இன்னும் வேடிக்கையா?'' என்றார் அவர் வேதனையோடு.

''நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன். பார்த்தீர்களா?'' என்றேன்.

''ஜானகி...!'' என்றார் அவர். அவரது கண்களில் இருந்து 'பொல பொல' வென்று கண்ணீர் வழிந்தது.

''உஸ்! அழாதீர்கள். யாரும் பார்த்தால் என்ன நினைப் பார்கள்? நான் உங்கள் மீது கோபப்படுவதாகவும், நீங்கள் அழுவதாகவும் அல்லவா நினைப்பார்கள்?'' என்று சொல்லி, அக்கம் பக்கம் பார்த்துவிட்டு அவர் கண்களைத் துடைத்து விட்டேன்.

''அடிக்கடி போடுவீர்களே, அந்த கதர் சில்க்! அந்தச் சட்டையைப் போட்டுக் கொள்ளுங்கள். பாண்ட் போடாதீர் கள். வேஷ்டி கட்டுங்கள். எங்கள் வீடு ஆகி வந்த வீடு. ஆனால் ஒன்று விசாலாட்சிதான் பிறக்கப் போகிறாள். விசுவநாதர் அல்ல'' என்றேன்.

நாங்கள் பேசிக் கொண்டிருப்பதை இடைமறித்து யாரா வது எங்களைக் கூப்பிட்டால்தானே? பேசுவதற்கு இடம் கொடுத்து எல்லாரும் விலகிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆகவே மேலும் கொஞ்சம் பேசினேன்.

''நாங்கள் நாலு பேர் பெண்ணாகப் பிறந்தோம். அதே அறைதான் உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடவுள் புண்ணியத்தில் அடுத்த வருஷம் நம் வீட்டில் தொட்டிலாட வேண்டும். இதோ பாருங்கள்! அவளிடத்தில் என்னைப் பற்றி ஒன்றும் பெருமையாகப் பேசாதீர்கள். ஒரு மனைவியைப் பற்றி இன்னொரு மனைவியிடம் பெருமையாகப் பேசினால், உத்தமமான பெண்ணுக்குக் கூடக் கொஞ்சம் பொறாமை வரும். பேச்சுக் களியாட்டத்தில் தன்னை மறந்து 'ஜானகி ஜானகிதான்' என்று சொல்லி விட்டீர்களானால் பாலிலே விஷம் கலந்தது மாதிரி ஆகிவிடும். அவள் என்னைப் பற்றி ஏதாவது பேசினால், 'உண்மைதான் உண்மைதான்' என்று தலையாட்டிக் கொள்ளுங்கள்.



''அவள் ரொம்பச் சின்னப்பெண். இருந்தாலும் அத்தான் மீது அபார மயக்கம். நீங்கள் கண்ணிலே பார்க்கப் போகிறீர் கள். நான் கனவிலே பார்க்கப் போகிறேன்'' என்றேன்.

''இந்தத் திருமணம் எப்படியோ ஜானகி! ஆனால் எனக்கும் உனக்கும் நடந்த திருமணம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

பிறகு வசந்த காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் வைதேகியிடம் போனேன். அவளும் என் தாயின் மகள்தானல் லவா? இருந்த இடத்தைவிட்டு வெளியே வரவேயில்லை.

''அடி கண்ணே! இப்படி ஒரு கணவரை கடவுள் நமக்குக் கொடுத்ததற்காகச் சந்தோஷப்படு! உலகத்தில் மாப்பிள்ளை படித்திருக்கிறாரா? பணக்காரரா? என்று பார்த்துத்தான் பெண் கொடுக்கிறார்களே தவிர, 'நல்ல ஆண் மகன்தானா?' என்று விசாரிப்பதில்லை. அதை அனுபவத்தில் கண்ட உன் அக்காள் அல்லவா உனக்குத் தாலி கட்ட வைத்திருக்கிறாள். ஆன்மா எப்படி புனிதமானதோ, அப்படியே தேகமும் புனிதமானது. ஆயினும் மனைவி புருஷனிடம் மறைக்கக் கூடியது எதுவும் இல்லை. உடலுறவில் கணவனுக்குக் கோபத்தை உண்டாக்கி விட்டால், அது காலகாலங்களுக்கும் பொருந்தாத் திருமணமா கிவிடும். 'கணவனின் ஆசைக் காற்றுக்கு வளைந்து கொடுப்ப வள்' என்ற பொருளில்தான் பெண்ணைக் 'கொடி' என்கிறார் கள். நீ படித்தவள், ஆயினும் இதை எல்லாம் படித்திருக்க முடியாது போய் நன்றாகக் குளித்து விட்டு உள்ளே மஞ்சள் புடவை இருக்கிறது கட்டிக்கொள்'' என்றேன்.

''மஞ்சள் புடவை எதற்கு?'' என்று அவள் கேட்டாள்.

பாவம்! அறியாத பெண். அவளிடம் நான் அதை எப்படிச் சொல்வது? மணப்பெண்ணுக்கு அது முதலிரவுதானா என்ப தைச் சோதிப்பதற்காக, இந்துக் குடும்பத்தில் முதலிரவில் மஞ்சள் சேலை கட்டுகிறார்கள்.

''அந்த விபரம் அனுபவத்தில்தான் தெரிய வேண்டும். போய்க் குளி'' என்றேன்.

அவளைக் குளிக்க அனுப்பிவிட்டு, அறையை விட்டு நான் வெளியே வந்தபோது, எங்கள் ஊர் காளிகோவில் தர்மகர்த்தா கிருஷ்ணசாமி வாண்டையாரின் மனைவி சிவ காமி அம்மாள் காளிக்குப் பூஜை செய்து, ஒரு தட்டில் பூ, பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, குங்குமம் ஆகியவற் றோடு வந்தார்.

அப்பாடா! சகுனம் நன்றாக இருந்தது. சிவகாமி அம்மை யார் ஏழு ஆண் குழந்தைகள் பெற்றவர். வைதேகியை அழைத்துக் கொண்டு போய் அறையில் விடும் பொறுப்பை யும் அவர் கையிலேயே ஒப்படைத்தேன்.

அவர்களும் சம்மதித்தார்கள்.

பிறகு நான் வைதேகியைச் சீவிச் சிங்காரித்து அழகு படுத்தினேன்.

அவள் முதலில் என் தாய் தந்தையர் காலில் விழுந்தாள். பிறகு மாமியார் காலில் விழுந்தாள். நான் மறைந்து கொண் டேன். என்னைத் தேடுவாள் என்று எனக்குத் தெரியும்.

எதற்கு இந்த அமங்கலம்?

அம்மாவிடம் மட்டும் நான் விஷயத்தை சொல்லியிருந்த தால், ''அக்கா வர நேரமாகும். நீ போ!'' என்று அவர்கள் சிவகாமி அம்மையாரின் கைத்தாங்கலில் வைதேகியை அனுப்பி வைத்தார்கள்.

எங்கள் வீட்டு மொட்டை மாடியில் படுத்தவாறே அவர்கள் உறவைக் கனவு காணத் தொடங்கினேன்.

என்ன அதிசயம்? இவ்வளவு மனமுவந்து கட்டிக் கொடுத்த என்னாலேயே அப்படி ஒரு கனவைக் காண



முடியவில்லையே? 'வழக்கமான பெண்மையில் என்னிடம் இன்னும் கொஞ்சம் மிச்சமிருக்கிறது' போலிருக்கிறது என்று எண்ணி, என் தாயார் அடிக்கடி படிக்கும் 'ராமாயண வசனம்' என்ற புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

''ராமன் சப்ரமஞ்சத்தில் காத்துக் கொண்டிருக்கிறான். ஜானகி-இல்லை வைதேகி உள்ளே நுழைகிறாள். பூரித்துப் பொங்கி நிற்கும் அவளது பருவ அழகை புருஷோத்தமனும் ஆடவரில் மேலானவருமான ஸ்ரீராமன் தன்னை மறந்து ரசிக்கத் தொடங்குகிறான். ஆண்- பெண் சிருஷ்டியின் நோக் கமே பூலோகத்தை வளர்ப்பது என்பதால் அந்த உறவு பற்றி அவன் கூச்சப்படவில்லை. அவனோ ஏக சிந்தையன். அத னால், தானே அவளை நெருங்க விரும்பாமல் அமைதியாக இருந்தான்.

அவளோ பெண்களிலேயே உத்தமி அவள் எப்படி நெருங்குவாள்? ஆனால் பொழுது போய்க் கொண்டிருக் கிறதே?

''ஏதாவது உண்ணுகிறீர்களா?'' என்று கேட்டாள் வைதேகி.

''உம்'' என்றான் ராமன்.

''தேன், தினைமா?'' என்றாள் அவள்.

''அது முனிவர்களுக்கல்லவா?'' என்றான் அவன்.

''பிறகு நீங்கள் விரும்பக் கூடியது என்ன?'' என்று கேட்டாள் வைதேகி.

''நான் விரும்பக்கூடியது ஒன்றே, அதுவே இந்தக் கேள்வியைக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது?'' என்று கேட்டான் ராமன்.

வைதேகி நாணத்தால் தலை கவிழ்ந்தாள்.

''வானத்துச் சந்திரன் பூமியைத்தான் பார்க்கும்'' என்றான் ராமன்.

'இந்த பூமி உங்கள் மார்பைப் போலவே உறுதியாக இருக்கிறது' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டாள் வைதேகி.

உலகத்தின் சுக துக்கங்களை நிர்ணயிப்பவனும் ராஜ்ய பாரத்தில் உலகிற்கே வழிகாட்டியாக விளங்குபவனுமான ராமன், தன் வாழ்க்கையின் சுக துன்பங்களில் பங்குகொள்ள வந்திருக்கும் வைதேகியை மெல்ல அணைத்தான்.

அன்பு கலந்த இருவரது அங்கங்களும் கலந்தன; கங்கையும் யமுனையும் சங்கமித்தன.

அந்தப் பிரவாகத்தில், வானத்துச் சந்திரன் மிதந்து கொண்டிருந்தான்.

சந்திரனை மேற்கே தள்ளிய பிரவாகம், சூரியனை கிழக்கே கொண்டு வந்தது.''

இதை நான் படித்துக் கொண்டிருக்கும்போதே பொழுது விடிந்து விட்டது.

எங்கள் வீட்டில் வழக்கமாக நான்தான் முதலில் குளிப்பது வழக்கம்.

இதென்ன அதிசயம்? நன்றாகக் குளித்துவிட்டு, தலையில் துண்டு சுற்றிக் கொண்டு வந்து நின்றாள் வைதேகி.

''அக்கா! இப்போதாவது ஆசீர்வாதம் பண்ணேன்'' என்று காலில் விழுந்தாள்.

நேற்று நான் மறைந்து கொண்டதைப் பற்றி, ஏதாவது கேட்டுவிடப் போகிறாள் என்று பயந்து, பேச்சை மாற்றுவதற்காக, ''இதென்னடி! கன்னத்தில் காயம்?'' என்றேன்.



''எல்லாம் உன் கணவர் செய்த வேலை'' என்றாள்.

''என் கணவரா? திமிரா உனக்கு!'' என்றேன்.

அவள் நாணத்தில் தலை கவிழ்ந்தாள்.

''எப்படியடி? 'சந்தோஷமாக' இருந்தாயா?'' என்று ரகசியமாகக் கேட்டேன்.

அவள் வெட்கத்தோடு என் தோளில் சாய்ந்தபடி, ''உன் கணவருக்கு இரண்டும் கூடப் போதாது'' என்றாள்.

''அது போதும்மா எனக்கு'' என்றேன்.

திடீர் எனக் கீழே குழந்தை அழும் சத்தம் கேட்டது. இரண்டாவது சகுனம்.

கடவுள் எங்கள் குடும்பத்தில் கருணை வைத்திருக்கிறார். நாங்கள் சென்னைக்கு வந்த பிறகு 'மாமூலான' சக்களத்திகளைப் போல வாழவில்லை. ஒரே ரத்தமல்லவா? கலகலப்பாகப் பேசிப் பழகுவோம். அவள் எனக்கு அலங்காரம் செய்வாள்; நான் அவளுக்கு அலங்காரம் செய்வேன். இரவு வந்தால் 'நீ போ' என்பாள். நான், 'நீ போ' என்பேன்.

அதுதானே, நாகரிகம்!

திருமண வீட்டில் பழங்கள் கொடுக்கும்போது, நாமே கொடுத்தால் ஒவ்வொரு முழுப் பழம் கொடுக்க வேண்டியிருக்கும். அதுதான் நமக்கு நாகரிகம்.

அதையே உரித்துத் தட்டிலே போட்டு நீட்டினால், எடுப்பவர்கள், ஒரு சுளைதான் எடுப்பார்கள் — அதுதான் அவர்களுக்கு நாகரிகம்.

'நான் போகட்டுமா?' என்று கேட்கும் எண்ணம் எங்கள் இருவருக்கும் வந்ததே இல்லை.

ஆனால், நாளாக, நாளாக என் கணவர் 'வைதேகி' என்ற வார்த்தையையே அதிகம் உச்சரிப்பது வழக்கமாகி விட்டது.

அதிலே எனக்குப் பொறாமை இல்லை, விரும்பியது தானே நடந்திருக்கிறது.

மாதங்கள் இரண்டாயின.

'வைதேகி முழுகாமல் இருக்கிறாளா?' என்பதைத் தெரிந்து கொள்ள நான் தினமும் ஆசைப்பட்டேன்.

நல்லவேளை! 'நாற்பது நாட்கள் ஆகிவிட்டன' என்றாள் அவள் ஒருதடவை.

எனக்குப் பரம சந்தோஷம். நானே கருவுற்றது போல ஆனந்தப்பட்டேன்.

என் தாய் பாடிய தாலாட்டுகளை எல்லாம் நினைவு படுத்திக் கொண்டேன்

எங்கள் கணவரிடம் இந்த விஷயத்தைச் சொல்ல வேண் டாமா? வைதேகி சொல்லமாட்டாளே!

அதற்காகப் பரபரப்போடு அவர் அறைக்குப் போனேன்.

''தெரியுமா, சங்கதி?'' என்றேன்.

''என்ன?'' என்றார்.

''நாம் இனி சுவிகாரம் எடுக்க வேண்டியதில்லை'' என்றேன்.

''ஜானகி'' என்று என்னைப் பார்த்த அவரது கண்கள் கலங்கின.

''உன் வயிற்றில் ஒரு பிள்ளையில்லையே'' என்றார்.

''நான் வேறு, என் தங்கை வேறா?'' என்றேன்.



''இரண்டு மாதங்களுக்குள் நீ எவ்வளவு இளைத்துப் போய் விட்டாய்?'' என்றார்.

நான் இளைக்கவில்லை. ஒரு வேளை இளைத்தும் இருக்கலாம். அவர் அடிக்கடி 'வைதேகி வைதேகி' என்று கூப்பிடுவதைப் பார்த்து, என் இயற்கையான பெண்மை இளைக்கத் தொடங்கியிருக்கலாம். ஆனால் என் ஆன்மா அப்படியே உறுதியாக அல்லவா இருக்கிறது.

''நான் இளைக்கவில்லையே'' என்றேன்.

அப்படியே கட்டிப் பிடித்து ஒரு முத்தம் இட்டார்.

அவளும் சந்தோஷமாக இருக்கவேண்டும். நானும் கஷ்டப்படக் கூடாது - அவருக்கு எவ்வளவு நல்ல உள்ளம்.

மாதங்கள் பத்து களங்கமில்லாமல் கண்ணீரும் இல்லா மல் ஓடின.

பேறுகாலம் வந்தது.

தலைப் பிரசவம் தாய் வீட்டில் நடக்கவேண்டும் என்பது தான் சம்பிரதாயம்.

சென்னையிலே எவ்வளவு பெரிய ஆஸ்பத்திரிகள் இருந் தாலென்ன? தாய் வீட்டை விட வேறு மகப்பேறு மனை உண்டா? தாயைவிட ஒரு அற்புதமான மருத்துவச்சி உண்டா?

வைதேகியை அழைத்துக் கொண்டு போவதற்கு என் தாயாரே வந்திருந்தார்கள்.

அவளைத் தனியே அனுப்பிவிட்டு, நான் வீட்டில் இருக்கலாமா?

'நம்மை அனுப்பிவிட்டுப் புருஷனோடு கொஞ்சுவதற் காக வீட்டில் இருக்கிறாள்' என்று கருதிவிட்டால்...?

அவள் அப்படிக் கருதமாட்டாள் என்றாலும், அந்த நினைவுக்கு ஒரு இடம் கொடுப்பானேன்?

''நானும் போகிறேன்!'' என்று சொன்னேன் என் கணவரிடம்.

''இதோ பார்! ஒரு பதினைந்து நாட்களாவது நாம் இருவரும் சந்தோஷமாக இருப்போமே!'' என்றார் அவர்.

''இதென்ன நியாயம்? தலைப் பிரசவம், தாயும் பிள்ளையும் வேறு வேறு ஆக வேண்டும் என்பார்கள். இரண்டும் இரண்டு பத்திரமாக வேண்டும் என்பார்கள் போவதோ கிராமம். பிரசவிப்பது அவள்தான் என்றாலும் உடல் வேதனை தான் அவளுக்கு. மனவேதனை எனக்கல்லவா? குழந்தை வெளி உலகத்துக்கு வந்த உடனே அதைப் பார்க்க வேண்டியவள் நானல்லவா? குழந்தையோடு அவளைக் கூட்டிக் கொண்டு வந்த பிறகு, மூன்று மாத காலத்துக்கு நான்தானே உங்கள் அருகில் இருக்கப் போகிறேன்! இப்போது என்னை அனுப்பி வையுங்கள்'' என்றேன்.

அவர் என்னை வழி அனுப்பி வைத்தார்.

மிகவும் தாமதமாக சென்னையில் இருந்து புறப்பட்டதால், எங்கே ரயிலிலேயே பிரசவமாகி விடுமோ என்று நான் பயப்பட்டுக் கொண்டிருந்தேன்.

நல்லவேளை, அபிராமி சந்நிதிக்கு வந்து சேரும் வரை இடுப்புவலி எடுக்கவில்லை.

வீட்டுக்கு வந்தோமோ இல்லையோ வலி ஆரம்பமாகி விட்டது. எல்லாம் ஆத்தாள் அபிராமியின் அருள்.

எங்களூரில் பெரிய டாக்டர்கள் தேவை இல்லை. ஊரிலுள்ள ஒவ்வொரு தாயும் டாக்டர்.

CPL 6 9 3 8 0 1



பிறந்த குழந்தையை லாவகமாகத் தூக்குவதில் அவர்களிடம் லேடி டாக்டர்கள் பிச்சை வாங்க வேண்டும்.

மிகவும் சின்னப் பெண்ணல்லவா வைதேகி? வேதனை சற்று அதிகம்தான்.

693801

குழந்தை என் தாயின் கைகளிலே வந்து விழுந்தது. நான் அதை உற்றுப் பார்த்தேன்.

894.8113
KAN

''ஐயோ! அம்மா! பராசக்தி! அபிராமி! மகாகாளி! இதென்ன கொடிய சோதனை? குழந்தைக்கு இரண்டு கண்களும் இல்லையே? கண்கள் இருக்க வேண்டிய இடம் மேடாக இருக்கிறதே! ஐயோ படாத பாடுபட்டது இதற்குத்தானா?''

வைதேகி மயங்கிக் கிடந்தாள். என் கண்ணீரையோ என் தாயின் கண்ணீரையோ, அவள் காணவில்லை.

நான், ''அம்மா! அம்மா!'' என்றேன். என் தாயார், ''மகளே! மகளே!'' என்றார்கள். இருவரும், ''தெய்வமே, தெய்வமே!'' என்றோம்.

''ஆண் குழந்தையைக் கொடுத்துக் கண்களைப் பறித்துக் கொண்டாயே தாயே!'' என்று கதறினோம்.

இதை எப்படி அவருக்கு எழுதுவேன் ?

ஒரு குருட்டுக் குழந்தை பிறந்திருக்கிறது என்று எழுதினால் அவர் வைதேகியை வெறுத்துவிடக் கூடுமே! குடும்பத்தில் கசப்பு அப்படியும் ஆரம்பமாவதுண்டே?

வேறென்ன செய்வது? குழந்தையைக் கொன்றாவிட முடியும்? ஏன், கொன்றுவிடுவது கூட நல்லதுதான்! ஒரு குழந்தை ஏன் ஐம்பது அறுபது வருஷங்களுக்குக் கண்கள் இல்லாமல் தடுமாற வேண்டும்? ஒருதாய் ஏன் வாழ்நாள் முழுவதும் அதற்காக அழ வேண்டும்? அதைவிடப் பத்து நாள் அழுகையோடு கதை முடிந்துவிடுமே!

(State & Central) Li

அகிம்சா மூர்த்தியான காந்தி அடிகள் கூட ஒரு முறை நோயால் துடித்துக் கொண்டிருந்த கன்றுக் குட்டியைக் கொன்றுவிடச் சொல்லவில்லையா?

ஆனால் எங்களுக்கு அந்தத் தைரியம் இல்லை!

மிக ஜாக்கிரதையாக அதுபற்றி என் கணவருக்கு எழுதினேன்.

''கவலைப்படாதீர்கள். அவளுக்குக் குழந்தை பிறக்கும் என்பது உறுதியாகிவிட்டது. இன்னும் எத்தனையோ குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உங்களுக்கென்ன வயதா ஆகிவிட்டது'' என்று கடிதத்தில் ஆறுதல் கூறியிருந்தேன்.

இந்தச் சோதனையைத் தாங்கிக்கொள்ள அவரால் முடியும். ஆனால் அவரது தொழிற் கூட்டாளிகள், ''என்னப்பா, உன் குழந்தைக்குக் கண் இல்லையாமே?'' என்று கேட்டால், அவருக்கு வைதேகி மீதல்லவா ஆத்திரம் வரும்?

ஆத்தாள் அபிராமிதான் காத்தருள வேண்டும் என்று முடிவு கட்டினேன்.

மாலையில் வைதேகி மெதுவாகக் கண் விழித்தாள். அவள் கண்கள் விழித்து விழித்துத் தூங்கக் கூடியவை. ஆனால் விழிக்கவே முடியாத கண்களை அல்லவா அவள் குழந்தை வடிவத்தில் காணப் போகிறாள்?

''அக்கா! என் குழந்தை எங்கே?''

''இருக்கிறான் அம்மா! அதோ, அந்தத் தூளியில் தூங்குகிறான்!''

''ஆண் குழந்தையா?'' என்றாள் வைதேகி.

அம்மா அபிராமி! அதற்கு மேல் அவள் கேட்டுவிடக் கூடாதே!



''அக்கா, அவனைக் கொண்டு வா! நான் பார்க்க வேண்டும்!''

கடவுளே! சோதனை ஆரம்பமாகி விட்டது! காட்டாமல் இருக்க முடியுமா? பயந்து கொண்டே குழந்தையைக் கொண்டு போய்க் கொடுத்தேன்!

அதைப் பார்த்ததுதான் தாமதம், அவள் 'வீல்' என்று கத்தினாள்; மூர்ச்சையுற்றாள்.

தான் எதிர்பார்த்ததுதான்! அந்தச் சத்தத்தைக் கேட்டுக்கூட என் தாயார் எழுந்து வரவில்லை.

பிரசவம் பார்த்துவிட்டுப் படுத்த அவர்களுக்கு 102 டிகிரி சுரம் அடித்தது.

அடுத்து நான் என்ன செய்ய முடியும்?

பழையபடி ஒரு தத்துவப் போதனை.

கண் விழித்த வைதேகிக்கு, கண்ணன் வடிவிலே நின்று கீதை போதித்தேன்.

'அடுத்த வருஷம் உனக்கு அழகான பிள்ளை பிறக்கும்' என்பதைத் தவிர, நல்ல ஆறுதல் வேறு என்ன இருக்க முடியும்.

பத்து நாட்கள் அவள் குழந்தையைப் பார்த்துப் பார்த்து அழுதாள்.

பக்குவம் மிக்க என் தாயார் அப்போது தான் படுக்கையை விட்டு எழ ஆரம்பித்தார்.

''அதற்காக என்னம்மா, மூன்றாவது பெண்ணையுமா கேட்கப் போகிறேன்?'' என்று ஆறுதல் கூறினேன்.

வைதேகிக்கு தெளிந்துவிட்ட நிலை.

ஊரிலே எல்லோரும், ''இது ஏதோ சாமி குறைதான்'' என்றார்கள்.

மரத்தடி ஜோஸியரிலே இருந்து, வான மண்டல சாஸ்திரம் கற்ற குமாரசாமி ஜோதிடர் வரை அனைவரையும் கூப்பிட்டுக் கேட்டோம். ''சுவாமி குறைதான்'' என்றார்கள்.

ஜோதிடர் வெளியே போனதும் திடீரென்று மைதிலி தலையை விரித்துக் கொண்டு கத்தினாள்.

சீதாவுக்கு பதின்மூன்று வயது. மைதிலிக்கு பத்து வயது. இருவரும் எதிலுமே கலந்துக் கொள்ள மாட்டார்கள். யாரோடும் பேசமாட்டார்கள். என் தாயாரின் பக்கத்திலேயே இருப்பார்கள். என் தாயின் வயிற்றிலேதான் தலை வைத்து தூங்குவார்கள்.

திடீரென்று மைதிலி கதறுவானேன்?

''கேளுங்கடி, கேளுங்க! இது காளியாத்தா கொறை. தாயைக் கொண்டு போக வேண்டியது; குட்டியைக் கொண்டு போகப் போகுது! கொழந்தையை நல்லாப் பாருங்கடி, பாருங்க!'' - என்றாள் மைதிலி.

என் தாய் எழ முடியாமல் எழுந்து ஓடி வந்தார்கள். நானும் பதறிப் போய் ஓடினேன். வைதேகியும் தள்ளாடியபடி வந்தாள்.

தூளியிலே எங்கள் பாலன் பிணமாகக் கிடந்தான். பெயர் சூட்டும் முன்னாலேயே உயிர் விட்டு விட்டான்.

அந்தகாரமே நிறைந்த உலகத்தை நாம் ஏன் பார்க்க வேண்டும் என்று கண்கள் இல்லாமலேயே வந்தான்; இரக்கமில்லாத சமுதாயத்தில் நாம் ஏன் வாழ வேண்டும் என்று சுருக்கமாகவே முடித்துக் கொண்டான்.

தீமைக்கும், துயரங்களுக்கும் மூலகாரணமான கண்கள்; ஆனந்தத்திற்கும் அழுகைக்கும் அடிக்கடி பயன்படும் கண்கள்-



''அவை எனக்கும் இருந்தாக வேண்டுமே, எங்கே?'' என்று கேட்க இறைவனிடம் போய்விட்டான்.

— இப்படி உளறித் தத்துவம் பேசுவதைத் தவிர அந்த நேரத்தில் வேறு வழி?

இரண்டு வருஷங்களாக மைதிலியின் மீது என் பாட்டியின் ஆவேசம் வருவதாகப் பிறகுதான் என் தாயார் சொன்னார்கள்.

பொய் சொல்வானேன் - நாங்கள் அதிகம் அழவில்லை. ஓரளவுக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தினோம்.

இந்த மரணத்தையும் நான் அவருக்குக் கடிதம் மூலம் தான் தெரிவிக்க வேண்டுமா? எதற்கு? பதினைந்தாவது நாளே புறப்பட்டு விட்டோம்.

பெண்கள் எப்போதும் சிக்கனமானவர்கள். கணவன் டிக்கட் எடுத்தால்தான் முதல் வகுப்பில் போவார்கள். தாங்களோ, தங்கள் தாய் தந்தையரோ டிக்கட் எடுப்பதென்றால், மூன்றாம் வகுப்புக்குக் கீழே என்ன இருக்கிறதென்று பார்ப்பார்கள்.

மூன்றாம் வகுப்பில் எங்களை ஏற்றி விட்டு விட்டு, எங்கள் தாயார் கண்ணீரோடு விடை பெற்றுக் கொண்டார்கள்.

ரயில் புறப்பட்டது.

எங்கள் எதிரே ஒரு நடுத்தர வயது அம்மையார் உட்கார்ந்திருந்தார்.

வற்றி வறண்ட தேகம். அவள் கையில் ஒரு அழகான ஆண் குழந்தை. அந்தக் குழந்தை பசி எடுத்து, பாலுக்காகத் தாயின் முந்தானையை விலக்கி, விலக்கிப் பார்க்கிறது. தாய் அதைத் திரும்பத் திரும்ப மூடிக் கொள்கிறாள்.

பாவம்! பாலில்லை. எத்தனை நாள் பட்டினியோ?

வைதேகியின் ஏக்கத்தை அதிகரிக்க இந்தக் காட்சி போதாதா?

நான் அவளைத் திரும்பிப் பார்த்தேன். அவள் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள். மார்பைப் பார்த்தேன்; மேலாடை நனைந்திருந்தது.

அங்கே பால் இல்லாமல் குழந்தை அலறுகிறது;

இங்கே குழந்தை இல்லாமல் பால் ஊறுகிறது.

பளிச்சென்று வைதேகி என்ன நினைத்தாளோ என்னமோ கைநீட்டி அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். ஆசனத்தின் ஓரத்திற்கு வந்து வெறி பிடித்தவள் போல பால் கொடுக்க ஆரம்பித்தாள்.

ஒரு பெண் தாயானவுடன், கணவனைவிடக் குழந்தையே அவளது பாசத்தையும், நேசத்தையும் எடுத்துக் கொள்கிறது.

சுமார் அரைமணி நேரம் அந்தக் குழந்தை பால் குடித்தது. கண்களை மூடி அவள் ரசித்த சுகம் இருக்கிறதே, அது நாகரிகப் பெண்களுக்குத் தெரியாது.

வைக்கோல் கன்றுக் குட்டியைக் காட்டிப் பசுமாட்டை ஏமாற்றும், சென்னை நகரத்துப் பால்காரர்களைப் போல் ரப்பரை வாயிலேயும், புட்டியை கையிலேயும் கொடுத்து விடும் நாகரிகப் பெண்கள் கருத்தரிப்பதைவிட, கட்டுப்பாடு செய்து கொள்வது நல்லது.

வாரியார் சுவாமிகள் சொன்னது போல, பழங்காலக் குழந்தைகளெல்லாம் தாய்ப்பாலிலே வளர்ந்தன; தாய்ப் பாசம் இருந்தது. இப்போது புட்டிப் பாலிலே வளர்கின்றன; புட்டிப் பாசம் அதிகரிக்கிறது.

தொடர்ந்து தாய்ப்பால் கொடுத்து வந்தால் மார்பழகு கெட்டு விடுமாமே!



இந்த மார்பை எத்தனை பேர் பார்க்கப் போகிறார்கள்? கணவன் மட்டும்தானே!

எவன் இதற்கெல்லாம் காரணமானவனோ, அவன் அது எப்படி இருந்தாலும் பார்க்க வேண்டியவன் தானே?

ஏன், பாலும் கொடுத்துவிட்டு, மேலும் அழகாக்கிக் கொள்ள பழங்காலத்தில் கூட மருத்துவம் இருந்ததே!

அந்தக் குழந்தையோ இனி ஏழு நாட்களுக்குப் பால் தேவை இல்லை என்பது போல் குடித்து முடித்தது.

''ரொம்ப நன்றியம்மா!'' என்றாள் அந்தத் தாய் குழந்தையை வாங்கிக் கொண்டு.

அந்த அம்மையார் என்னைப் பார்த்து, ''இந்தப் பெண்ணுக்குக் குழந்தை பிறந்து இறந்து பேச்சா?'' என்றார்கள்.

''ஆமாம்'' என்றேன்.

''மூக்கு உனக்கு அழகா இருக்கிறது. மூக்கும் குத்தி இருக்கிறாய். ஏன், மூக்குத்தி போடவில்லை?'' என்று கேட்டார்கள்.

''வசதி இருக்கிறது. என்னமோ அதைப் பற்றி நினைக்கவில்லை நான்!'' என்றேன்.

உடனே தன் மடியில் இருந்து ஒரு சிவப்புக்கல் மூக்குத்தியை எடுத்து, இதோ இதைப் போட்டுப்பார்!'' என்றார்கள்.

ஏனோ அதை எனக்கு மறுக்கத் தோன்றவில்லை.

ரயில் விழுப்புரத்தில் நின்றது. அந்த அம்மையார் குழந்தையோடு எழுந்து, ''நான் கொஞ்சம் ரொட்டி வாங்கி வருகிறேன்...'' என்றார்கள்.

நான், ''மூக்குத்தி...'' என்றேன்.

''வைத்திரு. வாங்கிக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

ரயில் புறப்பட மணி அடித்துவிட்டது. நான் தலையை வெளியே நீட்டி பிளாட்பாரத்தில் பார்த்தேன். அந்த அம்மை யாரைக் காணவில்லை. ரயிலும் புறப்பட்டுவிட்டது.

பிளாட்பாரத்தை ரயில் கடக்கும் வரை தேடிப் பார்த் தேன்; அந்த அம்மையாரைக் காணவில்லை. ''மூக்குத்தியைப் போட்டுக்கொள்'' என்ற அவரது குரல் மட்டும் கேட்டது.

என்ன அதிசயம் இது!

நான் மூக்குத்தியையே திரும்ப திரும்பப் பார்த்தேன். அது ஒரு மூன்று கல்பதித்த மூக்குத்தி. அதன் ஒளி கண்ணைப் பறித்தது.

பால் கொடுக்கக்கூட சக்தி இல்லாத அந்த அம்மையார் இந்த மூக்குத்தியை விற்பதற்கு வைத்திருப்பார்கள் போலிருக் கிறது. அட பாவமே! அதையும் என்னிடம் கொடுத்து விட்டாரே! 'போட்டுக்கொள்' என்று அவர் சொல்வது போலவே சத்தமும் கேட்டதே!

'சரி எப்போதாவது சந்தித்தால் பணத்தைக் கொடுத்து விடலாம்' என்று கருதி அந்த மூக்குத்தியைப் போட்டுக் கொண்டேன்.

''உனக்கு இது ரொம்ப அழகாக இருக்கிறதே...!'' என்றாள் வைதேகி.

பொழுது விடியும்போது ரயில் எழும்பூரில் நின்றது.

எங்கள் கணவர் அங்கே கவலையோடு காத்துக் கொண்டி ருந்தார்.

எங்களை அவர் பயத்தோடு வரவேற்றது போல் தோன் றிற்று.



இறங்கியதும் இறங்காததுமாக கவலை தோய்ந்த குர லில், ''குழந்தை எங்கே?'' என்றார்.

வைதேகி பதில் பேசாமல் தலை குனிந்தாள்.

நான், ''அது இறந்துபோய்விட்டது!'' என்றேன்.

அவர் கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீரும், அடி வயிற்றில் இருந்து ஒரு பெருமூச்சும் வெளிவந்தன. வீட்டுக்குள் நுழைந்ததும் கொஞ்சம் கொஞ்சமாகக் கவலை கள் மறையத் தொடங்கின.

பழைய நினைவுகளை மறக்கடித்துக் கொள்வதிலும், புதிய நினைவுகளை வரவழைத்துக் கொள்வதிலும்தானே உறவின் சுகம் இருக்கிறது.

காலை உணவு அருந்தும்போது இருந்த மௌனம் போகப்போக விலகி, மதிய உணவின்போது கலகலப்பாகப் பேச ஆரம்பித்தோம்.

மாலை ஏழு மணி இருக்கும்.

மாடியில் இருந்து அவர், ''வைதேகி!'' என்று கூப்பிட் டார்.

நான் மடமடவென்று மாடிக்குப் போய், ''என்னது? அவள் பச்சை உடம்பு!'' என்றேன்.

''சீ பைத்தியம்! ஆறுதல் சொல்லக் கூப்பிட்டேன். வேண்டுமானால் நீயும் வா!'' என்றார்.

''இரண்டு பேருமே வரமாட்டோம்!'' என்று சொல்லி விட்டுக் கீழே போனேன்.

''சீக்கிரம் சாப்பிடு அக்கா!' என்றாள் வைதேகி.

''ஏண்டி அவ்வளவு அவசரம்?'' என்று கேட்டேன்.

''விஷயம் இருக்கிறது!'' என்றாள்.

''என்னடி விஷயம்...?'' என்றேன்.

''பாவம் அத்தான்! ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது!'' என்றாள்.

''ம்... புரிகிறது, புரிகிறது! நீ இப்படி இருக்கும்போது நான் அப்படி இருப்பதா?'' என்றேன்.

என்னைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து வழக்கம் இல்லாத வழக்கமாக வாசனைத் தைலம் போட்டுத் தலையை வாரிவிட்டாள்.

தலைக்கு மல்லிகைப் பூ வைத்து விட்டாள்.

''எப்பொழுதுமே மல்லிகைப் பூதான் வைக்க வேண்டும். வாசம் இல்லாத பூ வைத்தால் கணவனுக்குப் பாசம் இல்லா மல் போய்விடும்!'' என்றாள்.

''எனக்கு நீ சொல்கிறாயா...?'' என்றேன்.

''கொஞ்சம் பவுடர் போடட்டுமா...?'' என்றாள்.

''இந்தா! பெண்கள் மஞ்சள்தான் பூச வேண்டும். இல்லை என்றால் மீசை முளைக்கும்!'' என்றேன்.

''அத்தான்! அத்தான்!'' என்று கூப்பிட்டாள். அவர் வந்தார்.

எங்கள் இருவரையும் மேஜையின் முன் சாப்பிட உட்கார வைத்தாள்.

''நீங்களே பரிமாறிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டு, நேரே மாடிக்கு ஓடினாள்.

கொஞ்ச நேரத்தில் கீழே இறங்கி வந்தாள்.

நாங்கள் சாப்பிட்டு முடித்திருந்தோம்.



ஏதோ முதலிரவுக்கு அனுப்புவது போல என்னைப் பார்த்து, '' நீ மாடிக்குப் போ!'' என்றாள்.

எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

நான் கணவரைப் பின் தொடர்ந்து மாடிக்குச் சென்றேன்.

அங்கே அலங்கார மெத்தை விரிப்பு விரிக்கப்பட்டு, அதன் மீது மலர்கள் தூவப்பட்டிருந்தன. ஊதுவத்தி ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.

எனக்கும் அவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

போனதும் போகாததுமாக என்னைப் பிடித்து மெத்தை யில் தள்ளினார்.

''என்ன அநியாயம்?'' என்றேன்.

''எத்தனை நாளாக ஏமாற்றினாய்...?'' என்றார்.

''சும்மா இருப்பதே சுகம்!'' என்றேன்.

''ஆமாம், இந்த மூக்குத்தி ஏது? பார்க்கும்போதே மயக்கம் வருகிறதே! வெகு நேரமாகக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்; தனியாக நீ சிக்கவில்லை. உன் அம்மா கொடுத்தார்களா?'' என்றார்.

நான் நடந்த கதையைச் சொன்னேன்.

''சரி, நடக்க வேண்டியதைக் கவனிப்போம்!'' என்று பக்கத்தில் உட்கார்ந்தார்.

இப்போதெல்லாம் அவர் ஏனோ வெட்கமில்லாமல் விளக்கையே அணைப்பதில்லை.

ஆனால் என்ன அதிசயமோ என்றுமில்லாத ஒரு புதிய உணர்ச்சி அன்று இரவு என் உடலில் எழுந்தது.

உடம்பு முழுவதும் ஒரு சுகம் பரவிற்று. மெய்சிலிர்த்தது. கண்கள் மூடியும் மூடாமலும் மயங்கின. கடைசியில் வயிற்றுக்குள்ளேயே ஏதோ புது உணர்ச்சி தோன்றிற்று. விவரந் தெரியாத ஒரு பரவசம்...!

★

வைதேகி : வாக்கு மூலம் : 5

அக்காள் கர்ப்பமாகி விட்டாள்.

''தாயே அபிராமி! உனக்கு தங்கக் காசுமாலை செய்து போடுகிறேன்!'' என்று அபிராமியின் படத்தின் முன் வந்து வணங்கினேன்.

'அக்காள் உடம்பில் கரு அணுக்கள் இல்லை' என்று யார் சொன்னார்கள்?

பத்து வருடங்களுக்குப் பிறகு கூட சிலருக்குக் குழந்தை பிறப்பதில்லையா? ஒரு வேளை அத்தான் சாப்பிட்ட மாத்திரைகளில் சக்தியோ என்னவோ?

காரணம் எதுவானால் என்ன? காரியம் வெற்றி.

'ஒன்றுக்கு இரண்டு கட்டி, ஒன்றும் உருப்படவில்லை' என்று மாமியார் சொல்ல முடியாதல்லவா?

'எல்லாம் ஜாதகப் பலன்' என்று இந்துக்கள் சொல்வதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது? 'காலம் நேரம் வரவேண்டும்' என்பார்களே, அது என்ன?

ஒவ்வொருவர் வாழ்விலும் ஒவ்வொரு காரியத்துக்கு இறைவன் சில தேதிகளை நிர்ணயித்திருக்கிறான். 'எந்தச் சிற்றாறு எந்தப் பேராற்றைச் சந்திக்க வேண்டும்' என்பதையும், 'எந்தப் பேராறு எந்தக் கடலில் கலக்க வேண்டும்' என்பதையும் அவனேதான் முடிவு கட்டுகிறான்.

அப்பாவி மனிதர்கள் எழுதக் கூடியதெல்லாம் வெறும் பரீட்சையே! மார்க் போட வேண்டியவனும் பாஸ் பண்ண வைக்க வேண்டியவனும் அவனே!

இதில் சிபாரிசுகள் எல்லாம் செல்லுபடியகா.

முதலில் மூன்று வருஷம் 'ஜானகி ஜானகி' என்று கூப்பிட்டு வந்த அத்தான், பிறகு ஒன்பது மாதங்கள் 'வைதேகி வைதேகி' என்று வருந்தி அழைத்த அத்தான், இப்போது மீண்டும் ஜானகி பல்லவியையே அதிகம் பாடுகிறார்.

பழமைக்கு முன்னைப் பழைமை புதுமையல்லவா?

மதுரை சோமுவின் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருப்ப வர்கள், திடீர் என்று கிட்டப்பாவின் குரலை ரெக்கார்டிலே கேட்டால் அது புதுமையாகவும் பிடித்தமானதாகவும் தானே இருக்கும்!

இப்படி நான் சொல்லுவதால், என் அக்காள் மீது எனக்குப் பொறாமை வந்து விட்டது என்று கருதுகிறீர்களா?

இல்லை! அவளும் அவரும் சேர்ந்திருப்பதில் எனக்குப் பரம திருப்தி. அவள் ஆனந்தம், நான் பைரவி.

ஒருநாள் அவருக்கு திடீரென்று ஆனந்த பைரவி பாட வேண்டுமென்று ஆசை வந்து விட்டது.

எங்கள் இருவரையும் கூப்பிட்டுப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். எனக்கும் பழைய சுபாவம் திரும்பிவிட்டது.

''இதோ பாருங்கள் அத்தான்! ஒருவர் முன்னிலையில் இன்னொருவர் தோளிலே கை போடுவது நாகரிகமல்ல'' என்று கூறிவிட்டேன்.

அக்காளுக்கு கோபம் வந்து விட்டது.

''அறிவிருக்கிறதா உனக்கு? இங்கென்ன சினிமாப் படமா எடுக்கிறார்கள், வெட்கப்படுவதற்கு? அவருடைய சந்தோஷம்தானே நம்முடைய சந்தோஷம்? நாம் பால வயசில் எப்படியிருந்தோமோ அப்படி இருப்போம்'' என் றாள் அவள்.



''இதெல்லாம் எனக்குப் பிடிக்காது அக்கா'' என்றேன் நான்.

''ஒன்றுமில்லை! உன்னோடு நான் அதிகம் பேசுவதில் இயற்கையாகவே அவளுக்குச் சக்களத்திப் பொறாமை வந்து விட்டது'' என்றார் அத்தான்.

''இதோ பார்! இனிமேல் அத்தானை நீதான் கவனிக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இந்த அறைக்கு நான் இனி வரமாட்டேன்'' என்று கூறி வெளியே போய் விட்டாள்.

''உனக்கு இந்த விளையாட்டுப் புத்தி போகிறதா? ஒரு சிறு வார்த்தை கூட அவள் தாங்கமாட்டாளே! உன்னை அவள் எப்படிக் கருதுகிறாள்? நீ அவளை எப்படிக் கருதுகிறாய்? இதுதானா நீ படித்த படிப்பு? எனக்கு இருவரும் வேண்டாம், நீயும் போ'' என்றார் அத்தான்.

எனக்குச் 'சுருக்'கென்றது. நாகரிகத்தைத்தானே நான் சொன்னேன்? 'கணவனுடைய ஆசை வரம்பு மீறியதாக இருந்தால், மனைவி கட்டுப்பட வேண்டும்' என்று அக்காள் கருதுகிறாள். எனக்கென்ன தெரியும்? அதற்காக அந்த நேரத் தில் நான் பணிந்து போகத் தயாராக இல்லை.

நானும் கீழே இறங்கிப் போய் விட்டேன். கீழ் அறையில் ஊஞ்சலில் படுத்து என் அக்காள் அழுது கொண்டிருந்தாள்.

''நான் என்னக்கா சொல்லி விட்டேன்? இரண்டு பேரும் ஒன்றாக இருந்தால் பார்ப்பதற்கு நன்றாக இருக்குமா? அதற்காகத்தான் சொன்னேன்!'' என்றேன்.

''என்ன அழைப்பு அச்சடித்து ஊரையெல்லாம் கூப்பிட்டி ருக்கிறோமா, பார்ப்பதற்கு? ஊரிலே இரண்டு மனைவி வந்தவுடனேயே முதல் மனைவியைக் கை கழுவி விட்டு விடுவார்கள். மூத்தவளும் பச்சை மரமாக இருந்தால் கூட அவளைப் பட்ட மரமாக எண்ணி விடுவார்கள். ஆனால் இவரோ இரண்டும் பசுமை என்று எண்ணுகிறார். இரண்டு பேரிடமும் சந்தோஷம் பெற விரும்புகிறார். இரண்டு பேரை

யும் சந்தோஷப் படுத்தவும் விரும்புகிறார். இதில் என்ன நாகரிகம், அந்நாகரிகம்? அப்படிப் பார்ப்பதானால், நான் பச்சையாகச் சொல்லுகிறேன்-ஒரு பெண் தன் கணவனோடு பள்ளியறையில் இருக்கும் நிலையே நாகரிகமாகாதே? நாகரிகம் நடத்தையில் இருக்கிறது; கணவனின் படுக்கையில் இல்லை'' என்றாள்.

''சரியக்கா! தெரியாமல் சொல்லி விட்டேன். எனக்குப் புரியாது. மன்னித்துக்கொள்'' என்று அந்த ஊஞ்சலிலேயே அவள் காலடியில் அமர்ந்தேன்.

அவள் முகத்தைப் பார்த்தபோது- படுத்திருந்த நிலையைப் பார்த்தபோது, உத்ர காண்டத்துச் சீதை காட்டுக்குப் போவதற்கு முன் ஊஞ்சலில் படுத்திருந்த நிலையே எனக்கு ஞாபகம் வந்தது.

கொஞ்ச நேரத்தில் அவள் என்னைத் திரும்பிப் பார்த்து, ''போகலாமா?'' என்றாள்.

அதற்குள் எங்கள் கணவரின் தனிமையைப் பற்றி சிந்தித்திருப்பாள் போலிருக்கிறது.

''போகலாம்'' என்றேன்.

படுக்கையில் என் அத்தான் கைகளைத் தலைக்கு வைத்து, மல்லாந்து படுத்தபடி கண்களை மூடியிருந்தார். சத்தம் போடாமல் இருவரும் உள்ளே நுழைந்தோம்.

அவள் கால்மாட்டில் உட்கார்ந்து கொண்டு என்னைத் தலைமாட்டில் உட்காரச் சொன்னாள்.

''ஏன்?'' என்று கேட்டேன்.

''மகாபாரதத்தில் கால்மாட்டில் உட்கார்ந்த அர்ஜுனனுக்குத் தான் கண்ணனின் சகாயம் கிடைத்தது. அர்ஜுனனை முதலில் பார்த்த பிறகுதான் துரியோதனனைப் பார்த்தான் கண்ணன்'' என்றாள் அவள்.



அவளது சத்தம் கேட்டு, அத்தான் விழித்துக் கொண்டாரா என்று பார்த்தேன். விழிக்கவில்லை. உண்மையில் தூங்கினால் தானே விழித்துக் கொள்ள?

அக்காள் மெதுவாக அவர் காலைப் பிடிக்க ஆரம்பித்தாள். கண்ணால் எனக்கு ஏதோ ஜாடை காட்டினாள்.

நான் உடனே நெற்றியைப் பிடித்தேன்.

''உஸ்'' என்று சொல்லி, வேறு ஏதோ ஜாடை காட்டினாள். நான் வெட்கத்தோடு தலையை ஆட்டினேன். உடனே அவள் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

நான், 'அவள் பார்க்கிறாளா' என்று பார்த்துக் கொண்டே, அவரை முத்தமிட்டேன்.

அவள் அந்தப் பக்கமே முகத்தை வைத்துக் கொண்டு, ''என்ன, ஆச்சா?'' என்று கேட்டாள். எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.

அவள் உடனே அத்தானின் கால்களைத் தட்டியபடி, ''ஸ்ரீரங்கநாதருக்கு ஒரு திருப்பள்ளியெழுச்சி பாடட்டுமா?'' என்றாள்.

''எத்தனையோ பேர்கள் பாடிவிட்டார்கள்; இன்னும் ஸ்ரீரங்கநாதர் எழுந்திருக்கவில்லை'' என்று சொல்லியபடி திரும்பிப் படுத்தார், அத்தான்.

''அவர்கள் தனித்தனியாகப் பாடியிருப்பார்கள். நாங்கள் இப்போது இரண்டு பேர் பாட வந்திருக்கிறோம் — அலமேலு மங்கையும், பத்மாவதித் தாயாரும்'' என்றாள் அக்கா.

''அவர்களுக்கும் ஸ்ரீரங்கநாதருக்கும் என்ன சம்பந்தம்? அறிவிருக்கிறதா உனக்கு? ரெங்கநாதர் சம்சாரம் பெயர் ரெங்கநாயகி'' என்றார் அத்தான்.

''எல்லாமே மகாலட்சுமியின் பிரதிபிம்பங்கள் தானே?'' என்றாள் அக்கா.

''அதுசரி! நீதான் என் மகாலெட்சுமி'' என்று எழுந்து திடீர் என்று அக்காளைக் கட்டிப் பிடித்துக் கொண்டார் அத்தான்.

உடனே அக்கா, ''அந்தப பக்கம், அந்தப் பக்கம்'' என்றாள்.

அதற்குள் நான் எழுந்து பாத்ரூமிற்குள் போய்விட்டேன்.

''ஏண்டி! எவ்வளவு சொன்னாலும் என்ன உனக்கு வெட்கம்?'' என்று அக்காளின் குரல் கேட்டது.

திரும்பி வந்தேன். எனக்கு அக்காளைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருந்தது. இப்படியும் ஒரு பெண்ணா?

கணவன் எதை நினைத்தாலும், எப்படி நினைத்தாலும், அப்படியே தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம், புராண இதிகாச காலத்துப் பத்தினிகளைவிட அல்லவா அதிகம் இருக்கிறது!

அதற்குமேல் ஒரு விளக்கம் சொல்வது சரியாக இருக் காது. ஒரு மனிதர் இரண்டு உயிர்களோடு படுத்திருப்பது போல் என் அத்தானுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

நள்ளிரவில், ''கடவுளே! இந்தச் சந்தோஷம் நீடிக்க வேண்டும்'' என்றார் அவர்.

மறுநாள் நானும் அக்காளுமே மிகவும் பிரகாசமாக இருந்தோம்.

'தான் கர்ப்பமாகவில்லையே, என்றுதானே அவள் என் னையும் மணமுடித்தாள்? கர்ப்பமான பிறகுதான் ஒரு வருஷம் பொறுத்திருக்கலாமே' என்ற எண்ணம் கூட அவளுக்குத் தோன்றவில்லையே?

இருவர் கூடி வாழும் வாழ்க்கை பற்சக்கரம் போன்றது.

ஒரு சக்கரத்தின் பள்ளத்தில், இன்னொரு சக்கரத்தின் பற்கள் பொருத்தி நின்றால், ஒன்று ஓடினாலே போதும் இன்னொன்று ஓடும்.



'ஒரு சீசன் வைதேகி, ஒரு சீசன் ஜானகி' என்பது போய், இப்போது நாங்கள் இருவருமே அத்தானோடு ஒன்றாகத் தூங்க ஆரம்பித்தோம்.

மாதங்கள் ஒன்பதாயின.

எங்கள் தாயாரிடமிருந்து கடிதம் வந்தது.

''அன்புள்ள மகளே!

எனக்கும் உடல் நலமில்லை. இங்கே திருக்கடையூரிலும் அவ்வளவு வசதிகள் இல்லை. அதனால் பிரசவத்தை சென் னையிலேயே வைத்துக் கொள்ளலாம். அப்பாவைக் கவனிப் பதற்கு சித்தப்பா குடும்பத்தை இங்கேயே வைத்துவிட்டு நான் நாளை இரவு ரயிலில் புறப்பட்டு வருகிறேன்.

எனக்கும் வைத்தியம் பார்க்க வேண்டியிருப்பதால் அந்த ஊர்தான் வசதியாக இருக்கும். ரயிலடிக்கு நீ வர வேண்டாம், வைதேகியை அனுப்பு.''

- அதை அக்காள் படித்து ஆனந்தக் கூத்தாடினாள்.

''தன் மக்களுக்குத் தாய் வீடு ராசியில்லை என்று அவளே கருதுகிறாள் போலிருக்கிறது'' என்றாள்.

மறுநாளைக்கு மறுநாள் - காலை ஆறு மணிக்குத்தான் ரயில் வருகிறது; எங்கள் அத்தான் நான்கு மணிக்கே எழுந்து எங்களை எழுப்பி விட்டார்.

மாமியாரை வரவேற்பதிலே மருமகனுக்கு எவ்வளவு ஆசை!

இதை அப்படியே அவரிடம் கூட சொல்லி விட்டேன்.

''பெண்ணைக் கொடுத்தாரோ, கண்ணைக் கொடுத் தாரோ என்பார்கள். எனக்கு இரண்டு கண்களையல்லவா கொடுத்திருக்கிறார்'' என்றார் அத்தான்.

''இன்னொருத்தியும் வயதுக்கு வந்திருக்கிறாள் வேண்டுமா?'' என்றேன்.

''இந்த அறையில் இடம் போதாது'' என்றார்.

''ஆசையைப் பாருங்கள், அறை பெரிதாக இருந்தால்! மூன்றும் தேவைப்படுமோ?'' என்றேன்.

''ஏன், மைதிலி என்ன ஆனாள்?'' என்றார்.

''அத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள், வெளியிலிருந்து ஒன்றும் பார்த்து விடாதீர்கள்'' என்றேன்.

எங்கள் பேச்சை அக்கா மிகவும் ரசித்தாள். பாவம்! அவள் எழுந்து உட்காரவே சிரமப்பட்டாள்.

''நீ பேசாம படுத்துக்கம்மா'' என்றார் அத்தான்.

ஒரு குழந்தையைத் தட்டிக் கொடுப்பது போல் அவளைத் தட்டிக் கொடுத்தார்.

அன்றைக்கு மாயவரம் பாசஞ்சர் ரயில் சரியான நேரத்திற்கு வந்து விட்டது. 'அது சில நாட்களில் சரியான நேரத்திற்கும் வருகிறது' என்று ஸ்டேஷனிலே சொன்னார்கள்.

என் தாயார் ரயிலை விட்டு இறங்கினார்கள்.

மாமியாரைப் பார்த்தும் பார்க்காதவராக என் அத்தான் நின்று கொண்டிருந்தார். அதுதானே சம்பிரதாயம்!

வந்ததும் வராததுமாக, ''ஏண்டி! வலி ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டார்கள் என் தாயார்.

''இல்லை'' என்றார் என் அத்தான்.

''உங்களுக்கா வலி?'' என்றேன் நான்.

என் அத்தான் வெட்கப்பட்டுத் திருப்பிக் கொண்டார்.

நாங்கள் வீட்டுக்கு வந்தபோது வாசலிலிலே நின்றாள் அக்கா. வாசற்படியிலேயே எங்கள் தாயாரின் காலைத் தொட்டு வணங்கினாள்.



நான்கு நாட்கள் எங்கள் தாயாரை உட்கார வைத்து நானும் அக்காளும் எங்களின் ஆனந்த வாழ்க்கை பற்றி மாற்றி மாற்றிச் சொன்னோம்.

மகள் நன்றாக வாழ்கிறாள் என்பதைத் தவிர, ஒரு தாய் சந்தோஷப்படுவதற்கு உலகில் வேறு என்ன இருக்கிறது?

சென்னையில் பிரசவத்திற்கு, மிகவும் ராசியான இடம் லீலாவதி ஆஸ்பத்திரி என்றார்கள்.

அது மந்தவெளியை ஒட்டிய அண்ணாமலைபுரத்தில் அமைந்திருக்கிறது. அங்கே என் அக்காள் சேர்க்கப்பட்டாள்.

முன்பு அவள் எனக்குப் பிரசவம் பார்த்தாள்; இப்போது அவள் பிரசவிக்கும் போது நான் அருகிலேயே இருந்தேன்.

குழந்தை பிறந்தவுடனேயே நான் கண்களைத்தான் பார்த்தேன், அது அழகான பெண் குழந்தை, நல்ல வேளை கண்கள் இருந்தன.

எனக்குத் தாளாத மகிழ்ச்சி.

''பெண் குழந்தை பிறந்துவிட்டதே, சம்பந்தியம்மா என்ன நினைப்பார்களோ?'' என்றார்கள் என் தாயார்.

''ஆண்கள் அடங்கிக் கிடந்ததும் உண்டு; பெண்கள் உலகை ஆண்டதும் உண்டு'' என்றேன் நான்.

''சரி! இன்னும் ஐந்து மாதங்கள்தானே! நீயாவது அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடு'' என்றார் என் தாயார்.

ஆம்! நான் அப்போது ஐந்து மாத கர்ப்பம்.

ஒரு வருஷத்திற்கு முன்பு வரை 'என் அத்தானின் உடம்பில் கரு அணுக்கள் இல்லை' என்றவர்கள் இப்போது அவருக்கு 'கர்ப்ப வீரர்' என்றே பட்டம் சூட்டி விட்டார்கள்.

குழந்தையோடு அக்காள் வீடு வந்து சேர்ந்தாள். அப்போதும் எங்கள் தாயார் எங்களுடன்தான் இருந்தார்.

என்னைப் பார்த்து, ''நீங்கள் எல்லாம் என்னடி படித்தீர்கள்? தாலாட்டத் தெரியாமல், சமைக்கத் தெரியாமல் இதென்ன படிப்பு?'' என்று சொல்லிவிட்டு அவர்கள் தாலாட்ட ஆரம்பித்தார்கள்.

''வடக்கே மழை பொழிய
வட புறமாய்க் காற்றடிக்க
வடமதுரை மீனாள்
வைகைக்கே தண்ணி வர
வைகை மணல் ஒதுக்கி
வாழை புன்னை உண்டு பண்ணி
வாடை வந்தும் வீசாதோ
வளர்காற் றடியாதோ
வண்ணமகள் கண்ணயர!
தெற்கே மழை பொழிய
தென்புறமாய்க் காற்றடிக்க
தென்மதுரை மீனாள்
சேங்கைக்கே தண்ணி வர
சேங்கை மணல் ஒதுக்கி
தென்னை புன்னை உண்டு பண்ணி
தென்றல் வந்தும் வீசாதோ
தென்காற் றடியாதோ
செல்வமகள் கண்ணயர!
ஏழு கடல் தாண்டி
எடுத்து வந்த தாமரைப் பூ
பத்துக் கடல் தாண்டி
பறித்து வந்த தாமரைப் பூ''

—ஆம் என் அக்காள் எவ்வளவு ஆவலோடு எதிர் பார்த்த குழந்தை இது?

எங்கள் தாயாரை நாங்கள் வழியனுப்பிய பிறகு தாலாட்டுப் பாடும் பொறுப்பை எங்கள் மாமியார் ஏற்றுக் கொண்டார்.



பழங்காலப் பெண்மையின் மேன்மை நவீனப் பெண்களுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது என்பதை, நான் பணிவோடு ஒப்புக் கொள்கிறேன்.

இப்போது எங்கள் வீட்டுக் கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு தூளியும் வந்து விட்டது.

குழந்தைக்கு எப்போது பசிக்கும், எப்போது அது சிறுநீர் கழிக்கிறது, மலம் கழிக்கிறது என்பது தூங்கிக் கொண்டிருக்கும் தாய்க்கு எப்படித்தான் தெரியுமோ, அது, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

திடீரென்று என் அக்காள் எழுவாள்; பால் கொடுப்பாள்; குழந்தையைச் சுத்தப்படுத்துவாள்.

அப்போது என் மீது கை இருந்தால் அத்தான் தூங்கிக் கொண்டே எடுக்கிறவர்போல், அந்தக் கையை எடுத்துக் கொள்வார்.

காலம் குழப்பம் இல்லாமல் தான் கழிந்தது.

அவளுக்கும் குழந்தை பிறந்து விட்டது; எனக்கும் பிறக்கப் போகிறது; குழப்பத்திற்கு என்ன வேலை?

நான் நிறை கர்ப்பிணியாக இருந்தபோது கிராமத்தில் இருந்து தந்தி வந்தது.

'தாயார் உடல்நிலை மிகவும் மோசம், உடனே புறப்பட்டு வரவும்.'

— தகப்பனார் கையெழுத்திட்டு அது கொடுக்கப்பட்டிருந்தது.

எங்கள் கணவருக்கு அப்போது தொழிற்சாலையில் மிகவும் சுறுசுறுப்பான வேலை.

போனஸ் பிரச்சனையில் வேலை நிறுத்தம் வேறு நடந்து கொண்டிருந்தது.

எந்த முதலாளியிடம் பத்து வருஷம் வேலை பார்த்துக் கை நீட்டிச் சம்பளம் வாங்கி இருக்கிறார்களோ, அதே முதலாளியைப் பார்த்து, அதே தொழிலாளிகள் 'கரடி ஒழிக! குரங்கு ஒழிக!' என்று கோஷம் போடுவது ஜனநாயக நாகரிகம் அல்லவா!

அதைச் சமாளிப்பதற்காக அலைந்து கொண்டிருந்த எங்கள் அத்தான், தான் வர முடியாமல் எங்களை மட்டும் அனுப்பி வைத்தார்.

எங்கள் கணவர் டிக்கட் எடுத்தால் முதல் வகுப்பு டிக்கெட்தான் எடுப்பார்!

ரயில் வசதியாக இருந்தது.

ஆனால் நாங்கள் போவதற்குள் எங்கள் தாயாருக்கு ஏதாவது ஆகிவிடக் கூடாதே என்ற கவலையில் நாங்கள் விழித்துக் கொண்டே இருந்தோம்.

சுவாமி விவேகானந்தர் சொன்னது போல், 'எவள் இல்லை என்றால் நாங்கள் இந்தப் பூமியில் பிறந்திருக்க முடியாதோ, எவளை இழந்து விட்டால் நாங்கள் மீண்டும் பெற முடியாதோ' அவளது மரணத்தைத் தரிசிக்கப் போய்க் கொண்டிருக்கிறோம்.

மாயூரத்திலிருந்து திருக்கடையூர் போகும் வரை எங்கள் உயிர் எங்கள் வசத்தில் இல்லை.

வாடகைக் கார் வீட்டருகே செல்லச் செல்ல ஏதாவது அழு குரல் வருகிறதா என்ற பயத்துடனேயே சென்று கொண்டிருந்தோம்.

எங்கள் வீட்டில் மின்சார விளக்கு உண்டென்றாலும் நாங்கள் சென்றபோது- காலை ஐந்து மணிக்கு - வீட்டின் முன் பகுதியில் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தவுடனே எங்களுக்குப் பகீரென்றது.



இறங்கி வீட்டிற்குள் ஓடினோம். பல உறவுப் பெண்கள் எங்கள் தாயைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்தார்கள்.

இருவரும் கதறிக்கொண்டே ஓடிப்போய், ''அம்மா'' என்றோம். அப்போது அக்காள் குழந்தை என் கையில் இருந்தது.

அக்கா அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ''அம்மா, அம்மா,'' என்றாள்.

அம்மா கண்ணைத் திறந்தார்.

''ஜானகி, வந்துட்டா அம்மா,'' என்றார்.

''வைதேகி எங்கே?'' என்றார்.

''இதோ இருக்கேனம்மா'' என்று நான் பக்கத்தில் போய் அமர்ந்தேன்.

''சீதா எங்கே? மைதிலி எங்கே?'' என்றார்.

அவர்கள் பக்கத்தில் வந்து அம்மாவின் தலையைப் பிடித்துக் கொண்டு, ''அம்மா,'' என்றார்கள்.

''நல்லா இருங்கம்மா, நல்லா இருங்க!'' என்றார் அம்மா.

''உனக்கு ஒண்ணுமில்லைம்மா, ஒண்ணுமில்லை'' என்றோம்.

''பேத்தி எங்கே?'' என்றார். நான் குழந்தையை அவர் முகத்தருகே நீட்டினேன். அதற்கு முத்தமிட்டார்.

''அப்பாவைப் பத்திரமாகப் பார்த்துக்குங்கம்மா'' என்றார்.

என்னைப் பார்த்து, ''உனக்கு நல்லா ஆண் குழந்தை பிறக்கட்டுமா'' என்றார்.

அவர் கண்கள் செருகி; ஆவி பிரிந்தது; எங்கள் தெய்வம் எங்களை விட்டுப் பறந்தது.

கட்டிப் பிடித்துக் கதறினோம்.

அப்பாவிடம் அந்த செய்தியைச் சொல்ல வேண்டுமே? அவர் இருதய வியாதிக்காரராயிற்றே?

தர்மகர்த்த மனைவி சிவகாமி அம்மையார், ''யாரும் போகாதீர்கள்; ஜானகியை அனுப்புங்கள்'' என்றார்.

கொஞ்சம் கொஞ்சமாக விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்றுதான் அக்கா உள்ளே போனாள்.

உள்ளே போன சிறிது நேரத்தில் 'வீல்' என்ற சத்தம் கேட்டது.

எல்லோரும் எழுந்து உள்ளே ஓடினோம், என் தாயார் இறந்த அதே நேரத்தில் எங்கள் தந்தையின் ஆவியும் பிரிந்திருந்தது.

எப்படி வாழ்ந்தார்களோ, அப்படியே போய்விட்டார்கள். பேசி வைத்துக் கொண்டவர்கள் போல் சேர்ந்து சென்று விட்டார்கள்.

★

ஜானகி

வாக்கு மூலம் : 6

பருவம் வந்ததும் வராமலும் நிற்கும் எங்கள் இரு சகோதரிகளுக்கும் இனி நான்தான் தாய். ஆனால், எங்கள் வீட்டிலே அவர்களைக் கொண்டு போய் வைத்திருப்பது நன்றாக இருக்காதே?

மாமியார் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி விட்டால் தப்பாகப் போய்விடுமே? கணவர் சொல்லமாட்டார்.

அதற்காக அவருக்கும், அவர் தாயாருக்கும் தகராறு வரலாமா?

என் சித்தப்பாவைக் கேட்டேன், அவர் ராமனுக்கேற்ற லெட்சுமணன்.

ஒருவர் சொத்தை ஒருவர் அபகரிக்கவும், கோர்ட்டுக்குப் போகவும் தயங்காத நாட்டில், அப்படியும் ஓர் அபூர்வ சகோரர்கள்.

ஒரு வரியில் அவர் சொன்னார், ''இனி அவர்கள் என் மக்கள்!'' என்று.

என் சித்தி கொஞ்சம் கோபக்காரி. ஆனாலும் என் சித்தப்பா சர்க்கஸ்காரர். தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே அவளை வைத்திருந்தார்.

''தாயின் சொத்துகளோ நகைகளோ எங்களுக்கு வேண் டாம்'' என்று சொல்லி சீதாவுக்கும், மைதிலிக்கும், அவற் றைக் கொடுத்து சித்தப்பாவின் கையில் அவர்களை ஒப்ப டைத்து விட்டு நாங்கள் சென்னைக்குப் புறப்பட முயற்சி செய்தபோது, வைதேகிக்குப் பிரசவ வேதனை கண்டது.

பாவம், எங்கள் கணவர் மாமியாரின் மரணத்துக்குக் கூட வரமுடியாதபடி தொழில் தகராறிலே சிக்கிக் கொண்டிருந்தார்.

ஊருக்குப் போய்த்தானே பிரசவமாகப் போகிறது என்று நான் எண்ணிக் கொண்டிருந்தபோது, திருக்கடையூரிலே பிரசவம் பார்க்க வேண்டிய நிலை வந்தது.

அதே அறையில் பிரசவம். ''அபிராமி காப்பாற்று'' என்றுதான் நானும் எங்களூர்த் தாய்மார்களும் பிரசவம் பார்த்தோம்.

குழந்தை வெளியில் வருவது சிரமமாக இருந்தது.

அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்குமோ என்று அஞ்சினோம்.

தர்மகர்த்தா மனைவி சிவகாமி அம்மையார் பட்டப் படிப்பில்லாத அநுபவ மருத்துவச்சி.

கையை விட்டே குழந்தையை வெளியில் இழுத்தார்.

ஐயோ! பராசக்தி! மாகாளி! அபிராமி! இதென்ன அடுத்த சோதனை?

குழந்தை இறந்து பிறந்திருந்தது!

''இந்தப் பாவியை மட்டும் அபிராமி ஏன் இப்படிச் சோதிக்கிறாள்?''

இனி இவள் குணத்தில் வேறுபாடு ஏற்படும் என்று நான் நினைத்தாலும் தவறில்லை.

கண்ணை விழித்த அவள், குழந்தை இறந்த செய்தியைக் கேட்டதும் எழுந்து ஓட முயன்றாள்; கிணற்றில் விழ முயன்றாள். ''எனக்கு இனி என்ன இருக்கிறது...?''என்றாள்.

''இனி எனக்குக் குழந்தை பிறக்காது! பிறந்தாலும் நிலைக்காது!'' என்றாள்.

அவளைச் சமாதானப்படுத்துவது காளியின் ஆவேசத்தை நிறுத்துவதைவிடக் கடினமாக இருந்தது.

இது பற்றி எங்கள் கணவருக்கு நான் எதையும் எழுத வில்லை.



ஊரிலே ஒருவர் மாற்றி ஒருவர் வைதேகிக்குத் துணை இருந்தார்கள்.

மைதிலியும், சீதாவும் பக்கத்திலேயே இருந்தார்கள்.

பத்து நாட்கள் அவளைப் பத்திரமாகப் பாதுகாத்த பிறகு நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம்.

மைதிலி அழுதாள்; சீதா அழுதாள்.

''உங்களுக்கு ஒரு குறையும் இல்லை. சொத்து இருக்கிறது. சித்தப்பா இருக்கிறார். திருமணத்திற்கு நாங்கள் வந்து சேருகிறோம்'' என்று சொல்லி, ரயிலுக்குப் புறப்பட்டோம்.

இப்போதும் வழக்கம் போல் மூன்றாம் வகுப்புப் பயணம்.

ரயில் புறப்பட்ட பின்னும் வெளியிலேயே தலையை நீட்டி சித்தப்பாவை நோக்கிக் கைகளை ஆட்டியபோது அவரும் கலங்கிவிட்டார்.

பந்தபாசம் என்பது மனதையும் கடந்து இரத்தத்தில் விளையாடுகிறது.

சித்தப்பா கண்ணுக்கு மறைந்த பின்தான் நானும் வைதேகியும் தலையை உள்ளே இழுத்தோம். ஆசனத்தில் அமர்ந்தோமோ இல்லையோ இருவரும் ஒரே நேரத்தில் எதிர் திசையைப் பார்த்தோம்.

இருவருக்கும் ஒரே ஆச்சர்யம்.

முன்பு வைதேகி பால் கொடுத்த அதே அம்மையார் எதிரிலே உட்கார்ந்திருந்தார்.

''அம்மா! போன வருஷம் எனக்கு நீங்கள்தானே இந்த மூக்குத்தியைக் கொடுத்தது'' என்று கேட்டேன்.

அவர் சிறிதும் சலனமில்லாமல் ''ஆமாம்'' என்றார்.

''இதோ, அதை வாங்கிக் கொள்ளுங்கள்,'' என்று கழற்றப் போனேன்.

''இல்லை இனி அது உனக்குத்தான் சொந்தம்'' என்றார்.

''அப்படியானால் அதற்கான பணத்தையாவது வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றேன்.

''இரண்டுமே வாங்கமாட்டேன்'' என்றார்.

''என்னம்மா, உங்களைப் பார்த்தால் கஷ்டப்படுபவர் போல் தெரிகிறதே?'' என்றேன்.

''உண்மைதான். ஆனால் அந்த மூக்குத்தி இறந்து போன என்னுடைய சகோதரியினுடையது. அவள் மரணத்தறுவாயில், இந்த மூக்குத்தியை விற்கக்கூடாதென்றும், பிள்ளை இல்லாத யாருக்காவது தானம் செய்து விடும்படியும் சொன்னாள். அதனால்தான் உனக்குக் கொடுத்தேன்'' என்றார் அந்த அம்மையார்.

''உங்கள் குழந்தை அதே மாதிரி இன்னும் வயசாகாமல் இருக்கிறதே!'' என்றேன்.

எனக்கும் வயசாவதில்லை. அதற்கும் வயசாவதில்லை!'' என்றார்.

முன்பு போலவே குழந்தை பாலுக்காகத் தாயின் முந்தானையைப் பற்றி இழுத்தது.

அவர் அதை மூடியபடியே வைதேகியைப் பார்த்தார்.

கற்சிலை மாதிரி வைதேகி அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர, கை நீட்டி வாங்கவில்லை. அவள் மார்பில் பால் கசிந்து கொண்டே இருந்தது.

நான் பால் கொடுக்க முடியாதா?



'அவள் பால் கொடுத்தால் அவளுக்காவது ஆறுதல் இருக்குமே' என்றுதான் அவளைப் பார்த்தேன்.

அவள் அசையவில்லை.

உடனே நான் அந்தக் குழந்தையை வாங்கி பால் கொடுத்தேன்.

ரயில் வழக்கம் போல் விழுப்புரத்தில் நின்றது.

வைதேகி எழுந்து பாத்ரூமுக்குப் போனாள்.

அந்த அம்மையார் என்னிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு, ''இந்த மூக்குத்தியை அவளுக்குப் போட்டு விடுங்கள்'' என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று கீழே இறங்கிவிட்டார்.

ரயில் சென்னையில் வந்து நின்றது.

வழக்கம் போலவே எங்கள் கணவர் வரவேற்க காத்திருந்தார்.

வழக்கம் போலவே, ''குழந்தை எங்கே?'' என்றும் கேட்டார்.

அப்போது வைதேகி சொன்ன பதில்தான் என் நெஞ்சில் அடிப்பது போலிருந்தது.

''என் குழந்தைகளுக்காக மட்டும் திருக்கடையூரிலே ஒரு சுடுகாடு இருக்கிறது! இந்தக் குழந்தையும் அங்கேதான் இருக்கிறது!'' என்றாள் அவள்.

என் கணவர் ஒன்றும் பேசவில்லை.

என் கையிலிருந்த பெண் குழந்தையை மட்டும் வாங்கிக் கொண்டார்.

வீட்டிற்கு வந்ததும் எங்கள் கணவர் வைதேகியைப் பார்த்து, ''இந்தா வைதேகி! கடவுள் சிலவற்றைக் கொடுக்கிறார். சிலவற்றை எடுத்துக் கொள்கிறார். அவரவருக்கும் காலம் வரும். அதற்காக ஏன் அப்படி ஆத்திரப்படுகிறாய்?'' என்றார்.

''போதும் போதும். யாரும் என்னைச் சமாதானப் படுத்த வேண்டாம்!'' என்று அவரிடமும் எரிந்து விழுந்தாள்.

''அடியம்மா! இதுவும் உன் குழந்தைதான். இதை நீ வைத்துக் கொண்டாலும் நான் கேட்கப் போகிறேனா? நாம் வேறு வேறு என்றா நீ நினைக்கிறாய்?'' என்றேன் நான்.

''ஒருவரும் எனக்குக் குழந்தை சுவிகாரம் கொடுக்க வேண்டாம். பெற்றுப் பெற்று பலி கொடுக்கவே நான் அவதாரம் எடுத்திருக்கிறேனே, அதற்காகவா உன் குழந்தையைக் கொடுப்பதாகக் கேலி செய்கிறாய்?'' என்றாள் அவள்.

''என்னடி இது? உனக்கு வயதா ஆகி விட்டது? மூன்று வருஷத்துக்கு மேல் நான் எப்படி இருந்தேன் என்று உனக்குத் தெரியாதா? சந்தோஷமான குடும்பத்தில் ஏன் சச்சரவுக்கு விதை போடுகிறாய்?'' என்றேன் நான்.

''நான் யாரோடு சண்டை போடுகிறேன்? உன்னோடா அவரோடா? எல்லாம் என் தலையெழுத்தோடு; என்னைப் படைத்த அந்த பகவானோடு. குழந்தைகள் போனதற்குப் பதில் நான் போயிருந்தால் இந்தக் கவலை இல்லையே?'' என்று உட்கார்ந்தபடி விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

''சரி, இந்த வியாதி, காலத்தில் தீர வேண்டியது. பேசிப் பயனில்லை'' என்று சொல்லிவிட்டு எங்கள் கணவர், மாடிக்குப் போய் விட்டார்.

''வியாதிதான்! கரும வியாதி! யாருடைய கருமமோ என்னைப் பிடித்தாட்டுகிறது!'' என்று வைதேகி முணு முணுத்தாள்.

''அடிபாவி! என்ன வார்த்தை இது? அவர் காதில் விழுந்தால் என்ன ஆகும்? இப்போது பேசிய மாதிரி இனி அவரிடம் எதையும் பேசிவிடாதேயம்மா!'' என்று சொன்னபடி நான் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன்.

என்னையாவது அவள் சமாதானப்படுத்த வேண்டுமே?



இரண்டு குழந்தைகளின் மரணம் எப்படி அவளைக் கல்நெஞ்சக்காரியாக்கி விட்டது.

என் குழந்தை அழுதது; நான் அதைக் கவனிக்க வேண்டுமே?

'இந்த மனக்குமுறல் எங்கே போய் முடியுமோ' என்று நான் கலங்கிக் கொண்டே இருந்த போது குழந்தை மேலும் அழுதது.

''சனியனே! நீயும் செத்துப்போ! அப்போதுதான் இந்த வீட்டில் நிம்மதி இருக்கும்!'' என்று சொல்லிவிட்டு நான் விடுவிடென்று மாடிக்குப் போய் விட்டேன்.

கவலையோடு படுத்திருந்த என் அத்தான் அருகில் போய் அமர்ந்தேன்.

அவர் கண்ணீரைத் துடைத்து விட்டார்.

சிறிது நேரத்தில் குழந்தையின் அழுகை நின்றது தெரிந்தது.

மெதுவாக மாடி ஜன்னலைத் திறந்து பார்த்தேன்.

அங்கே வைதேகி குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'மனித மனம் சலனமடையக் கூடியது' என்று பகவான் கீதையிலே சொன்னாரல்லவா, அதற்கு ஓர் உதாரணம் வைதேகி.

நான் அத்தானிடம் சொன்னேன்:

''இந்த மூக்குத்தியைப் போட்டதால்தான் எனக்கு குழந்தை பிறந்ததாகத் தோன்றுகிறது. இதை வைதேகிக்குப் போட்டு விட்டால், அடுத்த குழந்தைக்கு ஆபத்து இருக்காது என்று'' என்று.

''இதையும் கொடுத்துத் தொலைக்காதே. அதைப் போட்டு உடைத்துவிடுவாள்'' என்றார் அவர்.

''அவள் ஒரு நேரம் பேயாக இருந்தாலும், மறு நேரம் தேவதையாக மாறி விடுவாள்'' என்றேன் நான்.

''சரி, முயற்சி செய்!'' என்றார் அவர்.

நான் கீழ்க்கட்டுக்கு வந்தேன்.

என் குழந்தைக்கு அவள் பால் கொடுத்ததைக் காட்டிக் கொள்ளவும் இல்லை; நான் கேட்கவும் இல்லை.

போய் அவள் பக்கத்தில் உட்கார்ந்தேன். மெதுவாக மூக்குத்தியைக் கழற்றினேன்.

''இதோ பார்! இந்த மூக்குத்தியின் ராசி உனக்குத் தெரியும். இதைப் போட்டுக் கொள். அடுத்த குழந்தைக்கு ஆபத்திருக்காது!'' என்று அவள் கையில் கொடுத்தேன்.

அவள் அதை வாங்கிப் பார்த்தாள், ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

''இதென்ன வரம் கொடுக்கும் மூக்குத்தியா?'' என்றபடி அதைக் கீழே உருட்டிவிட்டாள்.

நான் அதைப் போய் எடுத்தபடியே, ''அடி பாவி! நல்லது கெட்டது தெரியாதபடி உன் புத்தி மாறிவிட்டதே? ஏன் இப்படி நிம்மதி இல்லாமலிருக்கிறாய்? என்னதான் முடிவு சொல்கிறாய்? அதையாவது சொல்லேன்?'' என்றேன்.

''என்ன முடிவு? எனக்கு இனி என்ன இருக்கிறது? மொட்டையடித்துக் கொண்டு சந்நியாசினியாகி எங்காவது அநாதை ஆசிரமத்தில் போய் வாழ்கிறேன்!'' என்றாள் அவள்.

''குழந்தையைப் பறிகொடுத்தவர்களெல்லாம் அநாதை ஆசிரமத்திற்குப் போவதென்றால், தெருவுக்கு ஒரு ஆசிரமம் கட்ட வேண்டியிருக்கும்மா!'' என்றேன்.



''பின் என்ன, அம்மா அப்பாவா இருக்கிறார்கள் நான் போய் அடைக்கலம் புகுவதற்கு?'' என்றாள்.

''ஏண்டி! இந்த வீட்டில் உனக்கென்ன இல்லாமல் போய் விட்டது? கணவரின் அன்பு இல்லையா? வசதியான வாழ்க்கை இல்லையா? குழந்தை பிறந்து சாவதற்கு யார் என்ன பண்ண முடியும்? என்னைவிடப் படித்தவள் என்கிறாய். இந்த விஷயம் கூட உனக்குப் புரியவில்லையே! குடும்பத்துக்குத் தேவை நிம்மதிதான் தாயே, நிம்மதிதான்!'' என்று நான் கையெடுத்துக் கும்பிட்டேன்.

''அக்கா...!'' என்று என் கையைப் பிடித்துக் கொண்டாள் அவள்.

அந்த நேரத்தில் அவள் சமாதானம் அடைந்தாற் போல் தோன்றிற்றே தவிர, அடுத்தடுத்தும் அவள் சரியாக இல்லை.

வைதேகி :

## வாக்கு மூலம் : 7

என்ன சரியாக இல்லை; என் வேதனை எனக்கு. பெறாமலே இருந்து விட்டால் கவலை இல்லை. பெற்றுப் பெற்றுப் பறி கொடுப்பதென்றால் சித்தப்பிரமையே பிடித்து விடாதா? பத்து மாதம் சுமந்து பத்தியம் இருந்ததுதான் மிச்சம்.

எல்லாம் கடவுள் செயல் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் மறக்க முடியவில்லையே!

அயர்ந்து தூங்கும்போது அக்காள் குழந்தை அழுதாலும், அடுத்த வீட்டுக் குழந்தை அழுவதாலும் நினைவு பளிச்சென்று ஓடுகிறதே! நெஞ்சம் நெக்குருகிறதே. அதற்காகக் கொஞ்ச நேரம் அழக்கூடாதா?

எனக்காக அக்கா படும்பாடு எனக்குத் தெரிகிறது. சகிப்புத் தன்மை அவளது சுபாவம். எனக்கு அது வரவில்லையே!

இருந்தாலும் என் ஆதங்கங்களையெல்லாம் மறைத்துக் கொள்ளவே நான் முயற்சித்தேன்.

என் பக்குவக் குறைவை நான் ஒப்புக் கொள்கிறேன்.

நம்முடைய துயரம் நம்மோடு இருக்கட்டும் என்று முடிவு கட்டினேன்.

'காலம் இப்படியே போய்விடாது' என்று அக்கா ஒரு முறை சொன்னதை மனதில் வைத்தேன்.

பிறகு நான் கலகலப்பாக இல்லையே தவிர, கடுமையாகவும் இல்லை.



அக்காள் மட்டும் அடிக்கடி குளிக்கச் சொல்வாள்; சாப்பிடச் சொல்வாள்; 'அத்தானை கவனி' என்பாள்.

இரவு நேரங்களில் குழந்தை அழுதால் கூட தான் எழுந்திருக்காமல், 'நான் என்ன செய்கிறேன்' என்று கவனிப்பாள்.

அவள் தூங்குவது போல் பாசாங்கு செய்கிறாள் என்று தெரிந்தும், நான் எழுந்து பால் கொடுப்பேன்.

அடிக்கடி தன் குழந்தைக்கு நான் பால் கொடுத்தால் என் ஏக்கம் தீர்ந்து விடும் என்று எண்ணியிருப்பாள் போலிருக்கிறது.

நான் பச்சை உடம்பு என்பதால், மேலே போக முடியாது. அதனால் அவளும் என்னோடு கீழ் ஹாலிலேயே படுத்துக் கொள்வாள்.

சில நேரங்களில் இரவு பன்னிரண்டு மணிக்கு, ''ஐயோ, வேண்டாம். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்று அக்காளின் குரல் கேட்கும்.

நான் லேசான விளக்கு வெளிச்சத்தில் தூங்குவது போல் அரைக் கண்ணால் பார்ப்பேன்.

அத்தான் அவளை எழுப்புவார்.

அக்கா அவரை கெஞ்சிக் கெஞ்சி மறுப்பாள்.

எனக்கு அந்த ஏக்கமும் பிடித்துவிடக் கூடாதே என்பதற்காக அதிலும் ஜாக்கிரதையாக இருந்தாள்.

அதன் விளைவு என்ன ஆயிற்று?

சுமார் நான்கு மாதங்களுக்குப் பிறகு அக்கா எனக்குச் சீவிச் சிங்காரித்து, ''அவரைக் கூட்டிக் கொண்டு சினிமாவுக்குப் போய் வா!'' என்றாள்.

முன்பெல்லாம் சினிமாவுக்குப் போனால் மூன்று பேரும் தானே போவோம்; இப்பொழுது ஏன் இப்படி?

ஏதோ எனக்குத் தெரியாமல் அவர்களுக்குள் பேச்சு வார்த்தை நடந்திருக்கும் போலிருக்கிறது.

நான் ஏன் அதைக் கண்டுகொள்ள வேண்டும்?

அக்காதான் அடிக்கடி சொல்வாளே, "ஒரு நல்ல மனைவி, கணவனைப் பொறுத்த வரையில் சில விஷயங்களில் குருடாகவும், சில விஷயங்களில் செவிடாகவும், சில விஷயங்களில் ஊமையாகவும் இருக்க வேண்டும்" என்று.

நான் மாடிக்குப் போனேன். "அத்தான்! அந்த ஆங்கிலப் படத்துக்கு நாம் போய் வரலாமா?" என்று கேட்டேன்.

"அது ஒன்றுதான் குறைச்சல்!" என்றார்.

இவர் எப்போதும் அப்படிச் சொன்னதில்லையே?

"ஏன், என்னோடு தனியாக வரக்கூடாதா?" என்றேன்.

"நான் இனி யாரோடும் வரப்போவதில்லை" என்றார்.

நான் கலங்கிவிட்டேன்.

'ஆண்கள் மனது மாறினால் திருப்புவது கஷ்டம்' என்றாளே, அக்கா.

மெதுவாக அவர் அருகில் போய், "நான் ஏதாவது செய்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

"நான் என்ன பகவானா, பாவமன்னிப்புக் கொடுக்க?" என்றார்.

கொஞ்ச நாட்களாக அவர் யாரோடும் பேசாமல் சாப்பிட்டதையும், உதவிக்கு யாரையும் கூப்பிடாமல் தன் ஆடைகளை அவரே எடுத்துக் கொண்டதையும் நான் கவனித்து வருகிறேன்.

அக்காளும் பகலில் கூட அவரிடம் அதிகம் பேசாமல் இருந்து வந்திருக்கிறாள்.

எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தபோது, எனக்காக ஒதுங்கி ஒதுங்கிப் போயிருக்கிறாள் என்பதையும், அவள் ஒதுங்கி ஒதுங்கிப் போனதால் அவருக்கு என் மீது கோபம் வந்திருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது.



நான் அத்தானின் காலடியில் உட்கார்ந்தேன்.

"இந்தா, இந்தக் கொஞ்சலெல்லாம் வேண்டாம்; எழுந்து போ!" என்றார் அவர்.

இப்படி ஒரு வார்த்தையை அந்த இரண்டரை வருஷ காலத்தில் நாங்கள் கேட்டதே இல்லையே!

நான் அழுது கொண்டே கீழே சென்றேன்.

"ஏண்டி! என்ன நடந்தது?" என்று கேட்டாள் அக்கா.

"ஒன்றுமில்லை. எனக்கு நேரம் நன்றாயில்லை. இனி எனக்கு வாழ்க்கையே இல்லை!" என்று சொல்லிப் போய் படுத்துவிட்டேன்.

அக்கா என் அருகில் வந்து, "சீ பைத்தியம். புருஷன் கோபம் இரவுவரை தான் என்பது உனக்குத் தெரியாதா? நான் போய்ச் சமாதானப்படுத்துகிறேன். நீ சும்மா இரு!" என்று சொல்லிவிட்டு மேலே போனாள்.

அப்படியே படுத்திருக்க என்னால் முடியவில்லை.

ஏதோ அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

மெதுவாக மாடிக்குப் போய் சுவரோரமாக ஒளிந்து கொண்டேன்.

"இதோ பாருங்கள், அவளிடம் என்ன பேசினீர்கள்?" என்று அக்கா கேட்டாள்.

"ஒன்றும் பேசவில்லை; இனியும் பேசப் போவதில்லை" என்றார் அத்தான்.

"நான்தான் சொன்னேனே, 'அவள் குழந்தை ஏக்கத்தில் இருக்கிறாள்; அவள் உடல்நிலை தேறுகிற வரை கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று. நீங்கள் என்னைக் கூப்

பிட்டு நான் வராததற்கு அவள் மீது ஏன் கோபம்? எதையும் நான் தாங்கிக் கொள்வேன்! அவள் தாங்கிக் கொள்வாளா...?'' என்றாள் அக்கா.

''இரண்டு கட்டியும் சந்நியாசியானவன் கதை, என் கதை. இனி இன்னொரு கல்யாணமா செய்ய முடியும்? இல்லை மற்றவர்களைப் போல நானும், பச்சை கண்ட இடமெல்லாம் இச்சை கொண்டு பழக்கப்பட்டவனா? என் கூடப் பழகுகிறவர்களெல்லாம் குடிப்பழக்கம் உள்ளவர்கள். எனக்கு அந்தப் பழக்கமும் கிடையாது. இரவு ஆனால் கூட்டுக்குள் வந்தடையும் புறாப் போல, இரவு. ஒன்பது மணியானால் நான் வீட்டிற்குள் வந்து அடைகிறேன். அவளுக்கு அவள் கவலை; அதற்கு உன் அனுதாபம். என்னை யார் கவனித்தீர்கள்?'' என்றார் அத்தான்.

''இம்மி அளவாவது அவளால் ஒரு சிக்கல் வந்துவிடக் கூடாதென்றுதானே நான் அப்படியெல்லாம் நடந்து கொண்டேன். எது நடக்கக்கூடாது என்பதற்காக நான் அப்படி எல்லாம் நடந்துகொண்டேனோ, அதுவே நடந்துவிட்டது போல் தோன்றுகிறது'' என்றாள் அக்கா.

''இந்த நான்கு மாதத்தில் தண்ணீர் வேண்டும் என்றால் கூட நானேதான் எடுத்துக் குடிக்க வேண்டியிருந்தது. நான் யாருக்கு என்ன குறை வைத்தேன்? அவளுடைய போக்குக்கு நீதான் வளைந்து கொடுக்க வேண்டும். எனக்கென்ன தலையெழுத்து? அன்பு காட்டினால் அவதிதான் மிஞ்சும் என்பது எனக்கும் புரிகிறது. இந்த நான்கு மாதத்தில் இல்லறத்தில் துறவியாக வாழவும் நான் பழகிவிட்டேன். இனி யாரும் என்னோடு பேச வேண்டாம்!'' என்றார் அத்தான்.

''ஐயையோ! அதற்குள் சந்நியாசமா? வாருங்கள் மூவருமே ரிஷிகேசம், ஹரித்துவார், பத்திரிநாத் என்று போய்விடுவோம். சந்நியாசி தனியாகப் போனால் காஷாயம் இரண்டு மாதம் சுத்தமாக இருக்காது'' என்று அக்கா சொன்னதுதான் கேட்டது.



பிறகு என்ன நடந்ததோ தெரியவில்லை.

''இந்தா, என்னைத் தொடாதே! இது சத்தியம்! என் தாய் மீது ஆணை! இந்த சிம்மவாகினி மீது ஆணை! நான் செத்தாலும் என் பிணத்தைக் கூட நீ தொடக் கூடாது'' என்று கத்தினார் அத்தான்.

''ஐயோ! அம்மா! தாயே! மகாகாளி! தலையில் இடி விழுந்த மாதிரி ஒரு வார்த்தையைப் போட்டு விட்டீர்களே!'' என்று கத்தினாள் அக்கா.

நான் துடித்தேன். உள்ளே போகவும் எனக்குப் பயம்; எங்கே எனக்கும் அப்படி ஒரு ஆணையிட்டு விடுவாரோ என்று நடுங்கினேன்.

''ஐயோ, தெய்வமே! சத்தியம் செய்த கணவனைத் தீண்டக் கூடாதென்று தத்துவம் படித்த கிராமப் பெண்ணாயிற்றே நான். என் மொத்த வாழ்க்கையுமே போய் விட்டது. நான் பெரிய தவறு செய்து விட்டேன். அவள் புரியாதவள் என்பதற்காக ஒதுங்கி நிற்கப் போய், வாழ முடியாதவள் என்ற நிலைக்கு ஆளாகி விட்டேன். இந்தச் சத்தியத்துக்கு மாற்றில்லையா? உங்கள் காலில் விழுந்து கும்பிடுகிறேன். கணவனைத் தீண்டி வாழும் வாழ்க்கை எனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பார்த்து வாழ்வதிலேயே நான் பரவசப்படுவேன், ஐயா, உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறேன். அவளிடமும் இப்படி ஒரு ஆணையிட்டு விடாதீர்கள்!'' என்று திக்கினாள்; திணறினாள்; விம்மினாள் அக்கா.

அதற்குமேல் அத்தான் பேசவில்லை. அவரும் அழுவது என் காதுகளுக்குக் கேட்டது.

அக்கா இப்போது அவர் கண்களில் கண்ணீரைத் துடைக்க முடியாது.

என் கைகள் துடித்தன; கால்கள் நகர மறுத்தன.

சிறிய கோபங்கள், 'பெரிய வாழ்க்கையை எப்படிப் பாதித்து விடுகின்றன என்பதற்கு இந்தப் பாவி ஒரு உதாரணமாகி விட்டேன்.

அதன் பின் நான் அங்கே நிற்கவில்லை.

அக்கா வெளியே வருவதற்குள் நான் கீழே வந்துவிட்டேன்.

கீழ் ஹாலில் படுத்துக் கொண்டு பழையபடியும் அழுதேன்.

ஆத்திரப்பட்ட பெண்ணுக்கு அடுத்த வேலை அழுவது தானே!

பின்னாலேயே அக்கா வந்தாள்.

அவள் கண்கள் சிவந்திருந்தன. உதடு துடித்துக் கொண்டிருந்தது.

அவளது குழந்தை குப்புறப்படுத்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

நாங்கள் இருவரும் பால் கொடுக்கும் நிலையில் இல்லை என்பது அதற்கும் தெரியும் போலிருக்கிறது.

நான் தூங்குகிற மாதிரி பாவனை செய்தேன்.

அவள் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, என் தலையைத் தடவிக் கொடுத்தபடி, ''அம்மா, வைதேகி! அம்மா!'' என்று அழுதாள்.

நான் ஒன்றும் தெரியாதவளைப்போல், ''என்னக்கா?'' என்றேன்.

''அம்மா! நீயாவது சந்தோஷமா இரும்மா. 'சண்டிமிரண்டால் காடு கொள்ளாது' என்பார்களே, அது புரிந்துவிட்டதம்மா, புரிந்துவிட்டது! எவ்வளவு இதம் பதமாக நடந்தும் கூட ஒரு சிறு தவறு என் தலையில் இடியாய் விழுந்துவிட்டதம்மா! அம்மா! கண்ணு, வைதேகி! கொஞ்சம் எழுந்து உட்கார்!'' என்றாள்.

நான் கண்ணீரோடு எழுந்து உட்கார்ந்தேன்.



அவள் என் கண்ணீரைத் துடைத்துவிட்டு, தன் கண்ணீரையும் துடைத்துக் கொண்டு, ''இதோ பார், நான் சொல்வதைக் கேள். அத்தானிடம் பதமாக நடந்து கொள்ள வேண்டும். அவ்வப்போது என்ன கேட்டாலும் மறுக்கக் கூடாது. அவருக்கு என்ன பிடிக்கும் என்று உனக்குத் தெரியும். வாய்க்கு ருசியாக சமைத்துப் பரிமாற வேண்டும். தினமும் அவர் வந்தவுடனேயே அலங்காரம் செய்து கொள்ள வேண்டும். அவர் கூப்பிடாவிட்டாலும் அவர் கூடவே போய் இருந்துவிட வேண்டும். குளிக்கும்போது சோப்புத் தேய்த்து விடுவதிலிருந்து கூடவே இருந்து தலை சீவி விடுவது வரை கவனிக்க வேண்டும். அடித்தாலும் உதைத்தாலும் கணவன் தானே! எதிர்த்துப் பேசக்கூடாது. வழக்கம் போல் மாலையில் அவர் வந்தவுடனேயே, நீயே அவர் கோட்டைக் கழற்றிவிட வேண்டும்... '' என்று அவள் தொடர்ந்த போது, ''எதற்காக இதையெல்லாம் சொல்கிறாய்?'' என்றேன்.

''இனி இந்தக் கைகளுக்கு அந்தப் பாக்கியம் கிடையாதே வைதேகி! அதற்காகத்தான் சொல்கிறேன்...!'' என்று அழுதாள்.

''வேறொன்றுமில்லையே அக்கா...!'' என்று நடுங்கிக் கொண்டே கேட்டேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று சொன்னபடி குழந்தையை வாரி எடுத்தாள்; முத்தமிட்டாள். ஏனோ பைத்தியக்காரியைப் போல அந்த நேரத்தில் குழந்தைக்குத் தலை சீவி விட்டாள். பொட்டு வைத்தாள்.

இனி அடுத்த குழந்தை தனக்குப் பிறக்கப் போவதில்லை என்பதால்தான் இப்படிச் செய்கிறாள் என்று நான் நினைத்தேன்.

இரவு யாரும் சாப்பிடவில்லை.

அத்தானைப் பார்த்து, 'சாப்பிடுங்கள்' என்று சொல்லவே எனக்குப் பயமாக இருந்தது.

நள்ளிரவு வரை படுத்துக் கொண்டே அக்கா பேசிக் கொண்டே இருந்தாள்.

பேசினாளா? பிதற்றினாள்!

நாங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போனது, புளியமரத்தடியில் கட்டுச் சோறு சாப்பிட்டது, சிலேட்டை உடைத்து விட்டு நான் அழுதது, அப்பா மூன்று சிலேட்டுகள் வாங்கிக் கொடுத்தது. இருவருக்கும் ஒரே மாதிரி தீபாவளிக்குப் பாவாடை வாங்கியது, ஒரே நேரத்தில் மத்தாப்பூ விழுந்து எரிந்தது, இருவருக்கும் ஒரே நேரத்தில் ஜுரம் அடித்தது, எங்கள் தாத்தா, ஒங்க ரெண்டு பேரையும் நான் தாண்டி கட்டிக்கப் போறேன்'னு சொன்னது, அபிராமி திருவிழாவிலே சாமிக்குச் சாத்திய மாலையை வாங்கி இரண்டு பேரும் பிய்த்துத் தலையில் வைத்துக் கொண்டது, நாள் தவறாமல் காளி கோயிலுக்குப் போனது, அங்கே தேங்காய் உடைத்த போது அளவாக இரட்டை மூடியாக உடைந்தது, இரண்டு பேருமே கார்த்திகை நட்சத்திரத்தில் ருதுவானது —

— அம்மம்மா! 'அவளுக்கு ஏன் அப்போது பழைய ஞாபகங்கள்,' என்று தோன்றவே இல்லை.

அந்த ஞாபகங்கள் மூலம் அளவிட முடியாத பாசத்தையும் நினைவுபடுத்திவிட்டது.

மணி இரண்டு அடித்தபோதுதான் எனக்கு கண்ணைச் சொருகிற்று. அலுத்துப் போய் நான் தூங்கிவிட்டேன்.

காலையில் ''வைதேகி! வைதேகி! வைதேகி!'' என்று அத்தான் அலறுகிற சத்தம் கேட்டது.

திடுக்கிட்டு விழித்தேன். பக்கத்தில் அக்காவைக் காணவில்லை.

பரபரப்போடு அத்தான் மாடியில் இருந்து ஓடி வந்தார்.

## சுரேந்திரன் : வாக்கு மூலம் : 8

ஏன் ஓடி வந்தேன்?

காலையில் நான் கண்விழித்தபோது என் தலைமாட்டில் ஒரு கடிதம் இருந்தது.

தலைமாட்டில் கடிதத்தைப் பார்த்தவுடனேயே பகிரென்றது.

பிரித்துப் படித்தேன்.

''என் தெய்வமே!

உங்களை நான் அதிகம் துன்புறுத்தி விட்டேன். 'வாழ்நாளெல்லாம் உங்கள் கால்களைப் பிடித்துக் கொண்டே யிருக்க வேண்டும்' என்று விரும்பிய கைகளுக்கு அந்தப் பாக்கியம் இல்லாமல் போய் விட்டது. அதை நான் சகித்துக் கொள்வேன்.

ஆனால் வைதேகி, பால் சுரந்தும் கன்றில்லாத பசுவாக வாழ்பவள், அவளும் தன் வாழ்வை இழந்துவிடக் கூடாது.

''நான் இங்கே இருந்தால், என்னைத் தொடாத நீங்கள் அவளையும் தொடப் போவதில்லை. உங்கள் குணம் எனக்குத் தெரியும். நீங்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர். எப்போதாவது ஒரு நேரம்தான் உங்களுக்கு கோபம் வரும். ஆனால் என் மீது உங்களுக்குள்ள அன்பு பசுமையானது. நாங்கள் இருவருமே உங்களோடு உறங்கிப் பழகிவிட்டோம். நான் இங்கே இருக்கும்போதே, என்னை விட்டு விட்டு அவளை அழைக்க நீங்கள் விரும்பமாட்டீர்கள்.

சாதாரண காலத்தில் விரும்பினாலும் இப்படி ஒரு சத்தியம் செய்த பிறபாடு, 'என் மனது புண்படுமே' என்பதற்காக அவளையும் பிரித்தே வைப்பீர்கள்.

அதற்காகத்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன்.

'இவ்வளவு விபரம் தெரிந்த பெண்ணுக்கு இதென்ன பைத்தியக்காரத்தனமான முடிவு?' என்று நீங்கள் நினைக்கக் கூடும்.

இல்லை! ஒருத்தி வாழ முடியாது என்னும் போது, இன்னொருத்தி வாழ்வை அவள் கெடுக்கக் கூடாது என்பதும் உங்களுக்குப் புரியாததல்ல.

காரணம்- அவளை வற்புறுத்தி நான்தான் கொண்டு வந்து சேர்த்தேன்.

''இந்தச் சத்தியம் என்ன மாற்ற முடியாததா? என்பீர்கள். முடியாது!'' நீங்களும் அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறக்கவில்லை. நானும் அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறக்கவில்லை.

நாம் இந்துக்கள் 'வாக்கு வாளைளைவிட வலிமையானது' என்று கருதுகிறவர்கள்.

'வைதேகிக்கு ஒரு வாழ்வு வேண்டுமென்று தான், மகாகாளியே உங்கள் மீது ஆவேசமாக வந்து அந்தச் சத்தியத்தைச் செய்திருக்கிறாள்' என்று கருதுகிறேன்.

இல்லையென்றால், நீங்களா அப்படிச் சொல்வீர்கள்?

என் தெய்வமே! வைதேகி தாயாக இருக்கிறாள். ஆனால் குழந்தையில்லை. என் குழந்தைக்கு இனித் தாயில்லை.

தயவு செய்து நடுக்கமில்லாமல் படியுங்கள். என் குழந்தையை உங்கள் இருவரிடமும் ஒப்படைத்துவிட்டுப் போகிறேன்.

இத்தனைக் காலம் நாம் வாழ்ந்ததுபோல் இராமனும் சீதையும் கூட வாழ்ந்திருக்க முடியாது. அந்த நினைவு ஒன்றே எனக்குப் போதும்.

மறந்தும் கூட இது போன்ற ஒரு சத்தியத்தை வைதேகியிடம் செய்து விடாதீர்கள்.



உங்கள் தலைமாட்டிலேயே என் சிவப்புக்கல் மூக்குத்தியை வைத்திருக்கிறேன்.

அன்று அதை அணிந்து கொள்ள வைதேகி மறுத்தாள்.

இன்று அதை உங்கள் கையாலேயே அவளுக்கு அணிவித்து விடுங்கள்.

உங்கள் பாதங்களைத் தொட்டு வணங்க விரும்பினேன்.

ஆனால் துர்பாக்கியம் பிடித்த இந்தக் கைகளுக்கு அந்தப் பாக்கியம் இல்லை.

மறுபிறப்பை நம்பும் இந்து சமூகத்தில் நாம் பிறந்தவர்களாதலால் நாம் மீண்டும் பிறப்போம்; சேர்ந்து வாழ்வோம்.

உங்கள்
ஜானகி''

— இந்தக் கடிதத்தைக் கண்டுதான் நான் பதறினேன்.

கீழே ஓடி, ''ஜானகி எங்கே? எங்கே?'' என்று நான் தேடினேன்.

வைதேகி துடிதுடித்துப் போய், சுற்று முற்றும் பார்த்த போது, ஜானகி தட்டுப்படவில்லை; அவள் கண்களில் இன்னொரு கடிதம் தட்டுப்பட்டது.

''என் கண்ணே வைதேகி!

இந்தக் கடிதத்தை நீ படிக்கும் போது, உன் மனது திடமாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றிரவு பல விஷயங்களை உனக்குச் சொன்னேன்.

அத்தானை எவ்வளவுக்கெவ்வளவு நிம்மதியாக வைத்துக் கொள்கிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு உன் வாழ்க்கையில் நிம்மதி.

என் குழந்தைக்கு நீ பால் கொடுப்பதைக் கற்பனையில் கண்டபடி, நான் விடை பெறுகிறேன். அத்தானின் தலைமாட்டில் என் சிவப்புக்கல் மூக்குத்தி இருக்கிறது. அதை அலட்சியப்படுத்தாதே.

பள்ளியறையில் உள்ள சிம்மவாகினிக்கு முன்னால் நின்று, அத்தானின் கையால் அதை அணிந்து கொள். அடுத்த வருஷம் பத்தரை மாத்துத் தங்கம் போல் குழந்தை பிறக்கும்.

திருக்கடையூரில் உள்ள உன் குழந்தைகளின் சுடுகாடு — இரண்டு குழிகளோடு மூடப்பட்டு விட்டது. இந்த மூக்குத்தியை அணிந்து கொண்ட பிறகு உனக்குப் பிறக்கப் போகிற குழந்தை தெய்வக் குழந்தையாக இருக்கும்.

அது பெண் குழந்தையானால், மாமியார் பெயர் இடு. ஆண் குழந்தையானால் மாமனார் பெயரை இடு. சும்மா அழாதே.

'பிறந்தவர்கள் இறப்பார்கள், இறந்தவர்கள் பிறப்பார்கள்' என்பது நமது நம்பிக்கை.

இப்படிக்கு
ஒரே ரத்தம்''

— வைதேகியும் அதைப் படித்துவிட்டுத் துடித்தாள்-துவண்டாள்.

நான் எவ்வளவு மடத்தனம் செய்து விட்டேன்?

தினமும் வசைபாடுகிற கணவனாக இருந்தால் மனைவி அதை அலட்சியப்படுத்தி விடுவாள்.

மறந்தும் கூடக் கோபம் கொள்ளாத நான், அப்படி ஒரு வார்த்தையைச் சொல்லும்படி செய்துவிட்டது விதி.

பள்ளியறையில் ஜானகியோடு நான் ஊடல் கொண்டிருக்கிறேன்; அது பத்து நிமிஷத்திற்கு மேல் தாங்கியதில்லை.

'கோபம், பாவம், சண்டாளம்' என்பது உண்மையாகி விட்டது.

பிறகு நான் என்னுடைய வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தி, ஊரெங்கும் தேடச்சொன்னேன்; பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுத்தேன்.



ஒவ்வொரு நாளும் எங்கிருந்தாவது ஒரு நல்ல சேதியை எதிர்பார்த்தேன்.

'காணவில்லை, காணவில்லை' என்றே செய்தி வந்தது.

ஒருநாள் பத்திரிகையில், இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு இளம் பெண்ணின் பிரேதம் கூவம் நதியில் மிதந்ததாகச் செய்தி வந்தது.

நான் போய் விசாரித்தபோது, அது அழுகி விட்டதால் புதைத்து விட்டதாகச் சொன்னார்கள்.

அப்படிப் பல செய்திகள். ஆனால் ஜானகியைப் பற்றி எந்தத் தடையமும் இல்லை.

கூவம் நதியில் மிதந்த சடலத்தைப் பற்றியே எனக்குச் சந்தேகம் அதிகம் இருந்ததால் அந்தச் சடலத்தின் அங்க அடையாளங்களைப் போலீசாரிடம் விசாரித்தேன்.

அவர்கள் சொன்ன செய்தியிலிருந்து 'அது ஜானகிதான்' என்ற முடிவுக்கு வந்தேன்.

ஜானகியின் சுபாவத்தை நான் நன்கு அறிவேன். என்ன முடிவு செய்கிறாளோ அதை நிறைவேற்றி விடுவாள்.

பாவம், வைதேகி! முனிவனின் கோபத்தால் காடே சாம்பலானது போல், என் கோபத்தால் அவளும் அக்காளை இழந்து நான்கு நாட்கள் பட்டினி கிடந்தாள்.

நான் தொழிலை மறந்தேன்; தொழிற்சாலையை மறந்தேன். அவளுக்கு ஆற்றுப்படை பாடுவதையே கடமையாகக் கொண்டேன்.

துன்பம் காலத்தால் தீரக் கூடிய வியாதியாகையால், இரண்டொரு மாதங்களில் அவள் துயரத்திலிருந்து மீட்சி பெற்று விட்டாள். அந்த மீட்சிக்குப் பெருந் துணையாக

இருந்தது. ஜானகியையே உரித்து வைத்தது போலிருந்ததும், என் தாயார் பெயரிட்டதுமான என் பெண் குழந்தையே.

வைதேகி அந்தக் குழந்தைக்குத் தாயாகி விட்டாள்.

ஏற்பட்ட துன்பத்திலும், பரபரப்பிலும் அந்தச் சிவப்புக் கல் மூக்குத்தியை வைதேகிக்கு அணிவிப்பதையே நான் மறந்து போனேன். திடீரென்று ஒருநாள், அதிலும் நவராத்திரி யன்று ஞாபகம் வந்தது.

வைதேகியை நானே குளிக்க வைத்து அலங்காரம் செய்து, என் அறைக்குக் கூட்டிக் கொண்டு போய், சிம்மவாகி னியின் எதிரே நிறுத்தி, அந்தச் சிவப்புக்கல் மூக்குத்தியை அணிவித்து விட்டேன்.

அதைப் போட்டவுடனேயே அவள் முகத்தில் மாறி மாறி ஜானகியின் உருவம் தோன்ற ஆரம்பித்தது. ஜானகியின் குரலே அவளுக்கு வந்து விட்டது; ஜானகியைப் போலவே பேசி னாள். ஜானகியைப் போலவே நடந்து கொள்ளத் தொடங்கி னாள்.

நான் ஒருநாள், ''ஜானகி இருந்து இப்போது உன்னைப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

அதற்கு அவள், ''யார் ஜானகி? நான் தானே ஜானகி! என்னை நன்றாகப் பாருங்கள்!'' என்றாள்.

அன்றிலிருந்து ஜானகியின் புடவைகளையே அவள் எடுத்துக் கட்டிக் கொண்டாள். பள்ளியிலும் ஜானகியைப் போலவே நடந்துக் கொண்டாள்.

பச்சையாகச் சொன்னால் நான் முத்தமிடும்போது தன் நாவினால் என் உதடுகளை வருடுவது ஜானகியின் பழக்கம். அப்படிச் செய்தறியாத வைதேகி இப்போது செய்ய ஆரம்பித் தாள்.



உறவிலிருந்து உணவு வரை எல்லாம் ஜானகியின் பாங்காகவே இருந்தது.

இரண்டு ஸ்தூலங்களும் ஒன்றாக ஐக்கியமாகி விட்டது போல எனக்கொரு எண்ணம் தோன்றிற்று.

கவலைகள் பறந்து விட்டன.

கட்டிலில் படுத்திருக்கும் போது, படுக்கையறை விளக்கு மட்டும்தான் எரியும். அப்போது ஒரு பக்கம் ஜானகியும், மறுபக்கம் வைதேகியும் படுத்திருப்பது போலவே எனக்குத் தெரியும்.

எந்தப் பக்கம் திரும்பிப் படுத்தாலும், பக்கத்தில் ஒருவர் இருப்பதாகவே தோன்றும். 'இது என்ன பிரமை!' என்று என்னால் அறியவே முடியவில்லை.

சுருங்கச் சொன்னால், வைதேகிக்கே இரண்டு வடிவங்க ளும் தெளிவாக அமைந்துவிட்டன.

இந்த நிலையில் வைதேகி கருவுற்றாள்.

முன்பெல்லாம் ஜானகி கருவுற்றால் மாங்காய் அதிகம் சாப்பிடுவாள். வைதேகி கருவுற்றால் சாம்பல் சாப்பிடுவாள்.

ஆனால் இப்போது வைதேகி எவ்வளவு மாங்காய் கிடைத்தாலும் வாங்க ஆரம்பித்தாள்.

நான் ஏதாவது இளமைக் குறும்பில் சேட்டைகள் செய் தால், ஜானகி சிரித்துக் கொண்டே, ''இது ஒரு ஆசையா?'' என்பாள். வைதேகியோ, ''சும்மா இருங்கள்'' என்பாள்.

இப்போது வைதேகியே, ''இது ஒரு ஆசையா?'' என்று கேட்க ஆரம்பித்தாள்.

ஜானகி பேசிய பல விஷயங்கள் வைதேகிக்குத் தெரி யாது. ஆனால் இப்போது எப்படியோ அவளே அவற்றை நினைவு படுத்தினாள்.

(State & Central)

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு அற்புதமான நிம்மதி மட்டும் இருந்தது.

இந்த நிலையில், வைதேகி எட்டு மாதக் கர்ப்பிணி யானாள்.

அவளுக்கு திருக்கடையூர் ராசியில்லை; சென்னையில் இருக்கவும் நான் விரும்பவில்லை.

எங்கள் பெண் குழந்தை பேசத் தொடங்கி விட்டது.

'அப்பா! விர்' என்று அது சொன்னால் ஏதோ பிளேனில் போக வேண்டும் என்று அர்த்தம். 'சக்சக்' என்று சொன்னால் ரயிலில் போக வேண்டும் என்று அர்த்தம்.

நாங்கள் இருவரும் குழந்தையைக் கேட்டோம். அது 'சக்சக்' என்றது.

'ஊட்டிக்குப் போகலாம்' என்று முடிவு கட்டினோம்.

என் அம்மாவிடம் இதுபற்றி நான் சொன்னேன். அம்மா கண்கலங்கி விட்டார்கள்.

''அந்தப் புண்ணியவதியின் சேலைகளையும், அவள் பயன்படுத்திய பொருள்களையும் வைத்துப் படையல் செய்து விட்டுப் பின்னர் புறப்படுங்கள்'' என்றாள்.

அப்படியே ஒரு படையல் நடத்தினோம்.

ஜானகியின் படத்தைப் பெரிய அளவில் செய்து, அதன் கீழே அவளது புடவைகளை வைத்துப் படையல் நடத்திக் கொண்டிருந்த போது, எங்கள் பெண் குழந்தை அந்தப் படத்தைப் பார்த்து, 'சாமி! சாமி!' என்று கையைத் தட்டிற்று.

என்ன நினைத்ததோ, அந்தப் படத்திற்குப் போட்டிருந்த மல்லிகைப் பூவை எடுத்து வந்து வைதேகிக்குக் கொடுத்தது.



வைதேகி அதைத் தலையில் அணிந்து கொண்டாள். நாங்கள் ஊட்டிக்குப் புறப்பட்டோம்!

''ரயிலில் சென்றால், வசதியாகச் செல்லலாமே...!'' என்றேன் நான்.

வைதேகியோ, ''காரிலே சென்றால் எல்லா ஊர்களையும் பார்த்துக் கொண்டே செல்லலாமே...!'' என்றாள்.

என்னிடம் நான்கு கார்கள் உண்டு. அதிலே கடல் போன்ற ஒரு காரை எடுத்துக் கொண்டு, வேண்டிய சாமான்க ளையும் எடுத்துக் கொண்டு, ஒரு சமையற்காரனையும் அழைத்துக் கொண்டு அவளும், நானும் பயணம் செய்தோம்.

போய்க் கொண்டிருக்கும் போதே வைதேகி சொன்னாள்: ''அத்தான், இந்தப் பிரசவத்தில் இறப்பதென்றால் குழந்தை இறக்காது. எனக்கென்னவோ நான் தான் இறப்பேனென்று தோன்றுகிறது'' என்று.

''சீ! பைத்தியம்! என்ன இது அமங்கலம்! நீ இறந்தால் என் கதையும் அவ்வளவுதான்'' என்றேன் நான்.

''ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள். ஒரு சத்தியம் செய்து கொடுங்கள், நான் சொல்வது போல் நடப்பதாக'' என்றாள்.

ஜானகி கேட்பது போலவே, 'என் தலையில் அடியுங் கள்!' என்றாள்.

எனக்கு பயம் வந்துவிட்டது.

''விஷயத்தைச் சொன்னால் தான்!'' என்றேன்.

''தலையில் அடியுங்களேன்...'' என்றாள்.

'' நீ சொல்'' என்றேன்.

''நான் இறந்து போனால், நீங்கள் இந்தக் குழந்தைகளுக் காவது என் தங்கை சீதையை கட்டிக் கொள்ள வேண்டும்!'' என்றாள்.

''ஐயோ! இப்படியெல்லாம் பேசாதே! இனி ஒரு மரணத்தை என்னால் தாங்க முடியாது. போவதென்றால் இருவரும் போய் விடுவோம்,'' என்றேன் நான்.

அவள் என் முகத்தை பார்த்தபடி என் தோளிலே சாய்ந்தாள்.

''எங்கள் குடும்பம் செய்த பூஜாபலன்தான் உங்களை எங்கள் கண்களில் காட்டிற்று,'' என்றாள் வைதேகி.

நிறை கர்ப்பிணியல்லவா!

வழியில் எங்கே எதைக் கண்டாலும் அது வேண்டும் என்பாள்.

எல்லாம் என்ன, இளநீர், முறுக்கு, கடலை உருண்டை — வாங்கிக் கொடுத்துக் கொண்டே போனேன்.

ஊட்டியிலே எங்கள் வீட்டில் ஒரு காவற்காரக் குடும்பம் உண்டு. அவுட் ஹவுஸில் அது குடியிருந்தது.

எங்கள் கார் உள்ளே நுழைந்தபோது காவற்காரன் மனைவி, வீட்டின் முன் பகுதியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

எங்களைக் கண்டதும், ''ஜானகி! ஜானகி!'' என்று அழைத்தாள்.

எனக்கு மெய் சிலிர்த்தது.

''ஐயா வந்தாச்சு, வா, வா!'' என்றாள்.

ஒரு பத்து வயதுச் சிறுமி ஓடி வந்தாள்.



அவள் காவற்காரனின் மகளாம்!

நானும் வைதேகியும் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தோம்.

ஜானகி உயிரோடிருக்கும் போது ஒரு சீசனுக்குக் கூட நாங்கள் அங்கே வந்ததில்லை.

என் தாயார் அங்கே ஒரு பெரிய பூஜை அறை கட்டியிருந்தார்கள்.

காவற்காரன் மனைவிதான் அந்த அறையைத் தினமும் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

நான் அந்த அறையைப் பார்த்தபோது தினமும் யாரோ பூஜை செய்வதற்கான அடையாளங்கள் இருந்தன.

நான் காவற்காரரின் மனைவியைப் பார்த்து, ''என்ன இது!'' என்று கேட்டேன்.

''யாரோ ஒரு அம்மா, பாவம்! தினமும் சாயங்காலம் ஆறு மணிக்கு மேல் வருவார்கள். பூஜை அறையை மட்டும் திறக்கச் சொல்லி, சாமி கும்பிட்டு விட்டுப் போவார்கள்'' என்றாள் அவள்.

நான் வைதேகியிடம், ''பாவம்! கோவிலுக்குள் நுழைய முடியாத ஜாதியாக இருக்கும்'' என்று சொன்னேன்.

மறுநாள் இருவரும் நீலகிரியின் இயற்கை அழகை ரசித்துக் கொண்டு வந்தோம்.

திடீரென்று, ''அடி வயிறு வலிக்கிறது,'' என்றாள் வைதேகி.

''எட்டு மாதம் தானே இருக்கும்!'' என்றேன் நான்.

''ஒருவேளை நாட்கணக்குத் தப்பாக இருக்கும்...'' என்றாள் அவள் முனகலோடு.

''காரை நேரே பிரசவ ஆஸ்பத்திரிக்கு விடு...'' என்றேன்.

ஊட்டியில் ஒரு சிறிய அழகான பிரசவ ஆஸ்பத்திரி.

மொத்தம் பன்னிரண்டு படுக்கைகளே அங்கே உள்ளன. அதை ஒரு லேடி டாக்டர் நடத்தி வந்தார். அவர் பெயர் சங்கீதா.

நல்ல வேளையாக நாங்கள் போன நேரத்தில் அங்கே டாக்டர் இருந்தார்.

ஏதோ மாத்திரை கொடுத்தார்.

''இன்னும் நான்கு நாட்களில் பிரசவமாகும். இங்கே இருப்பதானால் இருங்கள்; அந்த நேரத்தில் வருவதானால் வாருங்கள்'' என்றார்.

வைதேகியைக் கேட்டேன். ''வீட்டுக்கே போய் விடுவோம்,'' என்றாள்.

திரும்பிப் போகும்போது, ''குழந்தையையும் கொண்டு வந்திருக்கலாம். உங்கள் அம்மாதான் விடவில்லை'' என்றாள் வைதேகி.

''அம்மாவுக்குத் தேவையே குழந்தைதானே... அதையும் பறித்துக் கொண்டு வந்தால் என்னாவது?'' என்றேன் நான்.

வீட்டுக்குப் போனதும் வைதேகி என்னைத் தனியாகக் கூப்பிட்டு, ''இங்கே தொட்டுப் பாருங்கள்'' என்று வயிற்றைக் காட்டினாள்.

தொட்டுப் பார்த்தேன்.

''குழந்தை உதைக்கிறது இல்லையா?'' என்றாள்.

''உதைக்கவில்லை; குதிக்கிறது!'' என்றேன் நான்.

''குழந்தை உயிரோடு இருக்கிறது, இல்லையா?''



''அட பைத்தியமே! ஒரு குழந்தை அப்படியென்றால், எல்லாக் குழந்தையுமா அப்படி இருக்கும்?'' என்றேன் நான்.

''எனக்கென்னவோ பயமா இருக்கிறது,'' என்றாள் அவள்.

''ஒன்றும் பயப்படாதே! எனக்கு நிச்சயமாகத் தெரியும்; இதுவும் பெண் குழந்தைதான்!'' என்றேன் நான்.

''உங்களுக்கு ஏன் இந்தக் கெட்ட எண்ணம்...!'' என்றாள் அவள்.

''ஜானகிதானே வந்து பிறக்கப் போகிறாள்...!''

''சரி சரி! ஆமாம், ஆமாம்,'' என்றாள் அவள்.

அன்று இரவு நான் வைதேகியின் அருகில் படுத்துக் கொண்டு, அவள் வயிற்றைத் தடவிக் கொடுத்து, ''கண்ணே ஜானகி தூங்கு'' என்று தாலாட்டுப் பாடினேன்.

வைதேகியின் ஒரு கண்ணில் இருந்து துன்பக் கண்ணீரும், மறு கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீரும் வருவதைப் பார்த்தேன்.

நாசி அருகே வழியும் கண்ணீர் துன்பக் கண்ணீர்; செவி அருகே வழியும் கண்ணீர் ஆனந்தக் கண்ணீர்; இல்லையா?

நீலகிரி மலையின் உச்சியை எல்லாம் அவளுக்குக் கொண்டுபோய்க் காட்டினேன்.

மூன்றாவது நாள் அவளுக்கு உண்மையிலேயே பிரசவ வலி எடுத்து விட்டது.

அவள் மாறி மாறி, 'காளி ஆத்தா! மகமாயி! அபிராமி!' என்றே சொல்லிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் இருந்து புறப்படும் போதும், வெளியில் வந்த போதும், காவற்காரன் மனைவி, ''ஜானகி! ஜானகி!'' அழைத்துக் கொண்டே இருந்தாள்.

'சந்தேகமே இல்லை; இது பெண் குழந்தைதான்' என்று நான் தீர்மானித்தேன்.

மருத்துவ விடுதியில் வைதேகியைச் சேர்த்தபோது, மாலை மணி ஐந்து.

அவளைப் படுக்கையில் கொண்டு கிடத்தும்போது, அவளின் மூக்குத்தி ஒளி என் கண்களைப் பறித்தது.

'ஜானகியின் ஆன்மா குழந்தையின் உடலுக்குள் புகுந்து கொண்டிருக்கிறது' என்று நான் உறுதி செய்து கொண்டு விட்டேன்.

குழந்தை பெண் குழந்தை; உயிரோடு பிறக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

நம்பிக்கை! ஒரு இந்துவின் ஜீவனில் அதுதானே அடங்கி இருக்கிறது.

லேடி டாக்டர் சோதித்துப் பார்த்து விட்டு, ''இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்தான் குழந்தை பிறக்கும்'' என்றார்.

என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே டாக்டருக்கு சிறிது மயக்கம் வந்தது.

தனக்குப் பக்கத்தில் நின்ற நர்ஸைப் பார்த்து, ''எனக்கு என்னமோ போலிருக்கிறது, நான் வீட்டுக்குப் போகிறேன். வலி எடுக்கும் போது டெலிபோன் செய்'' என்று சொல்லி விட்டு உடனே புறப்பட்டுப் போய் விட்டார்.

'ஈஸ்வரா! இது என்ன சோதனை?' என்று நான் நினைத்துக் கொண்டேன்.



வலி எடுக்கும் வரை வைதேகியின் பக்கத்தில் இருப்பதற்கு நர்சுகளின் அனுமதியைப் பெற்றுக் கொண்டேன். அவள் அருகிலேயே இருந்தேன்.

அந்த லேடி டாக்டர் கெட்டிக்கார டாக்டர்தான் போலிருக்கிறது.

சரியாக இரவு மணி பன்னிரண்டு அடித்த போது, வைதேகிக்கு வலி தோன்ற ஆரம்பித்தது.

உடனே ஒரு நர்ஸ் லேடி டாக்டருக்கு டெலிபோன் செய்தாள். ஆனால் அங்கிருந்து வந்த பதிலோ...?

டாக்டருக்கு நூற்றிமூன்று டிகிரி ஜுரம் என்றும், எழுந்திருக்கவே முடியாதென்றும், லீவில் இருக்கும் வேதவதி என்ற தலைமை நர்ஸை உடனே வரவழைத்துக் கொள்ளும்படியும் லேடி டாக்டரின் கணவர் கூறினார்.

''அந்த வேதவதியின் வீடு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டேன்.

ஒரு நர்ஸ் என் கூடவே வந்தாள்.

குன்னூர் பாதையில் ஒரு சரிவில் மரத்தாலான வீடுகளில் ஒன்றின் முன் காரைக் கொண்டு போய் நிறுத்த வைத்தாள் நர்ஸ்.

கதவைத் தட்டினாள். ஒரு அம்மையார் கதவைத் திறந்தார். மிக மிக மங்கலான வெளிச்சத்தில் யாரென்றே தெரியவில்லை.

இருவரும் பின் ஸீட்டில் ஏறினார்கள்.

நானே காரை ஓட்டினேன்; கார் பறந்தது.

மருத்துவமனைக்கு வந்ததும் பின்னால் இருந்தவர்கள் அவசர அவசரமாக இறங்கி உள்ளே சென்று விட்டார்கள். அப்போதும் நான் அவர்களைக் கவனிக்கவில்லை.

உள்ளே இருந்து கொஞ்ச நேரத்தில் நைட் டூட்டி நர்ஸ் வெளியில் வந்து, வைதேகி மயங்கிக் கிடப்பதாகவும் இன்னும் பத்து நிமிஷத்தில் குழந்தை பிறந்துவிடும் என்றும் சொன்னாள்.

ஒன்று... இரண்டு... மூன்று... பத்தாவது நிமிஷம் வீலென்ற சப்தம் கேட்டது. கூர்ந்து கேட்டேன்! பெண் குழந்தையின் குரலேதான்!

''ஆ ! ஜானகி பிறந்து விட்டாள்! ஜானகி பிறந்து விட்டாள்-'' என்று நான் என்னையறியாமல் பேசினேன்.

தலைமை நர்ஸ் கதவைத் திறந்து வெளியில் வந்து, ''பெண் குழந்தை!'' என்றார்.

''மகிழ்ச்சி!'' என்று சொல்ல வாயெடுத்தேன்; வாய் அப்படியே நின்றது; கண்கள் நிலைத்து நின்றன.

''ஜானகி...!'' என்று கத்தினேன்.

ஆம், அங்கே தலைமை நர்ஸாக நின்றது என் ஜானகியே தான்!

''அம்மா ஜானகி!'' என்று நான் அவளை நெருங்கினேன்.

''உஸ்! என்னைத் தொடாதீர்கள்; ஆணை! கொஞ்சம் வாருங்கள்'' என்று அடுத்த அறைக்குக் கூட்டிக் கொண்டு போனாள்.

''என்னை நீங்கள் நினைக்கக் கூடாது; பார்க்கக் கூடாது; பேசக் கூடாது; தொடக் கூடாது நான்தான் வைதேகி; வைதேகிதான் நான். நடந்தவை எல்லாம் கனவுகளே! என்னை மறந்து விடுங்கள்.

வைதேகிக்கு இரண்டு குழந்தைகள். ஸ்தூலத்தில் என்ன இருக்கிறது. இன்னும் 'அவளுக்கு மூன்று குழந்தைகள் பிறக்கும். அந்த மூன்றும் ஆண் குழந்தைகளாக இருக்கும். நீங்கள் எப்போது விரும்பினாலும் அவளைப் பார்த்து, 'ஜானகி' என்றழைத்தால், அவள் ஜானகியாக வருவாள். 'வைதேகி' என்றழைத்தால் வைதேகியாக வருவாள். அந்தச் சிவப்புக்கல் மூக்குத்தியை மட்டும் அவள் குளிக்கும் போது கூடக் கழற்றக் கூடாது'' என்று கூறிவிட்டு, 'போகிறேன்' என்று சொல்லாமலேயே அவள் வெளியேறினாள்.



நான் 'ஜானகி' என்று கதறினேன். பின்னாலேயே நடந்து வந்தேன்.

அதற்குள் மயக்கம் தெளிந்த வைதேகி, நர்ஸ்கள் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் தள்ளாடித் தள்ளாடி எழுந்து உட்கார்ந்தாள்.

ஜன்னல் கதவைத் திறந்து அவளைப் பார்த்த ஜானகி,

''நீ சௌக்கியமா இரும்மா! நீ எப்போது அழைத்தாலும் நான் வருவேன்'' என்று சொல்லி விட்டு ஓடினாள்.

நானும், ''ஜானகி! ஜானகி!'' என்று அழைத்தபடி பின்னாலேயே ஓடினேன்.

பழைய மர வீட்டுக்குள்ளேயே அவள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

நான் கதவை ஓங்கித் தள்ளி உள்ளே நுழைந்தேன்.

''ஜானகி! ஜானகி!'' என்று அங்கேயும் தேடினேன்.

மறைவுத் தட்டியின் பின்னாலிருந்து ஒரு கைக் குழந்தையோடு நடுத்தர வயது அம்மையார் வந்தார்.

''இங்கே ஜானகி என்று யாரும் இல்லை!'' என்றார்.

''நீங்கள் யார்?'' என்றேன்.

''நான் யார் என்று தான் உலகம் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறது'' என்றார்.

''சரி. ஏதோ பைத்தியம்'' என்று நான் முடிவு கட்டித் திரும்பும் போது அந்த அம்மையார் என்னைப் பார்த்து, ''வைதேகியின் குழந்தைக்கு 'ஜானகி' என்று பெயர் வைத்து விடு!'' என்றார்.

நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்த அம்மையார் அங்கே இல்லை. ஆனால் வைதேகி அணிந்திருக்கும் சிவப்புக்கல் மூக்குத்தியின் ஜோதி மட்டும் அங்கே மின்னிக் கொண்டிருந்தது.

★

CPL 693801

P:112
S.7
15/7/10

Connemara (State & Central) Library
15 JUL 2010
Received
Chennai

தமிழன்
9003124138
99442
9994029268
English class